- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மேம்பட்ட இலகுரக ஹெலிகாப்டரான MK – III என்ற விமானமானது அந்தமானின் பிளேயர் துறைமுகத்தில் ஐஎன்எஸ் உட்க்ரோஷ் கப்பலில் அதிகாரப் பூர்வமாக படையில் இணைக்கப்பட்டது.
- இது இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்டதாகும்.
- இந்த ஹெலிகாப்டரானது, பாதுகாப்புச் சேவைகள், குறிப்பாக உயரமான இடங்களில் நடைபெறும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதற்குப் பொருத்தமானதாகும்.

## கோடைக்கால பிரச்சாரத்திற்கான தேசிய வேளாண் மாநாடு

- மத்திய வேளாண் அமைச்சர் சமீபத்தில், கோடைக்காலப் பிரச்சாரத்திற்கான 4வது தேசிய வேளாண் மாநாட்டில் தலைமையேற்று உரையாற்றினார்.
- இந்த மாநாடு சையத் மாநாடு எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்த மாநாடானது கோடைக்காலப் பயிர்கள் குறித்த ஈடுபாட்டினைச் செலுத்துகிறது.
- இந்த மாநாட்டில் பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துகளின் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

## மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி – இந்தியா

- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியானது 1.67 பில்லியன் டாலர்களை எட்டியது.
- 2020 ஆம் ஆண்டில் 1.25 பில்லியன் டாலராக இருந்த ஏற்றுமதி மதிப்புடன் ஒப்பிடுகையில் இது 33.99% வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் மின்னணுத் துறையில் ஏற்றுமதியின் வளர்ச்சி 49% ஆக பதிவாகியது.
- 2020 ஆம் ஆண்டில் 7.4 பில்லியன் டாலராக இருந்த ஏற்றுமதி மதிப்பை விட 11.0 பில்லியன் டாலரை எட்டுவதற்கு இது வழி வகுத்தது.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில் அதிக ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்பட்ட நாடுகள்:
  - அமெரிக்கா (18%)
  - ஐக்கிய அரபு அமீரகம் (16.6%)
  - சீனா (7.6%)
- இந்தியாவின் மின்னணுப் பொருள்கள் ஏற்றுமதியில் கைபேசிகளே ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- 2020-21 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியின் மதிப்பு 11.11 பில்லியன் டாலராகும்.

## பண்டிட் ஜஸ்ராஜ் கலாச்சார அறக்கட்டளை



- மறைந்த இந்திய செவ்வியல் பாடகர் பண்டிட் ஜஸ்ராஜ் அவர்களின் 92வது பிறந்த நாளைக் குறிக்கும் விதமாக பண்டிட் ஜஸ்ராஜ் கலாச்சார அறக்கட்டளையானது தொடங்கப் பட்டது.
- இந்த அறக்கட்டளையினை பண்டிட் ஜஸ்ராஜ் அவர்களின் மகன் சாராங் தேவ் பண்டிட் மற்றும் அவரது மகள் துர்கா ஜஸ்ராஜ் ஆகியோரால் நிறுவப்பட்டுள்ளது.
- இந்தியாவின் தேசியப் பாரம்பரியம், கலை மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல், பத்திரப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் வளப்படுத்துதல் என்ற நோக்கத்துடன் இந்த அறக்கட்டளையானது தொடங்கப்பட்டது.

## இந்தியாவில் மரண தண்டனை பற்றிய அறிக்கை

- 2021 ஆம் ஆண்டின் இறுதியில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 488 என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இந்த எண்ணிக்கையானது 17 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாக இருந்தது.
- 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு, 2021 ஆம் ஆண்டில் தான் அதிக எண்ணிக்கையிலான கைதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- இந்த எண்ணிக்கையானது 2020 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 21% அதிகரித்துள்ளது.
- 2004 ஆம் ஆண்டில் 563 ஆக இருந்த இதன் எண்ணிக்கையானது தற்போது அதிக அளவிலான மரண தண்டனை எண்ணிக்கையாக உள்ளது.




## FICCI உடன் மெட்டா இணைவு

- சமூக ஊடகப் பெரு நிறுவனமான மெட்டா, இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு என்ற தொழில் அமைப்போடுக் கூட்டு சேர்ந்துள்ளது.
- இது இந்தியா முழுவதிலும் பெண்கள் தலைமையிலான ஐந்து லட்சம் சிறுகுறு வணிகங்களை ஆதரிப்பதற்கானதாகும்.
- மெட்டா நிறுவனமானது, இந்த முயற்சியை FICCI அமைப்பின் 'Empowering the Greater 50%' என்ற ஒரு முன்னெடுப்புடன் கூட்டு சேர்ந்து, அதன் #SheMeansBusiness திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும்.
- இம்முயற்சி பெண்களுக்கு ஆதரவான ஒரு சூழல் அமைப்பை உருவாக்கி, நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு பங்களிப்பவர்களாக மாறுவதற்காக வேண்டி அவர்களுக்கு ஊக்கமளிக்கும்.

## NIPER ஆராய்ச்சித் தளம்

- NIPER என்பதன் விரிவாக்கம் தேசிய மருந்துக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NIPER) என்பதாகும்.
- மருந்துத் துறையில் கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக ரசாயன அமைச்சகம் சமீபத்தில் NIPER தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் தங்களுக்கு ஏற்றப் பொருத்தமான நிறுவனங்களைத் தொடர்பு கொள்வதில் இந்தத் தளமானது அவர்களுக்கு உதவும்.
- இது தொழில் மற்றும் கல்வித்துறை ஆகியவற்றிற்கு இடையிலான ஒத்துழைப்புக்கு உதவும்.
- மேலும், இந்தத் தளமானது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குப் பெரிதும் பயனளிக்கும்.




## ஸ்வச்சதா புத்தாக்க நிறுவன சவால்

- கழிவு மேலாண்மையில் புதுமைகளை உருவாக்கிட ஸ்வச்சதா புத்தாக்க நிறுவன சவால் என்பது தொடங்கப்பட்டது.
- இது ஏஜென்ஸ் ஃபிரான்சைசஸ் டி டெவலப்மென்ட் (AFD - Agence Francaise de Developpment) மற்றும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை ஆகியவற்றால் தொடங்கப் பட்டது.

- AFD ஒரு பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒரு அரசு நிதி நிறுவனம் ஆகும்.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் மேற்பார்வையின் கீழ் இந்த சவால் மேற்கொள்ளப்பட உள்ளது.




## தேசிய மகளிர் ஆணையத்தின் 30வது நிறுவன தினம்




- 2022 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதியன்று தேசிய மகளிர் ஆணையத்தின் 30வது நிறுவன தின நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் உரையாற்றினார்.
- பல்வேறு துறைகளில் பெண்களின் சாதனைகளைக் கொண்டாடும் வகையில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்ச்சியின் கருத்துரு 'She The Change Maker' என்பதாகும்.
- தேசிய மகளிர் ஆணையம் என்பது இந்திய அரசின் சட்டப்பூர்வமான அமைப்பாகும்.
- 1990 ஆம் ஆண்டு தேசிய மகளிர் ஆணையச் சட்டத்தின் கீழ், 1992 ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று இந்த ஆணையமானது உருவாக்கப்பட்டது.

## இந்தியாவின் முதல் புவியியல் பூங்கா

- இந்தியாவின் முதல் புவியியல் பூங்காவானது, மத்திய பிரதேசத்தின் ஜபல்பூரில் உள்ள லாம்ஹெட்டா எனுமிடத்தில் நிறுவப்பட உள்ளது.
- இந்தப் பூங்காவிற்கு சுரங்க அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்தியப் புவியியல் ஆய்வு மையம் ஒப்புதல் அளித்துள்ளது.

- ❖ புவியியல் பூங்கா என்பது, புவியியல் பாரம்பரியத்தின் பாதுகாப்பையும் பயன்பாட்டையும் நிலையான முறையில் மேம்படுத்தச் செய்யும் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும்.
- ❖ மேலும், இது அங்கு வாழும் மக்களின் பொருளாதார நல்வாழ்வையும் மேம்படுத்தச் செய்கிறது.




## மத்திய நிதிநிலை அறிக்கை 2022-2023 - சிறப்பம்சங்கள்

- ❖ 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 அன்று, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.
- ❖ இது இந்தியாவின் இரண்டாவது காகிதமற்ற நிதிநிலை அறிக்கையாகும்.

***சிறப்பம்சங்கள்***

- ❖ பிளாக்செயின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எண்ணிம (டிஜிட்டல்) நாணயம் வெளியிடப்பட உள்ளது.
- ❖ இ-பாஸ்போர்ட் (இணைய வழியிலான கடவுச் சீட்டு) வழங்குதல்.
- ❖ தேசிய தொலைத்தொடர்பு மனநலத் திட்டம் தொடங்கப்பட உள்ளது.
- ❖ சுழிய அளவிலான புதைபடிவ எரிபொருள் கொள்கை அறிமுகப்படுத்தப்படும்.
- ❖ சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டம் கொண்டு வரப்படும்.
- ❖ அரசின் ஆதரவு பெற்ற பசுமைப் பத்திரங்கள் வெளியிடப்பட உள்ளன.
- ❖ இந்தியாவின் வளர்ச்சி: 9.2% என மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ உள்நாட்டு எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியைக் குறைப்பதற்காகவும் வேண்டி எண்ணெய் வித்துக்களுக்கான திட்டம் தொடங்கப் படும்.

- ❖ பிரதான் மந்திரி கதி சக்தி முதன்மைத் திட்டம் 25,000 கி.மீ. வரை விரிவுபடுத்தப்பட உள்ளது.
- ❖ 400 புதிய வந்தே பாரத் ரயில்கள் தொடங்கப்பட உள்ளன
- ❖ மத்திய, மாநில அரசு ஊழியர்களின் வரி விலக்கு வரம்பு 10 சதவீதத்தில் இருந்து 14 சதவீதமாக உயர்த்தப்பட உள்ளது.




## இந்தியாவில் புதிய தொழுநோய்ப் பாதிப்புகள் 2020-2021

- ❖ 2005 ஆம் ஆண்டில் இந்தியா "தொழுநோய் இல்லாதது" என்று அறிவிக்கப்பட்டாலும், உலகின் புதிய தொழுநோய்ப் பாதிப்பில் 60 சதவிகிதப் பங்கினை இந்தியா கொண்டு உள்ளது.
- ❖ தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் தரவுகளின்படி, பீகார், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், ஒடிசா, மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் ஆகியவை புதிய தொழுநோய்ப் பாதிப்பில் 76 சதவீதப் பங்களிப்பைக் கொண்டுள்ளன.
- ❖ தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 80 சதவீதப் பாதிப்புகள் இந்தியாவில் பதிவாகி இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## SeHAT திட்டத்தின் கீழ் மருந்துகளை வீட்டிற்கே சென்று விநியோகம் செய்தல்

- ❖ பாதுகாப்புத் துறை அமைச்சகமானது, 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில், அனைத்து ஆயுதப் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இணைய வழியிலான சுகாதார உதவிகள் மற்றும் தொலைத் தொடர்பு கலந்தாய்வு சேவைகளை வழங்குதல் (SeHAT - Social Endeavor for Health and Telemedicine) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

- இந்த முயற்சியில் மேலும் கூடுதலாக, SeHAT திட்டத்தின் கீழ் ஆலோசனை பெற விரும்பும் நோயாளிகளுக்கு மருந்துகளை வீட்டிற்கே சென்று விநியோகம் செய்தல் அல்லது மருந்துகளை சுயமாக எடுத்துச் செல்லுதல் போன்ற வசதிகள் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 முதல் தொடங்கப்பட்டு உள்ளன.




## வனப்பரவல் அதிகரிப்புப் பகுதி - இந்தியா

- காடுகளின் பரப்பினை அதிகரித்த வகையில் இந்தியா உலக அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- 2010 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டிற்கும் 2,66,000 ஹெக்டேர் அளவிலான காடுகள் உருவாகியுள்ளன.
- பொருளாதார விவகாரங்கள் துறையினால் அண்மையில் வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் இந்த தகவலானது தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்தப் புவியியல் பகுதியில் 24% காடுகளால் சூழப்பட்டுள்ளது.
- உலகில் உள்ள காடுகளில் இந்தியாவின் காடுகள் 2% ஆகும்.
- இந்தக் கணக்கெடுப்பின் படி, பிரேசில், காங்கோ, பெரு மற்றும் ரஷ்யா ஆகியவை அதிக பட்ச காடுகளைக் கொண்ட நாடுகள் ஆகும்.
- இந்தியாவிலேயே மத்தியப் பிரதேசம் தான் அதிக காடுகளைக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து அருணாச்சலப் பிரதேசம் மாநிலம் உள்ளது.
- காடுகளின் அதிகபட்ச விகிதம், அதாவது ஒரு மாநிலத்தின் புவியியல் பகுதியுடன் ஒப்பிடும் போது அதிக வனப்பரவலைக் கொண்ட பகுதிகள் பின்வருமாறு
  - மிசோரம்: 85%
  - அருணாச்சலப் பிரதேசம்: 79%
  - மேகாலயா: 76%

## ஃபார்மோசா பத்திர வெளியீடு - பாரத் ஸ்டேட் வங்கி

- பாரத ஸ்டேட் வங்கி (SBI) 300 மில்லியன் டாலர் மதிப்பிலான ஃபார்மோசா பத்திரங்களை வெளியிட்டதோடு இந்தியா INX GIFT IFSC என்ற நிறுவனத்தின் மூலம் இதை வெளியிடுவதாகவும் பட்டியலிட்டுள்ளது.

- தைவானில் வழங்கப்பட்ட ஃபார்மோசா பத்திரம் மூலம் பணம் திரட்டும் முதல் இந்திய கடன் வழங்கும் நிறுவனம் இதுவாகும்.
- இரண்டு பங்குச் சந்தைகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் லக்சம்பர்க் பங்குச் சந்தையில் பசுமைப் பத்திரங்கள் இருமுறை பட்டியலிடப்பட்ட முதல் கடன் வழங்குநர் நிறுவனம் பாரத் ஸ்டேட் வங்கி ஆகும்.



## இந்தியாவின் எஃகு உற்பத்தி




- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் கச்சா எஃகு உற்பத்தி 118 மில்லியன் டன்களாக உயர்ந்தது.
- எஃகு உற்பத்தியில் 2வது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.
- 1032.8 மில்லியன் டன்கள் உற்பத்தி கொண்ட சீனாவிற்கு அடுத்த நிலையில் இந்தியா உள்ளது.

## ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு முன்னெடுப்பு

- இந்தியத் தேசியப் பணவழங்கீட்டுக் கழகம் மற்றும் ஒருங்கிணைந்த பணவழங்கிட்டு இடைமுகச் சூழலமைவு (முன்னணி வங்கிகள் மற்றும் நிதித் தொழில் நுட்பங்களை உள்ளடக்கியது) ஆகியவை இந்த முன்னெடுப்பினை அறிவித்துள்ளன.
- நுகர்வோர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த முன்னெடுப்பானது தொடங்கப் படுகிறது.
- இந்த முன்னெடுப்பின் கீழ் NPCI மற்றும் UPI சூழலமைவு ஆகியவை பிப்ரவரி 01 முதல் 07 வரையிலான நாட்களை ஒருங்கிணைந்தப் பணவழங்கீட்டு இடைமுகப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு வாரமாக அனுசரிக்க உள்ளன.
- மேலும், பிப்ரவரி மாதம் முழுவதும் UPI பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப் பட உள்ளது.




## புதிய பணத்தாள் அச்சு எந்திரங்கள்

- இந்தியப் பத்திர அச்சடிப்பு மற்றும் நாணய அச்சடிப்புக் கழகமானது, நாசிக்கில் உள்ள பணத்தாள் மற்றும் தேவாஸ் என்னுமிடத்தில் உள்ள வங்கி பணத்தாள் அச்சகங்களில் புதிய அச்சு எந்திரங்களை நிறுவியுள்ளது.
- இந்தியாவில் வங்கிப் பணத்தாள்களை அச்சடித்து வெளியிடுவதற்காக 4 அச்சகங்கள் உள்ளன.

- அவையாவன
    - தேவாஸ் – மத்தியப் பிரதேசம்
    - நாசிக் – மகாராஷ்டிரா (SPMCIL நிறுவனத்திற்குச் சொந்தமானது)
    - மைசூர் – கர்நாடகா மற்றும்
    - சால்போனி – மேற்கு வங்காளம் (பாரதீய ரிசர்வ் வங்கி பணத்தாள் முத்ரன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமானது).

## எரிபொருள் அல்லாத சில்லறை விற்பனைக் கூடம்




- இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகமானது HappyShop என்ற பெயரில் தனது சில்லறை விற்பனைக் கூடத்தினைத் திறந்து வைத்ததன் மூலம், எரிபொருள் அல்லாத சில்லறை விற்பனைத் துறையில் கால்பதித்துள்ளது.
- இதன் முதல் சில்லறை விற்பனைக் கூடமானது மும்பையின் நேபியன் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள அந்நிறுவனத்தின் சில்லறை விற்பனை நிலையத்தில் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- இந்துஸ்தான் பெட்ரோலியக் கழக நிறுவனமானது 'Happyshop' விற்பனைக் கூடத்தின் மேலும் 2 கிளைகளைத் திறக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த இரு கூடங்களும் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன.
    - மும்பையின் மேற்கு பாந்த்ரா பகுதியில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் வாகனப் பராமரிப்பு மையம் மற்றும்
    - விசாகப்பட்டினத்திலுள்ள மில்லினியம் சில்லறைக் கூடம்
- இது தவிர இந்துஸ்தான் நிறுவனமானது மதுரையில் இணைய வழியிலான விற்பனை நிலையத்தைத் திறந்து, முற்றிலும் இணைய வடிவிலான இயங்குதளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- நாடு முழுவதும் உள்ள தனது விற்பனை நிலையங்களில் 'Paani@clubHP' என்ற பெயரில் தண்ணீர் குடுவைகளையும் (பாட்டில்) விற்பனை செய்து வருகிறது.

## 5 நதிகள் இணைப்புத் திட்டம் அறிவிப்பு – மத்திய நிதிநிலை அறிக்கை

- மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தனது நிதிநிலை அறிக்கை உரையில் 5 நதிகள் இணைப்புத் திட்டம் குறித்து முன்மொழிந்தார்.
- இந்த இணைப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நதிகளாவன; கோதாவரி - கிருஷ்ணா, கிருஷ்ணா – பெண்ணாறு மற்றும் பெண்ணாறு - காவிரி, தமன்கங்கா – பிஞ்சல் மற்றும் பார் – தபதி – நர்மதை ஆகியனவாகும்.
- இந்தியாவின் 4வது மிகப்பெரிய நதியான கிருஷ்ணா நதி, மகாராஷ்டிராவிலுள்ள மகாபலீஸ்வரத்தில் உருவாகி, மகாராஷ்டிரா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வழியே பாய்கிறது.
- மலையில் உருவாகும் காவிரி ஆறு கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் வழியே பாய்கிறது.
- இந்தியாவின் 3வது பெரிய நதியான கோதாவரி, நாசிக் என்னுமிடத்தில் உருவாகி மகாராஷ்டிரா, தெலுங்கான, ஆந்திரப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்கள் வழியே பாய்கிறது.
- மும்பை நகரத்திற்குத் தேவையான குடிநீரை வழங்குவதற்காக தமன்கங்கா வடிகாலின் உபரி நீரைத் திருப்பி விடுவதை தமன்கங்கா – பிஞ்சல் நதி இணைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வடக்கு மகாராஷ்டிரா மற்றும் தென் குஜராத் பகுதியில் அமைந்த மேற்குத் தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ள 7 நீர்த் தேக்கங்களில் இருந்து வரும் உபரி நீரைத் திருப்பி விடுவதன் மூலம் கட்ச் மற்றும் சௌராஷ்டிரம் போன்ற வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்கு வழங்குவதற்கு பார்-தபதி நர்மதை இணைப்புத் திட்டம் முன்மொழிந்து உள்ளது.

## ஹொய்சாலாவின் புனிதச் சின்னங்கள்



- கர்நாடகாவிலுள்ள பேலூர், ஹலபேடு மற்றும் சோமநாத் புரா ஆகிய இடங்களில் அமைந்த ஹொய்சாலா ஆலயங்கள், 2022-23 ஆம் ஆண்டிற்கான உலகப் பாரம்பரியப் பட்டியலில், இடம் பெறச் செய்வதற்காக வேண்டி இந்தியாவின் சார்பாக பரிந்துரைக்கப் பட்டுள்ளது.
- ஹொய்சாலர்கள் வம்சமானது கி.பி. 1110 முதல் கி.பி. 1226 வரையிலான காலகட்டத்தில் தென்னிந்தியாவில் ஆட்சி செய்த ஒரு வம்சமாகும்.

- இரண்டாம் நிருப காமா அல்லது சாலா என்பவர் இதனைத் தோற்றுவித்தார்.
- முதலில் பேலூரில் இருந்த இதன் தலைநகரம், பிறகு இதன் தலைநகர் ஹலபேடுவிற்கு மாற்றப் பட்டது.

## மலிவு விலையிலான மற்றும் தூய எரிசக்திக்கான உலகளாவிய சிறப்பு மையம்




- மலிவு விலையிலான மற்றும் தூய எரிசக்திக்கான உலகளாவிய சிறப்பு மையமானது கர்நாடகாவின் தார்வாத்திலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் (IIT Dharwad) சமீபத்தில் திறக்கப்பட்டது.
- மலிவு விலையிலான மற்றும் தூய எரிசக்திக்கான ஆராய்ச்சிகளை மத்திய அரசு மேம்படுத்த உள்ளது.
- இதற்கான தீர்வுகள் கிராமப்புறச் சமுதாயங்களின் வாழ்வாதாரங்கள் மீது அதிக ஈடுபாட்டினை செலுத்த உள்ளது.
- மத்திய அரசின் இந்த முயற்சிக்கு பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு நிதியின் மூலம் உதவி வழங்கப்படும்.
- இந்த நிதிகள் ஹனிவெல் ஹோம்டவுன் சொலூசன்ஸ் இந்தியா என்ற ஒரு அறக் கட்டளையிடமிருந்துப் பெறப்படுகிறது.

## ஒரே நாடு ஒரே பதிவு முறை

- நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கையில், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் ஒரே நாடு ஒரே பதிவு முறை என்ற திட்டத்தை அறிமுகம் செய்தார்.
- இந்தத் திட்டமானது வணிகம் செய்தலின் எளிமைத் தன்மையையும் வாழ்க்கை முறையின் எளிமைத் தன்மையையும் மேம்படுத்தும்.
- இந்தத் திட்டமானது நாடு முழுவதும் ஒரே மாதிரியான பதிவு முறையைக் கொண்டு வர உள்ளது.
- எந்த விதப் பதிவானாலும், அது நிலப்பதிவானாலும் (அ) வாகனப் பதிவானாலும் (அ) எந்த ஓர் இதரப் பதிவாக இருந்தாலும் சரி இதில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான செயல்முறையே பின்பற்றப்படும்.




**DILRMP**




- DILRMP என்பதன் விரிவாக்கம் டிஜிட்டல் (எண்ணிமம்) இந்தியா நில ஆவண நவீன மயமாக்கல் திட்டம் என்பதாகும்.
- இத்திட்டத்தின் கீழ், இந்திய அரசானது நாட்டிலுள்ள 90% நிலப் பதிவு ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கியுள்ளது.
- இது 24 மாநிலங்களில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- இத்திட்டமானது 2008 ஆம் ஆண்டில் தேசிய நில ஆவண நவீனமயமாக்கல் திட்டமாகத் தொடங்கப் பட்டது.
- இத்திட்டமானது சமீபத்தில் பிரதமர் மோடி அரசினால் டிஜிட்டல் இந்தியா நில ஆவண நவீன மயமாக்கல் திட்டம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

## இந்தியப் பத்திரிகைச் சுதந்திரம் – அறிக்கை

- 2021 ஆம் ஆண்டிற்கான இந்தியப் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய அறிக்கையானது உரிமைகள் மற்றும் இடர்கள் பகுப்பாய்வுக் குழுமத்தினால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- நாட்டின் 13 ஊடக மற்றும் பத்திரிகை நிறுவனங்கள் குறி வைக்கப் பட்டு, 108 இதழியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர் மற்றும் 6 இதழியலாளர்கள் கொல்லப்பட்டனர் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- ஜம்மு & காஷ்மீர் பகுதியில் அதிக எண்ணிக்கையிலான இதழியலாளர்கள் தாக்கப் பட்டுள்ளனர்.
- இதில் உத்தரப் பிரதேசம் 2வது இடத்தில் உள்ளது.

## நகர வாயு விநியோகத்தில் ஹைட்ரஜன் வாயு

GAIL (India) Limited

- இந்திய வாயு ஆணைய நிறுவனமானது, மத்தியப் பிரதேசத்தின் இந்தூர் என்னுமிடத்திலுள்ள இயற்கை எரிவாயு அமைப்பில் ஹைட்ரஜனைக் கலப்பதற்கான ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே முதல்முறையாகத் தொடங்கியுள்ளது.
- ஹைட்ரஜன் கலந்த இயற்கை வாயுவானது அவந்திகா வாயு நிறுவனத்திற்கு விநியோகிக்கப் படும்.
- இந்திய வாயு ஆணைய நிறுவனமானது "தேசிய ஹைட்ரஜன் திட்டத்தின்" வரிசையின் கீழ் "ஹைட்ரஜன் கலப்புத் திட்டத்தை" தொடங்கியது.
- ஹைட்ரஜன் கலப்புத் திட்டமானது நகர வாயு விநியோகக் கட்டமைப்பில் ஹைட்ரஜன் கலப்பிற்கான ஒரு தொழில்நுட்ப-வணிக ரீதியிலான சாத்தியக் கூறுகளை நிறுவச் செய்வதற்கான ஒரு சோதனைத் திட்டமாக தொடங்கப் பட்டது.

## PM – DeVINE திட்டம்




- 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், நிதி அமைச்சர் நிர்மலா சீதா

ராமன் அவர்களால் ஒரு புதிய “PM DeVINE திட்டமானது” முன்மொழியப் பட்டது.

- அரசானது ரூ.1500 கோடி அளவிலான ஆரம்ப நிதி ஒதுக்கீட்டின் மூலம் இத்திட்டத்தை அறிவித்தது.
- PM DeVINE என்பதன் விரிவாக்கம் பிரதம மந்திரி வடகிழக்கு மேம்பாட்டு முன்னெடுப்பு (Prime Minister's Development Initiative for North-East) என்பதாகும்.
- இத்திட்டமானது மிசோரத்தில் “மூங்கில் இணைப்புச் சாலைகள்” உள்ளிட்ட உள் கட்டமைப்பு மற்றும் தேவை சார்ந்த சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தச் சாலைகள் வனத்திலிருந்து மூங்கில்களை ஏற்றுச் செல்வதற்கு உதவும்.

## மத்தியப் பிரதேசத்தில் 3 இடங்களின் பெயர் மாற்றம்

- மத்தியப் பிரதேசத்திலுள்ள 3 இடங்களின் பெயரை மாற்றுவதற்கான ஒரு முன் மொழிதலுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதில் ஹோசங்காபாத் நகரை “நர்மதாபுரம்” என்றும் சிவபுரியை “குண்டேஷ்வர் தாம்” என்றும் பாபாய் என்பதை “மக்கான் நகர்” என்றும் மாற்றுவதற்கு முன் மொழியப் பட்டு உள்ளது.
- நர்மதை நதியின் தென்கரையில் அமைந்துள்ள ஹோசங்காபாத் நகரத்திற்கு, 600 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த முதலாவது மால்வா அரசரான ஹோசங் ஷாவின் நினைவாகப் பெயரிடப் பட்டது.
- மேலும் மேற்கு வங்கத்தின் பெயரை பங்களா (வங்காளம்) எனப் பெயர் மாற்றச் செய்வதற்கான முன்மொழிதலை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது.
- அண்டை நாடான வங்காள தேசத்தின் பெயரை இந்தப் பெயர் ஒத்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

## ஐ.என்.எஸ். வகிர்

- இந்தியக் கடற்படையில் ஒரு புதிய நீர்மூழ்கிக் கப்பலும், பிரான்சு நாட்டினால் வடிவமைக்கப் பட்ட ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல்களில் ஐந்தாவது கப்பலுமான ஐ.என்.எஸ் வகிர் தனது முதல் கடற்பயணச் சோதனையை மேற்கொண்டது.
- பிரான்ஸ் நாட்டின் கடற்படைக் குழுமத்துடன் இணைந்து மேசகான் கப்பல்கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்படும் போது இந்த நீர்மூழ்கிக் கப்பலுக்கு “யார்டு 11879” எனப் பெயரிடப் பட்டது.
- இது பணியில் இணைக்கப்பட்டப் பிறகு இதற்கு “வகிர்” எனப் பெயரிடப் படும்.




## ராம்சார் தளங்கள்




- குஜராத்தின் ஜாம்நகர் அருகிலுள்ள கிஜாதியா பறவைகள் சரணாலயம் மற்றும் உத்தரப் பிரதேசத்திலுள்ள பாகிரா வனவிலங்குச் சரணாலயம் ஆகியவை ராம்சார் உடன்படிக்கையின் மூலம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களாகப் பட்டியலிடப் பட்டுள்ளன.
- இத்துடன், இந்தியாவிலுள்ள மொத்த இராம்சார் தளங்களின் எண்ணிக்கை 49 ஆக உயர்ந்துள்ளது.
- ராம்சார் அந்தஸ்தைப் பெற்ற குஜராத்தின் 4வது ஈரநிலமாக கிஜாதியா மாறியுள்ளது.
- நல்சரோவர் பறவைகள் சரணாலயம், தோல் வனவிலங்குச் சரணாலயம் மற்றும் வாத்வானா ஈரநிலம் ஆகியவை குஜராத்திலுள்ள இதர ராம்சார் தளங்களாகும்.

## பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை அரசு முறையில் புறக்கணிக்கும் இந்தியா




- பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை அரசு முறையில் புறக்கணிப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.
- தூர்தர்ஷன் தொலைக்காட்சி ஊடகம் பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க மற்றும் நிறைவு விழாக்களை ஒலி பரப்பாது.
- பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிப் போட்டிகளுக்குத் தங்களது தூதரை அனுப்பாது என்றும் இந்தியா கூறியது.
- எனினும் இந்தியா அந்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு ஒரு விளையாட்டு வீரரை அனுப்பும் எனவும் அமைச்சகம் தெரிவித்தது.

*குறிப்பு*

- இராணுவ அலுவலர் கியு ஃபேபோ (Qi Fabao) என்பவரை தமது நாட்டின் சுடரை ஏந்தி அணியை முன் நடத்துபவராக சீனா தேர்ந்தெடுத்துள்ளது.
- இவர் 2020 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் சீனா இடையில் நடைபெற்ற கல்வான் பள்ளத்தாக்கு மோதல்களில் ஈடுபட்டவர் ஆவார்.

## மதிய உணவுத் திட்டத்தில் தினை

- மதிய உணவுத் திட்டத்தில் தினை உணவு வகைகளைச் சேர்ப்பதற்கு இந்திய அரசு முடிவு செய்துள்ளது.
- அவை கம்பு, கேழ்வரகு மற்றும் சோளம் ஆகியனவாகும்.
- குழந்தைகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்காக வேண்டி இது மேற்கொள்ளப் படுகிறது.
- இந்த அறிவிப்பானது கல்வி அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்டது.
- இது PM POSHAN திட்டம் மூலம் அமல்படுத்தப்படும்.

## 2022 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பின் வெற்றியாளர்கள்




- ❖ உத்தரப் பிரதேச மாநிலத்தின் காட்சிப் பீடமானது 2022 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பின் சிறந்த காட்சிப் பீடமாக அறிவிக்கப்பட்டது.
- ❖ மகாராஷ்டிரா மாநிலத்தின் காட்சிப் பீடமானது பிரபல தேர்வுப் பிரிவில் சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ❖ மத்தியத் தொழிற்சாலைப் பாதுகாப்புப் படையானது மத்திய ஆயுதப் படைகளிலேயே சிறந்த அணிவகுப்புக் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ❖ இந்தியக் கடற்படையானது, மற்ற படைகளில் சிறந்த அணிவகுப்புப் படைப் பிரிவாக பிரபலத் தேர்வுப் பிரிவில் வெற்றி பெற்றது.
- ❖ அமைச்சகங்களின் காட்சிப் பீடங்களுள் கல்வி அமைச்சகம் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஆகியவற்றின் காட்சிப் பீடங்கள் சிறந்தவையாக அறிவிக்கப் பட்டன.
- ❖ கல்வி அமைச்சகத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான காட்சிப் பீடத்திற்கு "Vedas to Metaverse" என்று தலைப்பிடப்பட்டது.

## புனௌரா தாம்



- ❖ பீகார் மாநில அரசின் கோரிக்கைக்கு ஏற்ப, புனௌரா தாம் கோயிலை சுவதேஷ் தர்ஷன் திட்டத்தின் இராமாயணச் சுற்றில் சுற்றுலா அமைச்சகம் சேர்த்துள்ளது.
- ❖ புனௌரா தாம் கோயிலானது சுற்றுலா அமைச்சகத்தின் PRASHAD திட்டத்தின் கீழ்

சமீபத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

- புனௌரா தாம், சீதா தேவியின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது.

## ஆரவல்லி உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கப் பூங்கா

- ஹரியானாவின் குருகிராமில் உள்ள ஆரவல்லி உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கப் பூங்கா இந்தியாவின் முதலாவது "பரப்பளவு அடிப்படையிலான இதர செயல் திறன் மிக்க நடவடிக்கை" (other effective area-based conservation measures) தளமாக அறிவிக்கப்பட்டு உள்ளது.
- இது உலக ஈரநிலங்கள் தினத்தன்று சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்டது.
- பாதுகாக்கப்படாத ஆனால் உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கத்திற்குப் பெரும் பங்கினை அளிக்கும் பகுதிகளுக்கு சர்வதேச இயற்கை வளங்காப்பு அமைப்பு இந்தக் குறியீட்டினை வழங்குகிறது.
- இந்தக் குறியீடானது, சர்வதேச வரைபடத்தில் இந்தப் பகுதியினை ஒரு பல்லுயிர்ப் பெருக்கத்தின் முக்கியப் பகுதியாக குறிப்பிடுகிறது.

## சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகம்

- சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகம் (Square Kilometer Array Observatory – SKAO) எனும் மாபெரும் அறிவியல் திட்டத்தில் பணியாற்றுவதற்கான தனது உறுதிப்பாட்டினை உறுதி செய்வதற்கான ஒரு இடைக்கால ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தமானது ஓராண்டு காலம் வரை செல்லுபடியாகும்.
- SKAO திட்டமானது உலகின் மிகப்பெரிய ரேடியோ தொலைநோக்கியாக திகழும்.
- SKAO திட்டத்தின் கட்டுமானக் கட்டத்தில் இந்தியா தனது முதல் நிதிப் பங்களிப்பினை வழங்குவதற்கு இத்திட்டம் வழிவகை செய்யும்.
- SKAO ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய இடங்களில் நிறுவப்பட உள்ளது.
- இதன் தலைமையகம் ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ளது.

## குங்குமப்பூ கிண்ணத் திட்டம்

- வடகிழக்கு தொழில்நுட்பப் பயன்பாட்டு மற்றும் ஆராய்ச்சி மையமானது குங்குமப்பூ கிண்ணத் திட்டத்தின் கீழ் (Saffron Bowl project), அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்களில் குங்குமப் பூ சாகுபடிக்காக ஒரு சில பகுதிகளை அடையாளம் கண்டுள்ளது.
- காஷ்மீரின் ஒரு சில பகுதிகளுக்குள்ளேயே இருந்த இந்தியாவின் குங்குமப்பூக் கிண்ணம்

(உற்பத்திப் பகுதி) ஆனது தற்போது வடகிழக்குப் பகுதியிலும் தனது கிளைகளை விரித்துள்ளது.

## ICRISAT நிறுவனத்தின் 50வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள்




- ஐதராபாத்தின் படன்சேருவில் உள்ள மித வறண்ட வெப்பமண்டலத்திற்கான சர்வதேச பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (ICRISAT - International Crops Research Institute for the Semi-Arid Tropics) வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், அந்த நிறுவனத்தின் 50வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களைத் துவக்கி வைத்தார்.
- மேலும், அவர் ஹைதராபாத்தில் தாவரப் பாதுகாப்பு மீதான பருவநிலை மாற்ற ஆராய்ச்சி மையம் மற்றும் விரைவு உற்பத்தி மேம்பாட்டு மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்து, இந்நிகழ்வின் நினைவு தபால் தலையையும் வெளியிட்டார்.

## ராஷ்ட்ரிய யுவ சசாக்திகரன் காரியக்ரம் திட்டம்




- ராஷ்ட்ரிய யுவ சசாக்திகரன் காரியக்ரம் என்ற திட்டத்தினை 2021-22 முதல் 2025-26 வரையில் மேலும் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இளைஞர்களின் ஆளுமை மற்றும் தலைமைப் பண்புகளை விருத்தி செய்து நாட்டின் மேம்பாட்டு நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தும் நோக்கங்களை அடையும் நோக்கில் இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.

## சைகோவ்-டி




- கோவிட்-19 நோய்த் தொற்றின் சிகிச்சைக்கான, இந்தியாவின் முதல் ஊசியில்லா தடுப்பூசியான சைகோவ்-டி பீகாரின் பாட்னாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- சைகோவ்-டி என்பது கோவாக்சின் மருந்தினை அடுத்து, இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட இரண்டாவது கோவிட்-19 தடுப்பூசியாகும்.
- இது பிளாஸ்மிட் டிஎன்ஏவினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்ற வகையில், இது இயற்கையில் தனித்துவமிக்க ஊசி முனை இல்லாத ஒரு தடுப்பு மருந்தாகும்.
- சைகோவ்-டி மருந்தினை 12-15 வயதுடைய குழந்தைகளுக்கு வழங்குவதற்கு என்று ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- இருப்பினும், இந்தியாவில் இந்த மருந்தானது முதலில் வயது வந்தோருக்கு வழங்கப் படும்.

## அசாம் சிறுத்தை கணக்கெடுப்பு

- கௌகாத்தியின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் அருகே உள்ள சிசுகிராம் செஞ்சிலுவைச் சங்கத்தில் இருந்து ஒரு சிறுத்தையை வனத்துறை அதிகாரிகள் சமீபத்தில் மீட்டுள்ளனர்.
- மேலும், வடக்கு காம்ரூப் வனப் பிரிவானது முதன்முறையாக, அசாமின் காடுகள் மற்றும் காடு அல்லாத பகுதிகளில் பிரத்தியேக சிறுத்தைகள் கணக்கெடுப்பினையும் தொடங்கியுள்ளது.
- காம்ரூப் மாவட்டத்தில் உள்ள அமிங்கானில் சிறுத்தைகள் அதிகளவில் காணப்படும் பகுதிகளில் சிறுத்தைகள் கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

## சிலிக்கா ஏரி பற்றிய வருடாந்திர ஆய்வு




- ❖ சிலிக்கா மேம்பாட்டு ஆணையமானது, அண்மையில் சிலிக்கா ஏரியில் வருடாந்திரக் கணக்கெடுப்பை நடத்தியது.
- ❖ இது சிலிக்கா ஏரியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய ஒரு கணக்கெடுப்பு ஆகும்.
- ❖ நாட்டில் உள்ள ஒட்டு மொத்த கடல் புல் பரவலில் 33 சதவீதத்திற்கும் அதிகமானவை இந்த ஏரியில் உள்ளது என இந்த ஆய்வறிக்கை கூறுகிறது.
- ❖ கடல்புல் என்பது நீருக்கடியில் உள்ள தாவரமாகும்.
- ❖ இவை கடலில் அல்லது கடல்பரப்பிற்கு அருகில் உள்ள பகுதிகளில் காணப் படுகின்றன.
- ❖ இங்கு ஐந்து வகையான கடல் புல் இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- ❖ அவை ஹாலோபிலா பெக்காரி, ஹாலோபிலா ஓவேட், ஹாலோபிலா ஓவாலிஸ், ஹாலோடுல் பினிஃபோலியா மற்றும் ஹோலோடூல் யூனினெர்விஸ் ஆகியனவாகும்.

## சமத்துவச் சிலை





- ஐதராபாத்தில் நிறுவப்பட்டுள்ள 216 அடி உயர சமத்துவச் சிலையை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்தார்.
- ஸ்ரீ ராமானுஜாச்சார்யா ஆசிரமத்தைச் சேர்ந்த சின்ன ஜீயர் சுவாமிகளால் இந்த சிலையானது கருத்துருவாக்கப்பட்டது.
- பக்தி இயக்கத் துறவி ராமானுஜாச்சாரியாரின் 1000வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் 12 ஆம் நாளான ஸ்ரீ ராமானுஜ சஹஸ்ராப்தி சமரோஹத்தின் ஒரு பகுதியாக இந்தச் சிலை திறப்பு விழா நடைபெற்றது.
- 'பஞ்சலோஹா' என்ற ஐந்து உலோகங்களின் ஒரு கலவையைக் கொண்டு இந்தச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.
- அவை தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை மற்றும் துத்தநாகம் ஆகியவை ஆகும்.
- இது உலகில் உள்ள அமர்ந்த நிலையில் உள்ள மிக உயரமான உலோக சிலைகளில் ஒன்றாக திகழ்கிறது.
- 216 அடி உயரமுள்ள இந்த 'சமத்துவச் சிலையானது 'பத்ர வேதி' எனப்படும் 54 அடி உயர ஒரு அடித்தளக் கட்டிடத்தின் மீது நிறுவப்பட்டுள்ளது.

## மும்பை - நாக்பூர் விரைவுச் சாலையில் ITS அமைப்பு

- ITS என்பது ஒரு நுண்ணறிவு அடிப்படையிலான போக்குவரத்து அமைப்பு ஆகும்.
- இது ஒரு கொரியத் தொழில்நுட்பம் ஆகும்.
- மும்பை - நாக்பூர் விரைவுச் சாலையைக் கண்காணிப்பதற்காக வேண்டி இந்தத் தொழில் நுட்பமானது பயன்படுத்தப்பட உள்ளது.
- இது நாட்டின் மிக வேகமான மற்றும் நீளமான விரைவுச் சாலையாகும்.
- இது ஓர் எட்டு வழி விரைவுச் சாலையாகும்.
- இந்தச் சாலையில் அதிகபட்சமாக மணிக்கு 150 கிமீ வேகத்தில் வாகனங்கள் செல்ல முடியும்.
- விபத்துகளைத் தடுப்பதற்கு இந்தத் தொழில்நுட்பம் உதவும்.

## சௌரி சௌரா சம்பவத்தின் 100 ஆண்டுகள் நிறைவு




- ❖ சௌரி சௌரா உத்தரப் பிரதேசத்தின் கோரக்பூர் பகுதியில் அமைந்துள்ளது.
- ❖ சௌரி சௌராவில் நடைபெற்ற ஒரு சம்பவத்தின் காரணமாக மகாத்மா காந்திஜி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தினை கை விட்டார்.
- ❖ இந்த சம்பவத்தின் போது மக்கள் அங்குள்ள காவல் நிலையத்திற்குத் தீ வைத்தனர்.
- ❖ இந்த சம்பவமானது 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 அன்று நடைபெற்றது.
- ❖ இந்தியா சமீபத்தில் சௌரி சௌரா சம்பவத்தின் மீதான 100 ஆம் ஆண்டு நிறைவினை அனுசரித்தது.

## இந்தியாவின் வேலை வாய்ப்பின்மை வீதம்

- ❖ இந்திய பொருளாதாரக் கண்காணிப்பு மையமானது வேலை வாய்ப்பின்மை குறித்த ஒரு அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது.
- ❖ 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்தியாவின் வேலை வாய்ப்பின்மை வீதம் 6.57% ஆக உள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- ❖ இது 2021 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான ஒரு மிகக்குறைவான வீதமாகும்.
- ❖ நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பின்மை 8.16% ஆக இருந்தது.
- ❖ இது கிராமப்புறங்களில் 5.84% ஆக இருந்தது.
- ❖ 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாட்டிலிருந்த வேலை வாய்ப்பின்மை வீதம் 7.91% ஆகும்.
- ❖ இது நகர்ப்புறங்களில் 9.3% ஆகவும் கிராமப்புறங்களில் 7.28% ஆகவும் இருந்தது.

- 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தெலுங்கானா மாநிலத்தில் குறைவான வேலை வாய்ப்பின்மை பதிவாகியுள்ளது.
- ஹரியானா மாநிலத்தில் அதிக வேலைவாய்ப்பின்மை பதிவாகியுள்ளது.

## சோனாலி சிங்

- இந்திய அரசானது நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையின் கீழ் செயல்படும் பொதுக் கணக்குக் கட்டுப்பாட்டாளர் பதவியின் ஒரு கூடுதல் பொறுப்பினை சோனாலி சிங் என்பவரிடம் வழங்கியுள்ளது.
- இவர் 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து ஒரு கூடுதல் பொதுக் கணக்குக் கட்டுப்பாளராக பணியாற்றி வருகிறார்.
- இதற்கு முன்பாக இவர் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் ஒரு கூடுதல் செயலாளராகவும் பணியாற்றினார்.

## காதி விற்பனை நிலையத்தின் (எம்போரியம்) உரிமம்

- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது, அதனுடைய பழமையான காதி நிறுவனமான மும்பை காதி & கிராமத் தொழில்துறை சங்கத்தின் உரிமத்தினை ரத்து செய்துள்ளது.
- இந்தச் சங்கமானது 1954 ஆம் ஆண்டிலிருந்து மும்பையில் உள்ள பெருநகரக் காப்பீட்டு மையத்தில் பிரபலமான காதி விற்பனை நிலையத்தினை நடத்தி வந்தது.
- இந்த நிறுவனம் போலியான காதி தயாரிப்புப் பொருட்களை விற்கத் தொடங்கியதை அடுத்து KVIC இந்த நிறுவனத்தின் உரிமத்தினை ரத்து செய்துள்ளது.

## சுவரஜ்பிலிட்டி

- ஹைதரபாத்தின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகமானது "சுவரஜ்பிலிட்டி" என்ற தளத்தின் பீட்டா வடிவத்தினை வெளியிட்டுள்ளது.
- இது மாற்றுத்திறனாளிகள் தங்களுக்குத் தேவையான திறன்களைப் பெறவும் வேலை வாய்ப்பினைக் கண்டறியவும் வேண்டி அவர்களுக்கு உதவக் கூடிய வகையில், செயற்கை நுண்ணறிவின் மூலம் இயங்கும் வேலைவாய்ப்புத் தளமாகும்.
- இந்தக் கல்வி நிறுவனமானது யூத்4ஜாப்ஸ், விஷுவல் குவெஸ்ட் மற்றும் கோடக் மகிந்திரா வங்கி லிமிடெட் (Youth4Jobs, Visual Quest, and Kotak Mahindra Bank Ltd) ஆகியவற்றுடன் இணைந்து இந்தத் தளத்தினை உருவாக்கியுள்ளது.

## ஜெய்ப்பூரில் கிரிக்கெட் மைதானம்

- இராஜஸ்தான் முதல்வர் அசோக் கெஹ்லாட் மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் சௌரவ் கங்குலி ஆகியோர் இணைந்து ஜெய்ப்பூரில் உலகின் 3வது மிகப்பெரிய கிரிக்கெட் மைதானத்தினை நிறுவுவதற்கான அடிக்கல்லினை நாட்டினர்.
- இந்த மைதானமானது இந்தியாவின் 2வது பெரிய கிரிக்கெட் மைதானமாகவும், உலகின் 3வது மிகப்பெரிய மைதானமாகவும் திகழும்.

- இந்தப் புதிய மைதானமானது ஜெய்ப்பூர் – டெல்லி நெடுஞ்சாலையின் அருகே இராஜஸ்தான் கிரிக்கெட் அகாடமியினால் கட்டமைக்கப்படும்.
- தற்போது, அகமதாபாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானமானது (முன்னதாக மோதேரா மைதானம்) உலகின் மிகப்பெரிய மைதானமாக திகழ்கிறது.
- உலகின் 2வது மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம், ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானமாகும்.




## ஸ்புட்நிக் லைட்

- இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது சமீபத்தில் ஸ்புட்நிக் லைட் என்ற ஒரு கோவிட்-19 தடுப்பு மருந்தின் ஒரு அவசர காலப் பயன்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கியது.
- மத்திய மருந்து வாரியத்தின் நிபுணர் குழுவானது இதனைப் பரிந்துரை செய்தது.
- இத்துடன் இந்திய நாட்டில் கிடைக்கப் பெறும் பட்டியலில் 9வது கோவிட்-19 தடுப்பு மருந்தாக ஸ்புட்நிக் இணைந்துள்ளது.
- இது ஒரு பூஸ்டர் தடுப்பு மருந்தாகும்.




## சரிஸ்கா புலிகள் காப்பகம்

- 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சரிஸ்கா புலிகள் காப்பகத்தில் வாழ்விட மேலாண்மைத் திட்டமானது அறிமுகப் படுத்தப்பட்டது.

- இத்திட்டமானது இப்பகுதியில் புலிகளின் எண்ணிக்கையினை உயர்த்தியுள்ளது.
- இந்தக் காப்பகத்திலுள்ள புலிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்த்துள்ளது.
- சரிஸ்கா புலிகள் காப்பகமானது இராஜஸ்தானின் ஆல்வார் மாவட்டத்தில் அமைந்து உள்ளது.
- இது 1978 ஆம் ஆண்டில் புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது.




## பவர்தான் – 2022

- ஆற்றல்துறை அமைச்சர் R.K. சிங் 2022 ஆம் ஆண்டிற்கான பவர்தான் (Powerthon) என்ற ஒரு போட்டியைத் தொடங்கி வைத்தார்.
- இது ஆற்றல் வழங்கீட்டிலுள்ள சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தொழில் நுட்பம் சார்ந்த தீர்வுகளைக் கண்டறிவதற்கான ஒரு ஹேக்கத்தான் போட்டியாகும்.
- மேலும் இது ஆற்றல் வழங்கீட்டின் தரத்தினையும் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதற்கானதாகும்.



## AAHT நடவடிக்கை

- இது ஆள் கடத்தலைத் தடுப்பதற்கான ஒரு நாடு தழுவிய நடவடிக்கையாகும்.
- இது இரயில்வே பாதுகாப்புப் படையால் தொடங்கப்பட்டது.
- AAHT நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து பாதிக்கப் பட்டவர்களை, குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளை மீட்பதில் முக்கிய கவனம் செலுத்தும் வகையில் அனைத்து நீண்ட தூர ரயில்கள்/வழித் தடங்கள் ஆகியவற்றில் சிறப்புப் படைகள் நிறுத்தப்படும்.




## ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணைவேந்தர்

- ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முதல் பெண் துணைவேந்தராக சாந்திஸ்ரீ துளிப்புடி பண்டிட் பதவியேற்கவுள்ளார்.
- திருமதி பண்டிட் தற்போது மகாராஷ்டிராவில் உள்ள சாவித்ரிபாய் பூலே பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக உள்ளார்.
- குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள், இவரின் ஐந்தாண்டு காலப் பணி நியமனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.



## தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் 4.0 திட்டம்

- மான்சுக் மாண்டவியா தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் 4.0 என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது, 33 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 416 மாவட்டங்களில் மூன்று சுற்றுகளாக நடத்தப்படும்.
- ஆசாதி கா அம்ரித் மஹோத்ஸவ் என்ற ஒரு நிகழ்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 75 மாவட்டங்களும் இதில் அடங்கும்.
- இந்தத் திட்டம், நோய்த்தடுப்பில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கும், உலகளாவிய நோய்த் தடுப்பிற்கான நீடித்த ஆதாயங்களைப் பெறுவதற்கும் பெரிதும் உதவும்.
- தடுப்பூசி போடப்படாத மற்றும் பகுதியளவு தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வழக்கமான நோய்த்தடுப்புச் சேவைகள் சென்று அடைவதை இது உறுதி செய்யும்.



## மிகப்பெரிய பனிக்குகை உணவகம் (இக்லூ கஃபே)




- ஜம்மு காஷ்மீரில் சமீபத்தில் பனிக்குகை உணவகம் ஒன்று திறக்கப்பட்டது.
- இது தற்போது உலகின் மிகப்பெரிய பனிக்குகை உணவகம் ஆகும்.
- இதன் பெயர் ஸ்னோக்லு (Snowglu) என்பதாகும்.
- இது இந்த உணவகத்தின் உரிமையாளர் வாசிம் ஷா என்பவரால் கட்டப்பட்டது.

## காவால் புலிகள் காப்பகம் - பறவைகளை காண்பதற்கான வாய்ப்பு (Bird Walk)




- காவால் புலிகள் காப்பகமானது, பிப்ரவரி 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் முதல் முறையாக 'பறவைகளைக் காண்பதற்கான வாய்ப்பினை' வழங்க உள்ளது.
- காவால், 300க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் மற்றும் 600க்கும் மேற்பட்ட மர இனங்கள் கொண்டு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களில் செழுமையான பன்முகத் தன்மையைக் கொண்டுள்ளது.
- காவால் புலிகள் காப்பகம், இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் மஞ்சேரியல் மாவட்டத்தில் (பழைய அடிலாபாத் மாவட்டம்) ஜன்னாரம் மண்டலம் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

## இந்தியாவில் உள்ள அருங்காட்சியகங்களை மறுவடிவமைப்பதற்கான உலகளாவிய உச்சி மாநாடு




- ❖ இந்தியாவில் உள்ள அருங்காட்சியகங்களை மறுவடிவமைப்பது குறித்த உலகளாவிய உச்சி மாநாட்டினைக் கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்ய உள்ளது.
- ❖ இந்த மாநாடானது இது போன்ற முதல் வகையிலான உச்சி மாநாடு ஆகும்.
- ❖ இந்த உச்சி மாநாட்டினை மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி தொடங்கி வைக்க உள்ளார்.
- ❖ இது இந்தியாவில் உள்ள அருங்காட்சியகங்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதற்கான உச்சி மாநாடாகும்.
- ❖ இந்திய அருங்காட்சியகங்களை மேம்படுத்துவதற்கான புதிய நடைமுறைகள் மற்றும் உத்திகளை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- ❖ ஆசாதி கா அம்ரித் மஹோத்சவின் ஒரு பகுதியாக இந்த உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- ❖ இது இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் ஒரு நிகழ்ச்சியாகும்.
- ❖ ப்ளூம்பெர்க் உடன் இணைந்து கலாச்சார அமைச்சகத்தினால் இந்த உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இந்திய காலணி மற்றும் தோல் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம்

- ❖ இந்திய காலணி மற்றும் தோல் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம் ஆனது, 2021-22 முதல் 2026 ஆம் ஆண்டு வரை தொடரும் என்று வர்த்தக அமைச்சகம் சமீபத்தில் அறிவித்தது.
- ❖ இந்திய காலணி மற்றும் தோல் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டமானது தோல் பொருட்கள் துறைக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்தும்.
- ❖ இது தோல் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கும்.
- ❖ இந்திய அரசானது இதற்கான 50% நிதி உதவியை வழங்கும்.
- ❖ இந்த உதவித் தொகையின் வரம்பு ரூ.10 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## PMKSY திட்டமானது 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிப்பு




- 'பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா (PMKSY)' திட்டமானது 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகத்தினால் நிர்வகிக்கப் படுகிறது.
- இந்தத் திட்டமானது உணவு பதப்படுத்தும் தொழில்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய அரசானது, 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில், SAMPADA திட்டத்தினை (வேளாண் & கடல்சார் உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்கள் பதப்படுத்துதல் தொழில்துறைத் தொகுதியின் மேம்பாட்டுக்கான ஒரு திட்டம்) தொடங்கியது.
- இந்தத் திட்டமானது 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா என மறுபெயரிடப்பட்டது.

## சம்ரித் முன்னெடுப்பு

- அடல் புத்தாக்க திட்டம், நிதி ஆயோக் மற்றும் சர்வதேச மேம்பாட்டிற்கான அமெரிக்க நிறுவனம் ஆகியவை, புதுமையான வழிமுறைகளில் சுகாதார நல வசதிகளை வழங்குவதற்கான சந்தைகள் மற்றும் வளங்களுக்கான நிலையான அணுகல் (SAMRIDH) என்ற ஒரு முன்னெடுப்பின் கீழ் ஒரு புதிய கூட்டாண்மையை அறிவித்து உள்ளன.
- இது இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள், கிராமப்புற மற்றும் பழங்குடியினப் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள மக்களுக்கு மலிவு விலையிலான மற்றும் தரமான சுகாதாரத்தினை அணுகும் ஒரு வாய்ப்பினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அமேசான் இந்தியா நிறுவனம் கர்நாடகாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- அமேசான் இந்தியா நிறுவனமானது, பெண் தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்கும் நோக்கில் கர்நாடக மாநில கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுச் சங்கத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- அமேசான் இந்தியா நிறுவனமானது தனது தளத்தில் 'சஞ்சீவினி-கர்நாடக மாநில கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுச் சங்கத்தினை' அறிமுகப்படுத்தி, 'சஹேலி' திட்டத்தின் பயன்களை விரிவுபடுத்தும்.
- சஹேலி திட்டம், பெண் தொழில்முனைவோருக்கு உதவும் வகையில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிலரங்கங்களை வழங்குகிறது.

## வெண்முக மந்தி

- சமீபத்தில் அறிவியலாளர்கள் அருணாச்சலப் பிரதேசத்தில் வெண்முக மந்திகளைக் கண்டுபிடித்தனர்.
- வெண்முக மந்திகள், தென்கிழக்கு திபெத் பகுதியில் முதன்முதலில் தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- இந்த மந்திகள் அவற்றின் வெண்ணிற முகத்தினால் மற்ற மந்திகளிடமிருந்து வேறுபடுகின்றன.

- மேலும், அவை நீண்ட வால், கழுத்துப் பகுதியில் நீண்ட மற்றும் அடர்த்தியான ரோமங்கள் போன்றவற்றையும் கொண்டுள்ளன.
- வெண்முக மந்திகள் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம், மொத்தப் பாலூட்டிகளின் எண்ணிக்கை 438 ஆக அதிகரித்துள்ளது.



## இயக்குநரக வாரியத்தில் பெண்களின் பங்கேற்பு குறித்த அறிக்கை

- இயக்குநரக வாரியத்தில் (போர்டு ரூம்) பெண்களின் பங்கேற்பு குறித்த அறிக்கையை சமீபத்தில் டெலாய்ட் குளோபல் என்ற நிறுவனம் வெளியிட்டது.
- இது இத்தகைய ஏழாவது அறிக்கையாகும்.
- இந்தியாவில் 17.1% இயக்குநரக வாரிய பதவிகளை மட்டுமே பெண்கள் வகிக்கின்றனர் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்திய நாட்டில் 3.6% தலைவர்கள் (chairpersons) மட்டுமே பெண்கள் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள தலைமை நிர்வாக அதிகாரிகளில் சுமார் 4.7% பெண்கள் ஆவர்.




## பர்வத்மாலா

- “பர்வத்மாலா” என்ற தேசியக் கம்பிவடப் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டமானது சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.
- மலைப்பாங்கான பகுதிகளில் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்துவதற்காக 2022 /23 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் மத்திய நிதியமைச்சரால்

இத்திட்டமானது அறிவிக்கப்பட்டது.

- கடினமான மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள வழக்கமான சாலைகளுக்குப் பதிலாக, இந்தப் போக்குவரத்து வசதியானது ஒரு சுற்றுச்சூழல் ரீதியான நிலையான மாற்றாக இருக்கும்.
- சுற்றுலாவை மேம்படுத்துவதுடன், பயணிகளுக்கான போக்குவரத்து இணைப்பு மற்றும் வசதியை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- வழக்கமான வெகுஜனப் போக்குவரத்து அமைப்புகள் கூட சாத்தியமில்லாத நெரிசலான நகர்ப்புறங்களிலும் இது செயல்படுத்தப்படும்.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் இதன் உருவாக்கப் பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கும்.




## PM CARES நிதி




- 2020-21 ஆம் ஆண்டில் PM CARES நிதியின் கீழ் உள்ள மொத்த தொகை 10,990.17 கோடி ரூபாய் ஆகும்.
- இது 2020-21 ஆம் நிதியாண்டில் மும்மடங்காக உயர்ந்தது.
- 2020-21 ஆம் ஆண்டில் இந்த நிதியிலிருந்து ரூ.3,976.17 கோடி செலவிடப்பட்டுள்ளது என PM CARES நிதி பற்றிய சமீபத்திய தணிக்கை அறிக்கை கூறுகிறது.

- 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்றைய நிலவரப்படி, இந்த நிதியில் ரூ. 7,013.99 கோடி செலவழிக்கப் படாமல் உள்ளது.
- COVID-19 தொற்றுக்கு எதிரான ஒரு போராட்டத்தினை வலுப்படுத்த செயற்கை சுவாசக் கருவிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கும், புலம் பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் இந்த நிதியின் ஒரு பகுதியைப் பயன்படுத்தியது.

## கலங்கரை விளக்கச் சுற்றுலா

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகமானது ஒடிசா மாநிலத்தில் ஐந்து கலங்கரை விளக்கங்களை உருவாக்க உள்ளது.
- இத்திட்டத்திற்காக நான்கு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- ஒடிசா கலங்கரை விளக்கம் என்ற சுற்றுலாத் திட்டமானது, 2021 ஆம் ஆண்டு போக்குவரத்திற்கான கடல்சார் உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டு வருகிறது.
- இந்த உதவித் திட்டத்தின் கீழ், குஜராத், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், ஒடிசா மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ஆகிய மாநிலங்களில் மேம்பாடுகள் கொண்டு வரப்பட உள்ளன.
- இந்த நிதி உதவியானது, கலங்கரை விளக்கங்களை சுற்றுலா தலங்களாக மேம்படுத்த உதவும்.
- இது கலங்கரை விளக்கங்களின் வரலாறு மற்றும் பாரம்பரிய மதிப்புகளை பாதுகாக்கும்.

## ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

- லண்டனைச் சேர்ந்த பிராண்ட் ஃபைனான்ஸ் என்ற நிறுவனத்தின் நிறுவன மதிப்பீட்டு அறிக்கையின்படி, ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (Life Insurance Corporation) ஆனது இந்தியாவின் வலிமையான மற்றும் நாட்டின் ஒரு மிகப்பெரிய நிறுவனமாக விளங்குகிறது.
- இதன் மூலம், உலகளவில் 1வது மற்றும் 2வது இடங்களில் முறையே இடம் பெற்ற இத்தாலியின் போஸ்ட் இத்தாலியன் (Poste Italiane of Italy) மற்றும் ஸ்பெயினின் மேப்ஃப்ரே (Mapfre of Spain) ஆகிய நிறுவனங்களுக்குப் பிறகு உலகளவில் மூன்றாவது வலுவான காப்பீட்டு நிறுவனமாக இது மாறுகிறது.
- இது உலகின் 10வது மதிப்புமிக்க காப்பீட்டு நிறுவனமாகும்.

## ஆசியாவின் பணக்காரர்

- அதானி குழும நிறுவனரும், கோடீஸ்வரருமான கவுதம் அதானி ஆசியாவின் மிகப் பெரிய பணக்காரராக மாறியுள்ளார்.
- அவர் உலகின் பணக்காரர்கள் பட்டியலில் 10 வது இடத்தில் உள்ளார்.
- இது 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 அன்று வெளியான ப்ளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் குறியீட்டில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.

| Rank | Name | Total Net Worth | Country |
|---|---|---|---|
| 1 | Elon Musk | $235B | US |
| 2 | Jeff Bezos | $183B | US |
| 3 | Bernard Arnault | $168B | France |
| 10 | Gautam Adani | $88.5B | India |
| 11 | Mukesh Ambani | $87.9B | India |
| 38 | Azim Premji | $33.8B | India |

## உயிரி மூலக்கூறு அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை

- இந்தியாவின் முதல் வணிக அளவிலான உயிரி மூலக்கூறு அடிப்படையிலான ஹைட்ரஜன் ஆலை மத்தியப் பிரதேசத்தின் கந்த்வா மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.
- இந்த ஆலையில் ஒவ்வொரு நாளும் 30 டன் உயிரித் தீவனத்தில் இருந்து ஒரு டன் ஹைட்ரஜன் உற்பத்தி செய்யப்படும்.
- வேட்டோமோ எனர்ஜிஸ் லிமிடெட் மற்றும் பியெசல் கிரீன் எனர்ஜி ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் இந்த ஆலை அமைக்கப் படுகிறது.
- உயிரி மூலக்கூறிலிருந்து ஹைட்ரஜன், மீத்தேன் மற்றும் உயிரி நிலக்கரி (பயோசார்) ஆகியவற்றை உற்பத்தி செய்யக் கூடிய 'வெப்ப ரீதியில் முடுக்குவிக்கப்பட்ட காற்றில்லா நொதி உலைக்கான' தொழில்நுட்பத்தை இந்த நிறுவனம் கொண்டுள்ளது.



## இந்தியாவின் முதல் புல்லட் இரயில் பாதை

- மும்பை-அகமதாபாத் புல்லட் இரயில் திட்டமானது இந்தியாவின் முதல் புல்லட் இரயில் பாதையாகும்.
- இந்தியாவின் முதல் புல்லட் ரயில் நிலையமானது சூரத் நகரில் அமைக்கப்பட உள்ளது.
- 508.17 கிலோமீட்டர் நீளத்தில் அமைக்கப்பட உள்ள மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில் பாதைத் திட்டத்தில், மகாராஷ்டிராவில் 155.76 கி.மீ. நீளமும், குஜராத்தில் 384.04 கி.மீ. நீளமும், தாத்ரா மற்றும் நகர் ஹவேலியில் 4.3 கி.மீ. நீளம் கொண்ட ஒரு பாதையும் அமைக்கப்பட உள்ளது.




## டாம்டாம் போக்குவரத்துத் தரவரிசைக் குறியீடு – 2021



- இந்தத் தரவரிசையின்படி, 2021 ஆம் ஆண்டில் உலகின் மிகவும் நெரிசலான நகரங்கள் என்ற பிரிவில் மும்பை 5வது இடத்திலும், பெங்களூரு 10வது இடத்திலும் உள்ளன.
- 58 நாடுகளில் உள்ள 404 நகரங்களில் டெல்லி மற்றும் புனே ஆகியவை முறையே 11வது மற்றும் 21வது இடங்களில் உள்ளன.
- துருக்கியின் இஸ்தான்புல் நகரானது, உலகிலேயே மிகவும் நெரிசலான நகரமாக இந்தத் தரவரிசையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 100வது ஜவுளி இரயில்




- மேற்கு இரயில்வேயின் மும்பை மத்தியப் பிரிவு, சூரத் பகுதியில் உள்ள சல்தானில் இருந்து தென்கிழக்கு இரயில்வேயின் கரக்பூர் பிரிவில் உள்ள சங்க்ரைலுக்கு “100வது ஜவுளி ரயிலை” அனுப்பி ஒரு புதிய மைல்கல்லை எட்டியது.
- இதற்கான முதல் இரயிலை 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 அன்று இரயில்வே மற்றும் ஜவுளித்துறை இணை அமைச்சர் தர்ஷனா ஜர்தோஷ் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இந்த இரயில் உத்னாவில் இருந்து புறப்பட்டது.

## அடல் சுரங்கப்பாதை

- அடல் சுரங்கப் பாதையானது ஆனது, '10,000 அடி உயரத்திற்கு மேல் உள்ள உலகின் மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதை' என உலகச் சாதனைப் புத்தகத்தால் அதிகாரப் பூர்வமாக சான்றளிக்கப்பட்டுள்ளது.
- இது மணாலியை லாஹுவுல் - ஸ்பிட்டி பள்ளத்தாக்குடன் இணைக்கிறது.
- 9.02 கி.மீ. நீளம் உடைய, மூலோபாய வகையில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த சுரங்கப் பாதை 'ரோதாங் கணவாயின்' கீழே அமைக்கப்பட்டுள்ளது.




## தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவு




- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளின்படி, தொற்றுநோய் ஏற்பட்ட முதல் ஆண்டான 2020 ஆம் ஆண்டில், சமீபத்தியக் காலங்களில் வேலையில்லாமல் இருந்தவர்கள் மத்தியில் அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் பதிவாகி உள்ளன.
- முதன்முறையாக தற்கொலை எண்ணிக்கையானது 3,000 என்ற அளவைத் தாண்டி உள்ளது.
- 3548 நபர்கள் தற்கொலையால் இறந்துள்ளனர்.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, 2020 ஆம் ஆண்டில், கர்நாடகாவில் தான் வேலையில்லாதவர்களிடையே அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் பதிவாகியுள்ளன.
- அதற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரா, தமிழ்நாடு (336), அசாம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- கடன் சுமை அல்லது திவால்தன்மை காரணமாக நிகழ்ந்த தற்கொலைகளில், மகாராஷ்டிரா 1341 உயிரிழப்புகளுடன் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு (524) ஆகியவை உள்ளன.
- தமிழகத்தைத் தவிர, மற்ற மாநிலங்களில், விவசாயிகள் தான் அதிகளவில் தற்கொலை செய்துள்ளனர்.

## 2021 ஆம் ஆண்டில் புலிகள் இறப்பு மீதான பதிவு




- ❖ கடந்த ஆண்டில் 106 புலிகள் உயிரிழந்த நிலையில், புலிகளின் இறப்பு எண்ணிக்கை இந்த ஆண்டு 127 ஆக அதிகரித்துள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டில் புலிகளின் இறப்பு எண்ணிக்கை 96 ஆக பதிவாகியிருந்தது.
- ❖ அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 42 புலிகளும், மகாராஷ்டிராவில் 27 புலிகளும், கர்நாடகாவில் 15 புலிகளும், உத்தரப் பிரதேசத்தில் 9 புலிகளும் உயிரிழந்துள்ளன.

## தற்போதுள்ள பணிகளை ஒருங்கிணைத்தல் – இரயில்வே




- ❖ இந்திய இரயில்வே மேலாண்மைப் பணிகளின் கீழ் தற்போதுள்ள 8 பணிகளை ஒருங்கிணைப்பதற்கான அறிவிப்பினை, மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட்டு உள்ளது.

- இந்திய இரயில்வே மேலாண்மைப் பணி எனப்படும் புதிய குரூப் 'ஏ' என்ற மத்திய அரசுப் பணியை உருவாக்குவதை இந்த அறிவிப்பு உறுதிப்படுத்தி உள்ளது.
- இரயில்வேத் துறையில் நிலவும் ஒரு 'துறைவாத ஆதிக்கத்தை' முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, அதில் இரண்டு துறைகள் மட்டுமே இடம் பெறும். அவையாவன,
  - இரயில்வே பாதுகாப்புப் படை மற்றும்
  - மருத்துவ சேவைத் துறை ஆகியனவாகும்.

## நிதி ஆயோக் அறிக்கை: இந்தியாவின் சுகாதாரத் துறையை மறுசீரமைத்தல்




- நிதி ஆயோக் அமைப்பானது, இந்த அறிக்கையைச் சமீபத்தில் வெளியிட்டது.
- நிதி ஆயோக் தனது அறிக்கையில், BRICS நாடுகளுள் இந்தியாவின் சுகாதாரத் துறைக்கான செலவுகள் மிகக் குறைவு என்று குறிப்பிட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள 65 சதவீத அளவிலான மருத்துவமனைப் படுக்கைகள் ஆனது உத்தரப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், தெலுங்கானா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ள கிட்டத்தட்ட 50 சதவீத மக்களுக்கான மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்று இந்த அறிக்கை எடுத்துக் கூறுகிறது.
- மீதமுள்ள 21 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பிரதேசங்களில் வாழும் இந்தியாவின் மற்ற 50 சதவீத மக்கள் 35 சதவீத அளவிலான மருத்துவமனைப் படுக்கை வசதிகளைப் பயன்படுத்தச் செய்கின்றனர்.
- படுக்கைகளின் எண்ணிக்கையைக் குறைந்தபட்சம் 30 சதவீதம் என்ற அளவிற்கு அதிகரிக்க வேண்டும் என்று இது குறிப்பிட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள மருத்துவமனைத் துறையானது மொத்த மருத்துவச் சந்தையில் 80 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

## ஒரு மில்லியன் நபர்களுக்கு 21 நீதிபதிகள் - இந்தியா

- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி நிலவரப்படி, அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, மக்கள் தொகைக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கைக்குமான விகிதம் ஆனது (ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு எத்தனை நீதிபதிகள் என்ற விகிதம்) 21.03 ஆக உள்ளது.

- உச்ச நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 34 ஆகவும், 25 உயர் நீதிமன்றங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 1098 ஆகவும் உள்ளது.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகையைச் சட்ட அமைச்சகம் பயன்படுத்துகிறது.




## EIU நிறுவனத்தின் ஜனநாயகக் குறியீடு




- 2021ஆம் ஆண்டு ஜனநாயகக் குறியீட்டின் உலகளாவிய தரவரிசையில் இந்தியா 46வது இடத்தைப் பெற்றுள்ளதாக தி எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட் என்ற ஒரு நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.
- தி எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் வெளியிட்ட 2021 ஆம் ஆண்டிற்கான ஜனநாயகக் குறியீட்டில் 9.75 மதிப்பெண்களுடன் நார்வே முதலிடம் பெற்றது.
- இந்தியா 6.91 புள்ளிகளைப் பெற்று இந்தப் பட்டியலில் 46வது இடத்தைப் பெற்றது.

## SMILE திட்டம்

- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை "SMILE: விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் நிறுவனம் சார்ந்த ஆதரவு" என்ற வழங்கீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

- SMILE என்பது ஒரு மத்திய அரசின் திட்டமாகும்.
- திருநங்கைகள் மற்றும் பிச்சை எடுக்கும் செயலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு நலத் திட்டங்களை வழங்குவதற்காக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.




## வாடிக்கையாளர் அங்கீகாரத்தின் குரல் 2021

- சர்வதேச விமானச் சபையின் "உலக வாடிக்கையாளர் அங்கீகார முன்னெடுப்பின்" கீழ் "வாடிக்கையாளர் அங்கீகாரம் பெற்ற விமான நிலையங்கள் பட்டியலில்" இந்திய விமான நிலைய ஆணையத்தின் கீழ் உள்ள ஏழு விமான நிலையங்கள் தேர்ந்து எடுக்கப் பட்டுள்ளன.
- இந்திய விமான நிலைய ஆணையத்தின் கீழ் உள்ள விமான நிலையங்களான சென்னை, கோவா, கொல்கத்தா, பாட்னா, புனே, சண்டிகர் மற்றும் புவனேஸ்வர், 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச விமானச் சபையின் விமான நிலையச் சேவை தர ஆய்வில் பங்கேற்றன.
- "வாடிக்கையாளர் அங்கீகாரம் பெற்ற விமான நிலையங்கள் முன்னெடுப்பானது" சர்வதேச விமானச் சபையினால் தொடங்கப்பட்டது.
- கோவிட்-19 தொற்றுநோய்களின் போதும் கூட, வாடிக்கையாளர்களின் விமர்சனங்கள் கேட்கப் பட்டு, தொடர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளிப்பதை உறுதி செய்யும் விமான நிலையங்களை அங்கீகரிப்பதற்காக வேண்டி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## சேல்ஸ்ஃபோர்ஸ் உலக எண்ணிமத் திறன் குறியீடு 2022

- 2022 ஆம் ஆண்டு சேல்ஸ்ஃபோர்ஸ் உலக எண்ணியல் திறன் குறியீட்டில் இந்தியா முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- 19 நாடுகளை ஒப்பிட்டு இந்தக் குறியீடு உருவாக்கப்பட்டது.
- புதிய எண்ணிமத் திறன்கள் மற்றும் பணியாளர்களின் உணர்வுகள் பற்றி கற்றுக் கொள்வதில் குடிமக்களின் தயார்நிலையின் அடிப்படையில் இந்தக் குறியீடு உருவாக்கப் பட்டது.

- அனைத்து நாடுகளிலும், இந்தியா அதிக தயார்நிலையில் உள்ளது என்ற மதிப்பைப் பெற்றுள்ளது.
- இந்தியா 100 இடங்களில் 63 வது இடத்தினைப் பெற்றுள்ளது.




## வேளாண் துறையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்வதற்கான இலக்கு

- 2024ஆம் ஆண்டுக்குள் வேளாண் துறையில் டீசலுக்குப் பதிலாகப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மீதான பயன்பாட்டினை அதிகரிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதைபடிவமற்ற எரிபொருட்களின் பயன்பாட்டுப் பங்கை அதிகரிப்பதற்கும் 2070 ஆம் ஆண்டிற்குள் நிகரப் பூஜ்ஜிய உமிழ்வு கொண்ட நாடாக மாறுவதாகவும் அரசு மேற்கொண்ட ஒரு உறுதிப்பாட்டிற்கு ஏற்ப இந்த இலக்கு நிர்ணயிக்கப் பட்டது.
- குசும் திட்டத்தின் மூலம், வேளாண்மையை சூரிய ஒளி சக்திமயமாக்குவதற்கான திட்டத்தையும் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.
- சூரிய ஒளியில் இயங்கும் நீர்ப்பாசன அமைப்புகளை நிறுவ இத்திட்டம் உதவும்.

## இந்தியாவில் தினை ஏற்றுமதி

- 2020 ஆம் ஆண்டின் தரவுகளின்படி, உலகின் தினை ஏற்றுமதியில் இந்தியா ஐந்தாவது பெரிய நாடாக உள்ளது.
- உலகளவில், அமெரிக்கா, ரஷ்யக் கூட்டமைப்பு, உக்ரைன், இந்தியா, சீனா, நெதர்லாந்து, பிரான்ஸ், போலந்து மற்றும் அர்ஜென்டினா ஆகியவை தினையின் முக்கிய ஏற்றுமதி நாடுகளாக உள்ளன.
- 2020-21 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து தினையை இறக்குமதி செய்வதில் முதல் மூன்று இடங்களில் உள்ள நாடுகள் நேபாளம், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியா ஆகியனவாகும்.
- இந்தியாவிலிருந்துத் தினை ஏற்றுமதி செய்யும் முதல் பத்து இடங்களில் உள்ள நாடுகளின் பட்டியலில் உள்ள மற்ற ஏழு நாடுகள் லிபியா, துனிசியா, மொராக்கோ, ஐக்கிய இராஜ்ஜியம், ஏமன், ஓமன் மற்றும் அல்ஜீரியா ஆகியனவாகும்.

- 2020 ஆம் ஆண்டில் மொத்த உலக உற்பத்தியில் சுமார் 41 சதவீதப் பங்கைக் கொண்டு தினை உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது.
- இந்தியா ஓர் ஆண்டிற்கு சுமார் 12 மில்லியன் மெட்ரிக் டன் அளவில் தினைகளை உற்பத்தி செய்கிறது.




## தொகுதி மறுசீரமைப்பு ஆணையம் – காஷ்மீர்




- ஜம்மு பகுதியில் 37 தொகுதிகளும், காஷ்மீர் பிரிவில் 46 தொகுதிகளும், லடாக்கில் நான்கு தொகுதிகளும் கொண்ட முந்தைய ஜம்மு & காஷ்மீர் மாநிலத்தில் 87 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் இருந்தது.
- இது தவிர, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்த காஷ்மீருக்கு 24 இடங்கள் ஒதுக்கப் பட்டு அவை காலியாக உள்ளன.
- 2019 ஆம் ஆண்டு ஜம்மு & காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட ஆணையை இந்த ஆணையம் அறிவித்துள்ளது.

- இந்த ஆணையம் ஜம்மு காஷ்மீரில் மேலும் ஏழு சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்த்து, அதன் எண்ணிக்கையை 87ல் இருந்து 90 ஆக உயர்த்தியுள்ளது.
- இது ஜம்மு பிராந்தியத்திற்கு மேலும் ஆறு இடங்களை அதிகரித்து அங்குள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை 43 ஆக அதிகரிப்பதற்கு முன்மொழிகிறது.
- இந்த ஆணையம் காஷ்மீர் பிராந்தியத்தில் மேலும் ஒரு தொகுதியைச் சேர்த்து, அங்கு உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை 47 ஆக உயர்த்தியது.
- இந்த ஆணையத்தின் உத்தரவுகள் சட்டத்திற்கு உண்டான ஒரு அதிகாரத்தைக் கொண்டுள்ளதால் இதன் உத்தரவுகளை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் வழக்குப் பதிவு செய்ய முடியாது.

## சார் தாம் திட்டம்

- மூத்த சுற்றுச்சூழல் ஆர்வலர் ரவி சோப்ரா, சார் தாம் திட்டம் தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் உயர்மட்டக் குழுவின் தலைவர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
- இது உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி ஆகிய இந்து புனிதத் தலங்களை இணைக்கும் சுமார் 900 கி.மீ. நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தி விரிவுபடுத்துவதற்கான ஒரு திட்டமாகும்.




## பதவி உயர்வுகளில் இட ஒதுக்கீடு

- மத்திய மற்றும் மாநில அரசுகள் கணக்கீட்டு அளவிலான தரவுகளைச் சேகரிக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை ரத்து செய்ய வேண்டும் என்ற மத்திய அரசின் ஒரு மனுவினை உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
- இந்தத் தரவானது, பதவி உயர்வில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தும் போது, பட்டியலிடப்பட்ட சாதிகள் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) சமூகத்தினருக்கு எத்தனை இடங்கள் ஒதுக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கும்.
- M. நாகராஜ் (2006) மற்றும் ஜர்னைல் சிங் (2018) ஆகிய வழக்குகளில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பின்படி கணக்கீட்டு அளவிலான தரவுகளைச் சேகரிக்க அரசு கடமைப் பட்டுள்ளது.

- ஒட்டு மொத்தப் பணிகளுக்குமான ஒவ்வொரு வகை பதவிகளுக்கும் தரவுச் சேகரிப்பு அவசியமாகும்.
- பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினச் சமூகத்தினர் வகிக்கும் பதவிகளின் சதவீதத்தைக் கண்டறிந்த பிறகு இட ஒதுக்கீட்டுக் கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு காலக்கெடுவை மத்திய அரசு தீர்மானிக்க வேண்டும்.
- பதவி உயர்வு உள்ள பதவிகளில் இடஒதுக்கீட்டுப் பிரிவினருக்குப் போதிய இடங்கள் ஒதுக்கப் படாதது குறித்த மதிப்பீட்டை மாநிலங்களே மேற்கொள்ள வேண்டும்.
- கணக்கீட்டு அளவிலான தரவுகளைச் சேகரிப்பதற்கான ஒரு அலகாக 'கேடர்' (பணி நிலைப் பிரிவு) அங்கீகரிக்கப்பட்ட நிலையில், உச்ச நீதிமன்றம் 2019 ஆம் ஆண்டின் B.K. பவித்ரா என்ற வழக்கில் விதிக்கப்பட்ட ஒரு தீர்ப்பினை ரத்து செய்தது.
- 2019 ஆம் ஆண்டில் B.K. பவித்ரா வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது, கர்நாடக அரசு வேலைவாய்ப்பில் பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப் பட்ட பழங்குடியினச் சமூகத்தினருக்கு மூத்த ஊழியர் முறையை அறிமுகப்படுத்திய 2018 ஆம் ஆண்டின் இட ஒதுக்கீட்டுச் சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையை உறுதி செய்தது.

***கேடர் (பணிநிலைப் பிரிவு) என்பதன் பொருள்***

- 'கேடர்' என்பது ஒரு பணியின் எண்ணிக்கை அல்லது ஒரு தனி அலகாக நிர்ணயிக்கப் பட்ட ஒரு பணியின் (பதவியின்) ஒரு பகுதியைக் குறிக்கிறது.
- கேடர்களை நிர்ணயிப்பது அந்தந்த மாநிலங்களின் விருப்பம் ஆகும்.
- ஒரு பதவியில் இருந்து வேறு நிலையில் உள்ள உயர் பதவிக்கு பதவி உயர்வு செய்வதற்கான நோக்கத்திற்காக முழு பதவியையும் கேடர் என்று கருத முடியாது.
- பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினப் பிரிவினரின் பிரதிநிதித்துவம் தொடர்பான தரவுகள் முழு பணிகளையும் குறிப்பதாக மேற்கொள்ளப் பட்டால், பதவி உயர்வுகளில் இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுவதன் முழு நடைமுறையும் அர்த்தமற்றதாகிவிடும்.

## உலக உணவு திட்ட அமைப்பு - இந்தியா

- 50,000 மெட்ரிக் டன் அளவில் கோதுமையை விநியோகம் செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்துடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது.

- மனிதாபிமான அடிப்படையிலான ஒரு உதவியாக இந்தியா இந்த உதவியை ஆப்கானிஸ்தானுக்கு வழங்குகிறது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, கோதுமைப் பொதிகள் அடங்கிய சரக்குப் பெட்டகங்கள் பாகிஸ்தான் வழியாக ஆப்கானிஸ்தானின் எல்லைப் புறப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு கந்தஹாரில் உள்ள உலக உணவுத் திட்ட அமைப்பின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்.

## கடத்தல் எதிர்ப்பு தினம்

- பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் கடத்தல் மற்றும் கலப்படம் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக இந்திய வணிகம் மற்றும் தொழில்துறை சங்கக் கூட்டமைப்பின் குழு (CASCADE - Committee Against Smuggling and Counterfeiting Activities Destroying the Economy) கடத்தல் எதிர்ப்பு தினத்தைத் தொடங்குவதற்கான ஒரு முயற்சியை எடுத்துள்ளது.
- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 11 அன்று அனுசரிக்கப்படும்.
- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று, முதல்முறையாக கடத்தல் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப் பட்டது.




## இஸ்ரோ - பிஎஸ்எல்வி-சி52




- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது சமீபத்தில் பிஎஸ்எல்வி-சி52 என்ற ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

- இந்த ராக்கெட் இரண்டு சிறிய செயற்கைக் கோள்களையும் EOS - 04 என்ற ஒரு செயற்கைக் கோளையும் விண்ணிற்கு ஏந்திச் சென்றது.
- அந்த இரண்டு சிறிய செயற்கைக் கோள்கள் இன்ஸ்பைர்சாட்- 1 மற்றும் INS - 2TD (ஐஎன்எஸ் - 2டிடி) ஆகியவை ஆகும்.
- இது 2022 ஆம் ஆண்டில் ஏவப்பட்ட முதல் ராக்கெட் ஆகும்.
- EOS - 03 செயற்கைக்கோளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு ஏவப் பட்ட முதல் ராக்கெட் இதுவாகும்.
- கிரையோஜெனிக் எஞ்சினின் மேல் நிலையில் தீப்பொறியை உருவாக்கும் தொழில் நுட்பம் சரியாக செயல்படாததால் EOS - 03 செயற்கைக்கோளை ஏவும் பணி தோல்வி அடைந்தது.
- ஐஎன்எஸ் - 2டிடி என்பது இந்தியா மற்றும் பூடான் ஆகியவை இணைந்து உருவாக்கிய ஒரு செயற்கைக்கோள் ஆகும்.

## சைன்ய ரணசேத்திரம்




- இந்திய ராணுவமானது முதன்முதலாக "சைன்ய ரணசேத்திரம்" என்ற ஒரு ஹேக்கத்தானை நடத்தியது.
- சிம்லாவில் அமைந்துள்ள இராணுவப் பயிற்சிப் பிரிவின் முழு வழிகாட்டுதலின் கீழ், மோவ் எனுமிடத்தில் உள்ள இராணுவத் தொலைத்தொடர்பு பொறியியல் கல்லூரியில் இந்த ஹேக்கத்தான் நடத்தப்பட்டது.
- சிம்லாவில் அமைந்துள்ள இராணுவப் பயிற்சிப் பிரிவானது இந்திய இராணுவத்தின் ஏழு படைப் பிரிவுகளுள் ஒன்றாகும்.

## உலகளாவிய தொழில் முனைவோர் கண்காணிப்பு அறிக்கை

- புதிய தொழில் தொடங்குவதற்கு ஏற்ற நாடுகள் அடங்கியப் பட்டியலின் முதல் ஐந்து இடங்களில் இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.
- இது 2021/2022 ஆம் ஆண்டு உலகளாவியத் தொழில்முனைவோர் கண்காணிப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

- உலக அளவில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- சவுதி அரேபியா முதல் இடத்திலும் அதைத் தொடர்ந்து நெதர்லாந்து & ஸ்வீடன் ஆகிய நாடுகளும் உள்ளன.




## மாநிலக் காவல் படைகளை நவீன மயமாக்கல்




- மாநிலக் காவல் படைகளை நவீனமயமாக்கும் ஒரு திட்டத்தை 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர்வதற்கு வேண்டி அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திட்டமானது 1969-70 ஆம் ஆண்டிலிருந்து உள்துறை அமைச்சகத்தினால் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தின் நோக்கம், உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் சட்டம்-ஒழுங்கு நிலைமைகள் தொடர்பான சிக்கல்களைச் சமாளிப்பதற்காக மாநில அரசுகள் ராணுவம் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளைச் சார்ந்திருப்பதைப் படிப் படியாகக் குறைப்பதாகும்.
- மாநிலக் காவல் படைகளுக்கு போதுமான அளவில் உபகரணங்கள் வழங்குவதன் மூலமும் அவற்றின் பயிற்சி உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலமும் இந்த நோக்கமானது நிறைவு செய்யப்படும்.

## கச்சா பாமாயில் இறக்குமதி மீதான வரி குறைப்பு

- கச்சா பாமாயில் இறக்குமதி மீதான வரியை 7.5 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக மத்திய அரசு குறைத்துள்ளது.
- வரி விகிதக் குறைப்பானது "வேளாண் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வரி (AIDC - agriculture infrastructure and development cess)" என்றும் அழைக்கப்படுகிறது.
- இது சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி மீதான வரி மற்றும் கச்சா பாமாயில் இறக்குமதி மீதான வரி ஆகியவற்றிற்கு இடையே உள்ள ஒரு இடைவெளியை விரிவுபடுத்தும்.
- இந்த வரிக் குறைப்பானது இந்தியச் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு கச்சா பாமாயில் இறக்குமதி செய்வதை மலிவானதாக ஆக்குகிறது.

## இந்தியாவின் மிகப்பெரிய வங்கி மோசடி




- 22,842 கோடி ரூபாய் நிதி மோசடியில் ஈடுபட்டதாக ABG கப்பல் கட்டும் நிறுவனம் மீது மத்திய புலனாய்வுப் பிரிவு வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளது.
- ABG கப்பல்கட்டும் நிறுவனமானது ABG குழுமத்தின் முதன்மையான நிறுவனமாகும்.
- இந்த நிறுவனமானது 28 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அடங்கிய குழுவை ஏமாற்றி ரூ. 22,842 கோடி அளவில் மோசடி செய்துள்ளது.
- மத்தியப் புலனாய்வுத் துறை பதிவு செய்த மிகப்பெரிய வங்கி மோசடி வழக்கு இதுவே ஆகும்.

## சாதிக் கணக்கெடுப்பு தரவுத் தளங்கள் ஒருங்கிணைப்பு

national health authority

- தேசிய சுகாதார ஆணையமானது, தனது தரவுத் தளத்தினை மேம்படுத்துவதற்காக வேண்டி பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் தரவுத் தளங்களை ஒருங்கிணைக்கும் ஒரு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
- திட்டங்களை சிறந்த முறையில் அமல்படுத்தும் முயற்சியில் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகிறது.
- ஆதார் பெரும்பாலான அரசு தரவுத் தளங்களில் ஒரு பொதுவான அடையாளமாக உள்ளது.
- இது சாதி ரீதியிலான கணக்கெடுப்புத் தரவுத் தளங்களை ஒருங்கிணைக்க உதவும்.
- e-kyc மூலம் பயனாளிகளை அடையாளம் காணுதல் பற்றிய உறுதித் தன்மையையும் ஆதார் உறுதிப்படுத்தும்.

## வேத பள்ளிகள் மற்றும் மதராசக்களை கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான மனு

- வேத பள்ளிகள், மதராசாக்கள் மற்றும் சமயக் கல்வியை வழங்கி வரும் நிறுவனங்கள் ஆகியவற்றைத் தனது சட்ட வரம்பிலிருந்து விலக்கிய 2009 ஆம் ஆண்டு கல்வி உரிமைச் சட்டத்தின் சட்டப் பிரிவுகளை எதிர்த்து தொடரப்பட்ட மனுவினை விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது.
- விலக்கப்பட்ட நிறுவனங்கள் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மேற்கொள்ளப் பட்ட திருத்தத்தின் மூலம் 2009 ஆம் ஆண்டு சட்டத்தில் சேர்க்கப்பட்டது என்றும் கடந்து 10 ஆண்டுகளில் எந்தவொரு சர்ச்சையும் ஏற்படவில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

***விவகாரம்***

- ஒரு குழந்தையின் கல்வி உரிமையை இலவசக் கல்விக்கு மட்டும் உட்படுத்தாமல், குழந்தையின் சமூக – பொருளாதார மற்றும் கலாச்சாரப் பின்னணி சார்ந்த பாகுபாடு இல்லாத ஒரு தரமான மற்றும் சமமான கல்வியை வழங்க வேண்டும் என்று மனுதாரர் கூறியுள்ளார்.

## டாபர் இந்தியா நிறுவனம்

- பொதி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்யும் டாபர் இந்தியா நிறுவனம் நெகிழிக் கழிவுகளை சுழியப் படுத்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- நடப்பு நிதியாண்டில், நுகர்வோர் பயன்படுத்திய சுமார் 27,000 மெட்ரிக் டன் நெகிழிக் கழிவுகளைச் சேகரித்து, அதைச் செயல்முறைக்கு உட்படுத்தி, மறுசுழற்சி செய்ததை அடுத்து இந்தச் சாதனையை அந்த நிறுவனம் எட்டியது.

## இந்தியாவின் G20 தலைமைத்துவத்திற்கான செயலகம்




- இந்தியா ஏற்க உள்ள G20 தலைமைத்துவத்தினைச் சரிவர மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் ஒட்டு மொத்தக் கொள்கை முடிவுகளை அமல்படுத்துவதற்கான பொறுப்பினை வகிக்கும் அதன் அறிக்கையிடல் அமைப்புகள் மற்றும் G20 செயலகம் ஆகியவற்றை நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இந்திய நாடானது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 01 முதல் 2023 ஆம் ஆண்டு நவம்பர் 30 வரையில் G20 அமைப்பின் தலைமைத்துவத்தினை ஏற்கும்.
- இது 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற உள்ள உச்சி மாநாட்டுடன் நிறைவு அடையும்.
- G20 என்பது உலகப் பொருளாதார நிர்வாகத்தில் முக்கியப் பங்கினை வகிக்கும் ஒரு சர்வதேச பொருளாதாரக் கழகத்திற்கான முதன்மை மன்றமாகும்.

## இந்தியாவில் குறைகடத்திகள் உற்பத்தி – வேதாந்தா நிறுவனம்




- இந்தியாவின் முன்னணிச் சுரங்க நிறுவனமான வேதாந்தா, இந்தியாவில் குறை கடத்திகளை உற்பத்தி செய்வதற்கான ஒரு கூட்டு நிறுவனத்தினை உருவாக்கச் செய்வதற்காக ஹோன் ஹாய் தொழில்நுட்பக் குழுமம் (ஃபாக்ஸ்கான் எனப்படும்) என்ற தாய்வான் நாட்டு மின்னணுத் தயாரிப்பு நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.
- குறைகடத்திகள் மற்றும் திரைகள் தயாரிப்பிற்கான ரூ. 76,000 கோடி உற்பத்தி சார்ந்த ஊக்கத் தொகையை அரசு அறிவித்ததையடுத்து மின்னணு தயாரிப்புத் துறையில் தொடங்கப்படும் முதல் கூட்டு நிறுவனம் இதுவாகும்.
- இந்தக் கூட்டு நிறுவனத்தில் மிகப் பெரும்பான்மையான பங்குகளை வேதாந்தா நிறுவனமும் சிறுபான்மையான பங்குகளை ஃபாக்ஸ்கான் நிறுவனமும் கொண்டு இருக்கும்.

## அறிவிக்கப்படாத பழங்குடியினரின் பொருளாதார அதிகாரமளிப்பிற்கான திட்டம்




- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர், டாக்டர். வீரேந்திர குமார், "அறிவிக்கப்படாத பழங்குடியினரின் பொருளாதார அதிகாரமளிப்பிற்கான திட்டம்" என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டமானது புதுடெல்லியில் உள்ள அம்பேத்கர் சர்வதேச மையத்தில், அறிவிக்கப் படாத, நாடோடி மற்றும் பருவகால நாடோடிகளின் நலனுக்காக தொடங்கப்பட உள்ளது.

## உலகளாவிய நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு




- ❖ எரிசக்தி மற்றும் வள ஆதாரங்கள் நிறுவனத்தின் உலகளாவிய நிலையான மேம்பாட்டு உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தொடக்க உரை ஆற்றினார்.
- ❖ இது இந்த நிறுவனத்தினால் நடத்தப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- ❖ நிலையான மேம்பாடு, நிலையான உற்பத்தி, பருவநிலை மாற்றம், உலகப் பொது மக்கள், ஆற்றல் பரிமாற்றங்கள் மற்றும் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் போன்ற பரவலான சிக்கல்கள் பற்றிய விவாதங்கள் இந்த மாநாட்டில் இடம் பெறும்.
- ❖ இந்த ஆண்டின் உச்சி மாநாடானது புதுடெல்லியில் நடைபெறுகிறது.
- ❖ இந்த ஆண்டிற்கான கருத்துரு, "நெகிழ்திறன் கொண்ட ஒரு கோளினை நோக்கி : நிலையான மற்றும் சமமான எதிர்காலத்தினை உறுதி செய்தல்" (Towards a Resilient Planet: Ensuring a Sustainable and Equitable Future) என்பதாகும்.

## சவுதி தரைப்படைத் தளபதியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தியப் பயணம்



- ❖ சவுதி தரைப்படைத் தளபதியான, லெஃடினன்ட் ஜெனரல் பஹத் பின் அப்துல்லா முகமது அல்-முத்தைர் (Fahd Bin Abdullah Mohammed Al-Mutair) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதல் பயணமாக 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 14 அன்று இந்தியா வந்தார்.
- ❖ இந்த 3 நாள் பயணமானது, சவுதி தரைப் படையில் பணியிலிருக்கும் ஒரு படைத் தளபதி இந்தியாவிற்கு வருகை புரிவது இதுவே முதல்முறையாகும்.
- ❖ இந்தியாவிற்கும் சவுதி அரேபியாவிற்குமிடையே வளர்ந்து வரும் இருதரப்பு பாதுகாப்பு உறவுகளுக்கு இது சான்றாகும்.

## தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர்

- 26/11 தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து (2008 மும்பை தாக்குதல்) நாட்டின் கடல்சார் பாதுகாப்பினை அதிகரிக்க இந்தியா தொடர்ந்து முயற்சித்து வருகிறது.
- இது தொடர்பாக, அரசானது நாட்டின் முதல் தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளராக கடற்படைத் துணை அதிகாரி (ஓய்வு) G. அசோக் குமாரினை நியமித்துள்ளது.
- நாட்டு நலனைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு நாட்டின் பல்வேறு பாதுகாப்பு அமைப்புகளிடையே ஒற்றுமையை உறுதி செய்யும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- இவர் தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் அஜித் தோவல் தலைமையிலான தேசிய பாதுகாப்புச் சபையுடன் இணைந்து பணியாற்றுவார்.



## இந்திய – ஆஸ்திரேலிய எரிசக்தி பேச்சுவார்த்தை

- 4வது இந்திய – ஆஸ்திரேலிய எரிசக்தி பேச்சுவார்த்தைக்கு மத்திய ஆற்றல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் R.K. சிங் மற்றும் ஆஸ்திரேலிய எரிசக்தி மற்றும் உமிழ்வு குறைப்பு அமைச்சர் அங்குஸ் டெய்லர் ஆகியோர் தலைமை தாங்கினர்.
- இந்தப் பேச்சுவார்த்தையில் எரிசக்தி மாற்றம் என்பது பற்றியே பிரதான அம்சமாக விவாதிக்கப் பட்டது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல், எரிசக்தி செயல்திறன், சேமிப்பு, மின்சார வாகனங்கள், முக்கிய கனிமங்கள், சுரங்கத் துறை போன்றவற்றின் மீதான சிறப்பு கவனத்துடன் தத்தமது நாடுகளின் எரிசக்தி மாற்ற நடவடிக்கைகளைப் பற்றி இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.
- வளர்ந்து வரும் நாடுகள் தங்களது எரிசக்தி மாற்ற இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு பருவநிலை நிதி அவசியம் என்பது பற்றியும் இந்தியா எடுத்துரைத்தது.
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில் நுட்பங்களின் உற்பத்தி விலையைக் குறைத்தல் மற்றும் உலக உமிழ்வினைக் குறைப்பதற்கு இணங்குதல் ஆகியன குறித்த ஒரு ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.




## இந்தியாவில் சூரிய சக்திக் கழிவுகளைக் கையாளுதல்




- இந்தியாவில் சூரியசக்தி உற்பத்தித் திறன் அதிகரித்து வரும் நிலையில், சூரியசக்தி தகடுகள் மற்றும் அதன் தயாரிப்புச் செயல்முறைகளிலிருந்து உருவாக்கப்படும் கழிவுகளைக் கையாளுவதற்கான தகுந்த கொள்கையானது இந்தியாவிடம் இல்லை.
- இந்தியாவில் சூரியசக்தி கழிவுகளானது தேவையற்ற கழிவுகளாக விற்கப்படுகின்றன.
- இவற்றைச் சரிவர மறுசுழற்சி செய்யாவிடில் இது சூரியசக்தி மின்கழிவுகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.
- தமிழ்நாட்டிலுள்ள கும்மிடிப்பூண்டியில் சூரியசக்தி மின்கழிவுகளைச் சேகரித்து அதை மறுசுழற்சி செய்வதற்காக வேண்டி ஒரு தனியார் நிறுவனமானது நிறுவப்பட்டுள்ளது.

## 4 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குத் தலைக்கவசம் அவசியம்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது, 4 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இரு சக்கர வாகனத்தில் பயணிக்கும் போது தலைக் கவசம் மற்றும் பாதுகாப்பு உடை ஆகியவற்றை அணிய வேண்டும் என்ற சில புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது.

- இந்தப் புதிய விதிகளின்படி, 4 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஏற்றிச் செல்லும் மோட்டார் சைக்கிள்களின் வேகமானது மணிக்கு 40 கி.மீ வேகம் என்ற வரம்பிற்குள் இருக்க வேண்டும்.
- புதிய கட்டுப்பாடுகளின்படி, கவச உடையானது எடை குறைந்ததாகவும், நீடித்ததாகவும், நைலானால் செய்யப்பட்டதாகவும் 30 கிலோ எடை வரை தாங்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

## விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம்




- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவை இணைந்து, காணொலி வாயிலாக நடைபெற உள்ள ஓர் உச்சி மாநாட்டின் போது ஒரு விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தத்தினை மேற்கொள்ள உள்ளன.
- இந்தக் காணொலி வாயிலான உச்சி மாநாடானது அபுதாபியின் பட்டத்து இளவரசர் சேக் முகமது பின் சையது அல் நஹ்யன் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரிடையே நடைபெற உள்ளது.

*குறிப்பு*

- ஐக்கிய அரபு அமீரகம் நிறுவப்பட்டதன் 50 ஆண்டுகள் நிறைவடையும் அதே சமயத்தில் இந்தியா விடுதலை பெற்றதன் 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறது.

## கழிவிலிருந்து வளங்களை உருவாக்கல்

- இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியானது, மேற்கு வங்கத்தில் உள்ள சுந்தர்பன் பகுதியில் வாழும் பெண்களுக்காக 'கழிவிலிருந்து வளங்களை உருவாக்குதல்' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் பெண்கள் மீன்களின் செதில்களிலிருந்து ஆபரணங்கள் மற்றும் காட்சிப் பொருட்களை செய்வர்.
- இது இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியினால் தொடங்கப்பட்ட, கைவினைத் தொழில் நீடித்து நிலைப்பதற்கு, ஆதரவளிக்கும் ஒரு நோக்கம் கொண்ட ஸ்வலம்பன் (Swavalamban) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.




## ஃபின்டெக் ஓபன் மாதாந்திர உச்சி மாநாடு




- இது நிதித் தொழில்நுட்ப தொழில் வல்லுநர்கள், ஆர்வலர்கள், கட்டுப்பாட்டு அமைப்புகள், தொழில்துறைத் தலைவர்கள், புத்தாக்க நிறுவன சமூகத்தினர் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோரை ஒரு பொதுவான தளத்தில் ஒன்றிணைப்பதற்கான இத்தகைய முதல் முயற்சியாகும்.
- இந்தப் பொதுவான தளத்தில் தொழில் வல்லுநர்கள், தலைவர்கள் மற்றும் புத்தாக்க நிறுவன சமூகத்தினர் ஒன்றிணைந்து கருத்துகளைப் பரிமாறிப் புதுமைகளைப் படைக்கின்றன.
- இது நிதி ஆயோக் நிறுவனத்தினால் தொடங்கப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டின் முக்கிய சிறப்பம்சமானது இந்தியாவின் மிகப்பெரிய நிதித் தொழில்நுட்ப ஹேக்கத்தான் ஆகும்.
- நிஜ உலகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் கொண்ட தனிப்பட்ட தயாரிப்பாளர்கள் மற்றும் புத்தாக்க நிறுவன சமூகங்களுக்கு முக்கிய யோசனைகளை வழங்குவதற்கு இது ஒரு வாய்ப்பினை வழங்கும்.
- நிதி ஆயோக்கின் ஃபின்டெக் மாதத்தின் கருத்துரு. 'OPEN' என்பதாகும்.

## INSACOG வலையமைப்பின் விரிவாக்கம்

- கோவிட் – 19 தொற்றினை எதிர்ப்பதற்காக இந்தியா தனது SARS – CoV – 2 மரபணு குழும வலையமைப்பினை அண்டை நாடுகளுக்கும் விரிவுபடுத்துவதாக இந்தியா சமீபத்தில் அறிவித்தது.
- INSACOG என்பது மரபணுப் பகுப்பாய்வு மற்றும் கண்காணிப்பிற்கான ஆய்வகங்களின் ஒரு வலையமைப்பு ஆகும்.
- TRIPS முறையினைத் தள்ளுபடி செய்யும் ஒரு திட்டத்தினை அமல்படுத்துவதற்காகவும் வேண்டி இந்தியா செயலாற்றும்.
- பிராந்தியச் சந்தைகளில் அதன் உள்நாட்டு உற்பத்தியை பன்முகப்படுத்துவதற்காக வேண்டி தென் ஆப்பிரிக்காவினால் இதற்கு ஆதரவு அளிக்கப் படுகின்றது
- இந்தியா 97 நாடுகள் மற்றும் 2 ஐ.நா. அமைப்புகளுக்கு 162 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகளை வழங்கியுள்ளது.
- இதில் மியான்மர் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகளும் அடங்கும்.
- 2022 ஆம் ஆண்டில் இந்திய – பசிபிக் பகுதிகளில் கோவிட் – 19 தடுப்பூசிகளை விநியோகிப்பதற்காக இந்தியா குவாட் நாடுகளுடன் இணைந்து செயல்படுகிறது.

## நீர்வழி வாடகை வாகனம் – மும்பை

- மும்பை மற்றும் நவி மும்பை ஆகியவற்றுக்கு இடையே நீர்வழி வாடகை வாகனச் சேவையை மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்திற்கு சாகர்மாலா திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்டது.
- இது இந்தியாவில் இம்மாதிரியிலான முதல் திட்டமாகும்.
- புதிதாகத் திறக்கப்பட்ட இந்த நீர்வழியானது, பேலாப்பூர், நெருல் மற்றும் எலிபெண்டா தீவுகள் ஆகிய பகுதிகளுக்கு நீர்வழி வாடகை வாகனச் சேவையைக் கொண்டு சேர்க்க வழி வகுக்கும்.

- முதல் முறையாக, மும்பை மற்றும் நவி மும்பை ஆகியவை பயண நேரத்தைக் குறைக்கும் வகையிலான, நம்பகமான மற்றும் விரைவான ஒரு போக்குவரத்துச் சேவையினால் இணைக்கப்பட உள்ளன.




## உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் பாதை இணைப்புத் திட்டம்




- இந்திய இரயில்வேயானது, உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் இணைப்பு (USBRL) திட்டத்தின் கீழ் T-49 என்ற முக்கிய மற்றும் நீளமான சுரங்கப் பாதையை இணைத்தது.
- T-49 சுரங்கப்பாதையானது உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் பாதை இணைப்புத் திட்டத்தின் கீழ் கத்ரா-பனிஹால் பிரிவின் சம்பர் மற்றும் அர்பிஞ்சலா நிலையத்திற்கு இடையே அமைந்துள்ளது.
- இது 12.758 கி.மீ. நீளமுள்ள ஒரு சுரங்கப்பாதையாகும்.
- இந்திய இரயில்வேயினால் நிறுவப்பட்ட ஒரு மிக நீளமான சுரங்கப் பாதையாக இது திகழும்.
- பனிஹால்-காசிகுண்ட் என்ற பிரிவில் உதம்பூர்-ஸ்ரீநகர்-பாரமுல்லா இரயில் பாதை இணைப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட 11.2 கி.மீ. நீளமுள்ள பீர் பஞ்சால் சுரங்கப் பாதையின் சாதனையை இது விஞ்சியுள்ளது.

## புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம்




- 2022-2027 ஆம் நிதியாண்டிற்கான "புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம்" என்ற ஒரு புதிய திட்டத்திற்குக் கல்வி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை மற்றும் 2021-22 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் அறிவிப்புகள் ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் வயது வந்தோருக்கான கல்வியைச் சீரமைப்பதை இந்தத் திட்டம் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம், நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வியறிவு இல்லாதவர்களுக்குப் பயனளிக்கும்.
- அரசாங்கம் இப்போது நாட்டில் "வயது வந்தோர் கல்வி" என்ற ஒரு வாக்கியத்திற்குப் பதிலாக 'அனைவருக்கும் கல்வி' என்ற ஒரு வாக்கியத்தைக் கொண்டு அதனை மாற்றி உள்ளது.

## ஆசியாவின் மிகப்பெரிய உயிரி அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு ஆலை

- இந்தூரில் அமைக்கப்பட்டுள்ள ஆசியாவின் மிகப்பெரிய உயிரி அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு ஆலையைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைக்க உள்ளார்.
- இந்தியாவின் தூய்மையான நகரங்களில் ஒன்றாக இந்தூர் கருதப்படுகிறது.
- இந்த ஆலை திறக்கப்படுவது, தூய்மையில் மற்றொரு உயர் தரத்தை அமைக்கும்.
- இந்த ஆலையானது 100 சதவீதம் ஈரக் கழிவுகளை (wet wastes) பயன்படுத்தி இயக்கப் படும்.



## இந்தியச் சுற்றுலா குறிக்கோள் ஆவணம் 2035

- இந்தியச் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சங்கங்களின் கூட்டமைப்பானது 2035 ஆம் ஆண்டு குறிக்கோள் ஆவணத்தை வெளியிட்டுள்ளது.
- 2035 ஆம் ஆண்டிற்குள் இந்தியச் சுற்றுலாவை உலகமே விரும்பக் கூடியதாக மாற்றச் செய்வதற்கான இலக்குகள் மற்றும் அவற்றைச் செயல்படுத்தும் ஒரு பாதையை இது உள்ளடக்கியுள்ளது.
- இந்தியச் சுதந்திரத்தின் 75வது ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் இந்தக் குறிக்கோள் ஆவணமானது வெளியிடப் பட்டுள்ளது.
- இது சுற்றுலாவை ‘இந்தியாவிற்கான சமூக-பொருளாதார ரீதியில் வேலை மற்றும் உள்கட்டமைப்பை உருவாக்கும் ஒரு துறையாகவும்’ 'நிலையான மற்றும் உள்ளார்ந்த சூழலமைவினை உருவாக்குவதற்கான ஒரு மாதிரியாகவும்' நிலை நிறுத்துவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்திய இராணுவம் கண்டறிந்த வளைந்த கால் விரல் கொண்ட மரப் பல்லி



- மேகாலயாவின் ரி-போய் மாவட்டத்தில் உள்ள உம்ரோய் என்ற ராணுவ மையத்தில், வளைந்த கால் விரல் கொண்ட மரப் பல்லி அல்லது பல்லியின் ஒரு புதிய இனத்தை ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று சமீபத்தில் கண்டறிந்தது.

- மரப் பல்லி அல்லது பல்லியின் இந்தப் புதிய இனமானது சிர்டோடாக்டைலஸ் எக்ஸர்சிடஸ் என்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்ததாகும் ('எக்ஸர்சிடஸ்' என்றால் லத்தீன் மொழியில் இராணுவம் என்று பொருள்படும்).
- இந்தியாவிற்குச் சேவை செய்த இந்திய ராணுவத்தின் வீரத்தைப் போற்றும் வகையில், இந்த இனத்திற்கு இப்பெயரானது சூட்டப்பட்டுள்ளது.

## பசுமை அம்மோனியா கொள்கை

- எரிசக்தி அமைச்சகமானது பசுமை ஹைட்ரஜன்/பசுமை அம்மோனியா என்ற ஒரு கொள்கையை அறிவித்துள்ளது.
- இந்தக் கொள்கையானது பசுமை ஹைட்ரஜன் மற்றும் அம்மோனியா உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹைட்ரஜன் மற்றும் அம்மோனியா ஆகியவை எதிர்காலத்தில் புதைபடிவ எரிபொருட்களுக்குப் பதிலாக பயன்படுத்தப்படவுள்ள ஒரு எரிபொருளாகக் கருதப் படுகின்றன.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து பெறப்படும் ஒரு எரிசக்தியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் எரிபொருட்கள் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அம்மோனியா என்று அழைக்கப்படுகிறது.
- பசுமை ஹைட்ரஜன் நீரின் மின்னாற்பகுப்பால் (water electrolysis) உருவாக்கப்படுகிறது.
- இது தண்ணீரை ஹைட்ரஜனாகவும் ஆக்ஸிஜனாகவும் பிரிக்கும் ஒரு நுட்பமாகும்.
- அம்மோனியா என்பது விவசாய உரங்களில் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஒரு வாயு ஆகும்.
- நீர் மின்னாற்பகுப்பிலிருந்துப் பெறப்படும் ஹைட்ரஜனையும் காற்றிலிருந்து பெறப் படும் நைட்ரஜனையும் பயன்படுத்தி பசுமை அம்மோனியா தயாரிக்கப்படுகிறது.



## சோயா எண்ணெய் இறக்குமதி

- வறட்சியால் பாதிக்கப்பட்ட தென் அமெரிக்காவில் இருந்து சரக்கு வரத்து குறைவாக இருப்பதால், இந்திய ஏற்றுமதியாளர்கள் அமெரிக்காவில் இருந்து 100,000 டன் சோயா எண்ணெயை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளனர்.
- உலகின் மிகப்பெரிய சமையல் எண்ணெய் இறக்குமதியாளராக இந்தியா உள்ளது.
- இந்தியா பொதுவாக பிரேசில் மற்றும் அர்ஜென்டினாவிலிருந்து சோயா எண்ணெயை வாங்குகிறது.
- ஆனால் இந்த இரண்டு முன்னணி உற்பத்தி நாடுகளில், இந்த ஆண்டில் குறைவான அளவே சோயா உற்பத்தி செய்யப்பட்டதன் காரணமாக, சோயா எண்ணெய் இறக்குமதிக்காக அமெரிக்காவின் உற்பத்தியாளர்களுடன் ஒரு ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்கு வேண்டிய ஒரு கட்டாய நிலை இந்தியாவிற்கு ஏற்பட்டது.

## உணவு தானிய உற்பத்தி

- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகமானது 2021-22 ஆம் ஆண்டிற்கான முக்கியப் பயிர்களின் மீதான உற்பத்தியின் இரண்டாவது முன்மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- உணவு தானிய உற்பத்தியானது 316.06 மில்லியன் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.




## நெகிழி உறை தொடர்பான உற்பத்தியாளர்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட பொறுப்புகள் குறித்த வழிகாட்டுதல்கள்

- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது நெகிழி உறைகள் தொடர்பான உற்பத்தியாளர்களுக்கான விரிவுபடுத்தப்பட்ட பொறுப்புகள் குறித்த சில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது 2010 ஆம் ஆண்டு நெகிழிக்கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் வழங்கப் பட்டு உள்ளது.
- இந்த வழிகாட்டுதல்கள் நெகிழிக் கழிவு மேலாண்மைத் தொழில்துறையினை முறைப் படுத்துதல் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உதவும்.




## கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பு

- இது நான்கு நாட்கள் அளவிலான ஒரு உலகளாவிய நிகழ்வாகும்.
- இதன் முதல் நாளானது கர்நாடகா முழுவதும் காணப்படும் 251 பறவை இனங்கள் பற்றி குடிமக்கள் மத்தியில் பதிவு செய்யும் நிகழ்வுடன் தொடங்கியது.
- இது இணைய வழியிலான குடிமக்கள் சார்ந்த அறிவியல் அல்லது சமூகம் சார்ந்த ஒரு அறிவியல் திட்டமாகும்.
- இது 1998 ஆம் அண்டில் கார்னல் பறவையியல் ஆய்வகம் மற்றும் தேசிய அதுபோன் சொசைட்டியினால் (National Audubon Society) முதன்முதலில் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.
- உலகப் பறவை இனங்களின் வருடாந்திர இடம்பெயர்தலில் ஒன்று நிகழ்வதற்கு முன்பாகவே அவற்றைப் பற்றி சரியாக புரிந்து கொள்வதற்கு அறிவியலாளர்களுக்கு இது உதவுகிறது என்பதே இந்த நிகழ்வின் ஒரு முக்கிய அம்சமாகும்.
- இது பற்றிய தரவுகள் உலகின் மிகப்பெரிய உயிரிப் பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான குடிமக்கள் சார்ந்த ஒரு அறிவியல் (சமூகம் சார்ந்த) திட்டமான ‘இபெர்டு’ (eBird) என்பதுடன் இணைக்கப் பட்டுள்ளது.



## பிரம்மோஸ் மீயொலி சீர்வேக ஏவுகணை




- இந்தியக் கடற்படையின் ஒரு போர்க் கப்பலான INS விசாகப் பட்டினம் என்ற ஒரு கப்பலிலிருந்து, மேற்கத்தியக் கடற்பகுதியில் பிரம்மோஸ் மீயொலி சீர்வேக ஏவுகணையின் கடல்பரப்பிற்கு ஏற்ற வடிமானது சோதனை செய்யப்பட்டது.
- INS விசாகப்பட்டினம் என்றக் கப்பலானது, இந்தியக் கடற்படையின் புதிய மற்றும் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட ரேடார் கருவிக்குப் புலப்படாத தொழில்நுட்பம் கொண்ட ஒரு ஏவுகணை அழிப்புக் கப்பலாகும்.
- பிரம்மோஸ் என்பது இந்தியக் கடற்படையின் போர்க் கப்பல்களின் முக்கிய ஆயுத அமைப்பாகும்.

## நீர்பிடிப்புப்பகுதி மேலாண்மைத் திட்டம்

- இந்திய அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை 115 மில்லியன் மதிப்பிலான ஒரு கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இது கர்நாடகா மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் "புதுமையான மேம்பாடுகள் மூலமாக வேளாண் நெகிழ்திறனுக்காக நீர்நிலைகளைப் புதுப்பித்தல்" திட்டத்தினை அமல்படுத்துவதற்கானதாகும்.
- இந்தத் திட்டமானது கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் நில வளங்கள் துறை மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் ஒரு முன்னெடுப்பாகும்.
- இது 2021 முதல் 2026 வரையில் 6 ஆண்டுகள் அளவிலான ஒரு திட்டமாக முன்மொழியப் பட்டுள்ளது.
- இது உலகிலுள்ள மிகப்பெரிய நீர்நிலை மேலாண்மைத் திட்டங்களுள் ஒன்றாகும்.
- இத்திட்டத்திற்கு உலக வங்கி 70% நிதியும் மாநில அரசுகள் 30% நிதியினையும் (70:30) வழங்க உள்ளன.

## ஆயுத உரிமம் ஸ்மார்ட் கார்டு

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா டெல்லிக் காவல்துறையின் ஸ்மார்ட் கார்டு வகையிலான ஆயுத உரிமம் மற்றும் "சாஸ்த்ரா செயலி" ஆகியவற்றை வெளியிட்டார்.
- இது டெல்லிக் காவல்துறையின் 75வது ஆண்டு விழாவின் போது வெளியிடப்பட்டது.

- இதன் மூலம் இந்தியாவில் ஸ்மார்ட் அட்டை என்ற சேவையை அறிமுகம் செய்த முதல் காவல் துறையாக டெல்லிக் காவல்துறை மாறியுள்ளது.




## 'மேரி பாலிசி மேரி ஹாத்'




- வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகமானது 'மேரி பாலிசி மேரி ஹாத்' என்ற திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- இது பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் விவசாயிகளிடம் பயிர்க் காப்பீட்டு அம்சங்களை அவர்களது வீடு தேடிச் சென்று வழங்குவதற்கான ஒரு திட்டம் ஆகும்.

- அனைத்து விவசாயிகளும் பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனாவின் கீழ் தங்களது காப்பீட்டு அம்சங்கள், நில ஆவணங்கள், உரிமை கோரல் மற்றும் குறை தீர்ப்பு ஆகியவை பற்றிய அனைத்துத் தகவல்களையும் அறிந்திருப்பதை உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.
- பிரதான் மந்திரி ஃபசல் பீமா யோஜனா திட்டமானது இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பயிரிழப்பு/சேதத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் அமல்படுத்தப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.
- இது மத்தியப் பிரதேசத்தின் சேஹோர் என்னுமிடத்தில் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

## டெலாய்ட் CXO நிலைத்தன்மை அறிக்கை 2022

- பருவநிலை குறித்து கவனம் செலுத்துவதில் இந்திய வணிக நிறுவனங்கள் 5வது இடத்தில் உள்ளன.
- ‘டெலாய்ட் CXO (முதன்மை அனுபவ அதிகாரி) நிலைத்தன்மை அறிக்கை 2022 : குறிக்கோள் மற்றும் தாக்கத்திற்கு இடையிலான துண்டிப்பு’ என்ற ஒரு அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது டெலாய்ட் ட்ச் டோமாட்ச லிமிடெட் என்ற நிறுவனத்தினால் வெளியிடப் பட்டது.
- இந்த நிறுவனமானது டெலாய்ட் குளோபல் எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்த அறிக்கையானது, பருவநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை குறித்து வணிகத் தலைவர்கள் மற்றும் நிறுவனங்கள் செலுத்தும் கவனத்தினை மதிப்பிடுகிறது.
- மேலும், ஒரு நிறுவனத்தின் குறிக்கோளுக்கும் அதன் தாக்கத்திற்கும் இடையே உள்ள ஒரு துண்டிப்பினைப் பற்றி ஆய்வு செய்தல் மற்றும் இந்த இடைவெளியை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றில் முதன்மை அனுபவ அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றியும் இந்த அறிக்கையானது ஆய்வு செய்கிறது.

## RUSA திட்டம்

- கல்வித் துறை அமைச்சகமானது, ராஷ்டிரிய உச்சதார் சிக்சா அபியான் என்ற ஒரு திட்டத்தை (RUSA) 2026 ஆம் ஆண்டு வரை தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- RUSA திட்டமானது மத்திய அரசின் நிதியினைப் பெறும் ஒரு திட்டமாகும்.
- தரம், சிறந்து விளங்குதல் மற்றும் அணுகும் நிலை போன்ற இலக்குகளை அடையச் செய்வதற்காக மாநில அரசுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு நிதி வழங்குவதற்காக இத்திட்டமானது தொடங்கப்பட்டது.

Rashtriya Uchchatar Shiksha Abhiyan

### நட்சத்திரப் பிரச்சாரகர்கள்

- தற்போது 5 மாநிலங்களில் நடைபெற்று வரும் சட்டமன்றத் தேர்தல்களில், தேர்தல் பிரச்சாரங்களில் ஒரு கட்சி களமிறக்க வேண்டிய நட்சத்திரப் பிரச்சாரகர்களின் அதிக பட்ச எண்ணிக்கையினை இந்தியத் தேர்தல் ஆணையம் மறுசீரமைத்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுக்கான நட்சத்திரப் பிரச்சாரகர்களின் எண்ணிக்கையை 40லிருந்து 30 ஆகவும் அங்கீகரிக்கப் படாத கட்சிகளுக்கான நட்சத்திரப் பிரச்சாரகர்களின் எண்ணிக்கையை 20லிருந்து 15 ஆகவும் தேர்தல் ஆணையம் குறைத்தது.
- பிரச்சாரத்தின் போது பெரும் மக்கள் கூட்டம் கூடுவதைத் தடுப்பதற்காக வேண்டி இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியாவின் கோவிட்-19 தொற்றுநோய்ப் பாதிப்புகளின் எண்ணிக்கை குறைந்து உள்ளதையடுத்து, நட்சத்திரப் பிரச்சாரகர்களின் எண்ணிக்கையின் அதிகபட்ச வரம்பினை மீண்டும் கொண்டு வருவதற்கு தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

### RCS UDAN – டெல்லி மற்றும் கஜுராஹோ இடையிலான முதல் விமானப் போக்குவரத்து



- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய M. சிந்தியா, டெல்லிக்கும் மத்தியப் பிரதேசத்தின் கஜுராஹோ என்ற ஒரு பாரம்பரிய நகருக்கும் இடையிலான முதலாவது நேரடி விமானத்தினைச் சமீபத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இதன் தொடக்கத்துடன், UDAN - RCS திட்டத்தின் கீழ் இயக்கப்படும் விமானப் போக்குவரத்து பாதைகளின் மொத்த எண்ணிக்கை 405 ஆக மாறியது.
- RCS – UDAN 3.0 திட்டத்தின் கீழ், ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்திற்கு டெல்லி-கஜுராஹோ–டெல்லி என்ற பாதைக்கான அனுமதி வழங்கப்பட்டது.
- ஸ்பைஸ்ஜெட் நிறுவனமானது ஒரு மிகப்பெரிய பிராந்திய விமானப் போக்குவரத்து நிறுவனமும் இத்திட்டத்திற்கு வலுவான ஆதரவை வழங்கி வரும் நிறுவனமும் ஆகும்.

## கம்பி வடத்தினால் ஆன இரயில் பாலம்




- ஜம்மு & காஷ்மீரின் ரியாஷி மாவட்டத்தில் பாயும் அஞ்சி நதி மீது அமைக்கப்பட உள்ள நாட்டின் முதலாவது கம்பிவடத்தினால் ஆன ஒரு பாலத்தின் புதிய புகைப்படங்களை இந்திய இரயில்வே பகிர்ந்துள்ளது.
- கட்டுமான நிலையிலுள்ள அஞ்சி காத் பாலமானது உதாம்பூர் – ஸ்ரீநகர் – பாராமுல்லா இரயில் இணைப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.
- இது இரயில் இணைப்பின் மூலம் கத்ரா மற்றும் ரியாஷி பகுதிகளை இணைக்கும்.
- இந்தப் பாலமானது ஆற்றுப்படுகைக்கு மேல் 331 மீ உயரத்தில் அமைய உள்ளது.
- இதன் மொத்த நீளம் 473.25 மீ ஆகும்.
- இது 96 கம்பி வடங்களுடன் கட்டமைக்கப்பட உள்ளது.

## 'சரியான உணவை உண்ணுதல்' வளாகம்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது புதுடெல்லியின் 4 காவல் நிலையங்களை 'சரியான உணவை உண்ணும்' வளாகங்களாக அறிவித்து சான்றளித்துள்ளது.
- 'சேஜார்மந்த் டெல்லி திட்டத்தின்' கீழ் இவற்றிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.

- சேஜார்மந்த் டெல்லி என்ற திட்டமானது “சரியான உணவை உண்ணுதல்” திட்டத்தின் ஓர் அங்கமாகத் தொடங்கப்பட்டது.
- “சரியான உணவை உண்ணுதல்” என்ற ஒரு முன்னெடுப்பானது இந்தியக் குடிமக்கள் பாதுகாப்பான மற்றும் ஊட்டச்சத்துமிக்க உணவினைப் பெறுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டது.

## புதிய கோவிட் தடுப்பு மருந்து

- இந்த அரசானது ஒரு புதிய கோவிட் தடுப்பு மருந்தினை உருவாக்குவதற்காக பெருந் தொற்றிற்கான ஒரு தயார்நிலையில் புத்தாக்க சங்கம் மற்றும் பனாசியா பயோடெக் (Panacea Biotec) எனப்படும் மருந்து உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றுடன் கைகோர்க்க உள்ளது.
- SARS – CoV – 2 திரிபுகள் மற்றும் பிற பீட்டா திரிபு கொரோனா வைரஸ்களுக்கு எதிராக பரந்த அளவிலான ஒரு பாதுகாப்பினை வழங்குவதற்கான தடுப்பு மருந்துகளை இவை உருவாக்க உள்ளன.

## விக்யான் சர்வத்ரா பூஜ்யதே திட்டம்

- குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் அவர்கள் ‘விக்யான் சர்வத்ரா பூஜ்யதே திட்டத்தினை’ (Vigyan Sarvatra Pujyate programme) தொடங்கி வைத்தார்.
- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது இத்திட்டத்தினை அமல்படுத்துவதற்காக வேண்டி மத்தியப் பிரதேசத்தில் 3 கல்வி நிறுவனங்களைத் தேர்வு செய்துள்ளது.
- இது பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள் மற்றும் விரிவுரைகள் அடங்கிய ஒரு வார கால அளவிலான தேசிய அளவில் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.

- இந்தத் திட்டமானது தினசரிப் பயன்பாட்டுப் பொருட்கள் பற்றிய அறிவியல்பூர்வ அறிவினை நோக்கி மாணவர்களை ஈர்க்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.




## தேசிய டிஜிட்டல் (எண்ணிம) பல்கலைக் கழகம்

- இந்தியக் கல்வி நிறுவனங்களில் நிலவும் இடப் பற்றாக்குறையை (மாணவர் சேர்க்கை இருப்பு) தீர்ப்பதற்காக தேசிய டிஜிட்டல் பல்கலைக்கழகமானது நிறுவப்பட உள்ளது.
- இந்தப் பல்கலைக்கழகமானது 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கைக்கு இணங்குவதோடு, பல்வேறு மொழிகளில் உயர்தர உயர்கல்வியைப் பெறுவதற்கும் வழி வகுக்கும்.
- SWAYAM (சுவயம்), ePG – பாதசாலா, சுவயம் – பிரபா, தேசிய டிஜிட்டல் நூலகம், இகியான் கோஷ் (eGyanKosh) மற்றும் மெய்நிகர் ஆய்வகங்கள் ஆகியவை தற்போது டிஜிட்டல் பல்கலைக் கழகத்தில் இணைக்கக் கூடிய நிலையில் உள்ள டிஜிட்டல் வளங்களாகும்.

## நடமாடும் உயிரிப் பாதுகாப்பு ஆய்வகம்



- மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் துணைநிலை அமைச்சர் பாரதி பிரவீன் பவார் மகாராஷ்டிராவின் நாசிக் நகரில் மூன்றாம் நிலையிலான இந்தியாவின் முதலாவது நடமாடும் உயிரிப் பாதுகாப்பு ஆய்வகத்தினை தொடங்கி வைத்துள்ளார்.
- இது இந்தியாவின் முதலாவது மூன்றாம் நிலை நடமாடும் உயிரிப் பாதுகாப்பு ஆய்வகமாக (Biosafety Level-3 mobile laboratory) மாறியுள்ளது.

- இந்த நடமாடும் ஆய்வகமானது புதிதாக உருவாகி வரும் மற்றும் திரும்ப உருவாகும் வைரஸ் தொற்றுகள் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்ள உதவும்.

## கடல்பரப்பு காற்றாலைத் திட்டம்



- டாடா பவர் என்ற நிறுவனமானது ஜெர்மனியைச் சேர்ந்த RWE ரினிவபிள் என்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் கடல்பரப்பு காற்றாலைகளை நிறுவச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.
- இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அந்த நிறுவனங்களும் கையெழுத்து போட்டுள்ளன.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 30 ஜிகாவாட் திறனுடைய கடல்பரப்பு காற்றாலையை நிறுவும் இலக்கை அடைவது குறித்த இந்தியாவின் அறிவிப்பிற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட உள்ளது.

## நீலப் பொருளாதாரம் தொடர்பான செயல்திட்டம்



- இந்தியா மற்றும் பிரான்ஸ் இணைந்து, நீலப் பொருளாதாரம் மற்றும் பெருங்கடல் ஆளுமை ஆகியவை குறித்த தங்களது இருதரப்புப் பரிவர்த்தனைகளை மேம்படுத்தச் செய்வதற்கான ஒரு செயல்திட்டத்தில் கையெழுத்திட்டன.
- இந்தக் கூட்டாண்மையானது, பெருங்கடல்கள் பற்றிய சரியான புரிதலுக்கான கடல் சார் அறிவியல் ஆராய்ச்சியில் ஒன்றிணைந்துச் செயல்படுவதற்கான ஒரு திறனை ஆராய்தல் மற்றும் ஒரு தடையற்ற மற்றும் வர்த்தகப் பொது மையமாக பெருங் கடல்கள் திகழ்வதை உறுதி செய்தல் ஆகியவற்றில் உதவும்.

## ஹார்வர்டு ஆய்வறிக்கைகள்

- மான்சுக் மாண்டவ்யா, இந்தியாவின் கோவிட்-19 தடுப்பு மருந்து வழங்கீட்டுத் திட்டம் பற்றிய ஹார்வர்டு ஆய்வறிக்கைகளை வெளியிட்டார்.
- இந்த அறிக்கைகளானவை; இந்தியாவின் கோவிட்-19 தடுப்பு மருந்தின் உருவாக்கக் கதை மற்றும் இந்தியாவின் கோவிட்-19 தடுப்பு மருந்து நிர்வாகத்தின் பயணம் ஆகியனவாகும்
- இந்த அறிக்கைகள், நாட்டில் கோவிட்-19 தடுப்பு மருந்துகள் உருவாக்கப்பட்டது மற்றும் அதன் வழங்கீட்டு முயற்சிகளின் வெற்றிக்குப் பங்காற்றிய சில முக்கிய அம்சங்களை எடுத்துரைக்கிறது.
- உள்நாட்டிலேயே தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்தல் மற்றும் பல்வேறு வயதினருக்குப் பாதுகாப்பான முறையில் தடுப்பு மருந்து வழங்கப்படுவதை உறுதி செய்ய எடுத்த தக்க நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி இந்த அறிக்கைகள் பெரிய அளவில் ஆய்வு செய்துள்ளன.

## தேசிய வருவாய்வழி மற்றும் திறன் கல்வி உதவித் தொகைத் திட்டம்




- தேசிய வருவாய்வழி மற்றும் திறன் கல்வி உதவித் தொகைத் திட்டத்தினைத் தொடரச் செய்வதற்கு கல்வி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

- ஆண்டு வருமான வரம்பை 1.5 லட்சம் ரூபாய் என்ற அளவிலிருந்து 3.5 லட்சம் ரூபாயாக அதிகரிப்பது போன்ற தகுதி வரையறைகளில் குறைந்தபட்ச மாற்றங்களுடன் இந்தத் திட்டத்தினை 2025 -26 ஆம் ஆண்டு வரை நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி, 8 ஆம் வகுப்பிலேயே அவர்கள் பள்ளிப் படிப்பினைக் கைவிடாமல் அவர்களின் படிப்பைத் தொடரச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், 9ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும், ஆண்டிற்கு தலா ரூ.12,000 உதவித் தொகையானது ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுகிறது.
- 2008-09 ஆம் ஆண்டில் அரசு இத்திட்டத்தினைத் தொடங்கியது.

## நிதிநிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுச் சபை – 25வது அமர்வு

- இது மும்பையில் நடத்தப் பட்டது.
- இந்த அமர்வானது நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையின் கீழ் நடத்தப் பட்டது.
- இந்தச் சபையானது நிதிநிலைத் தன்மை மற்றும் மேம்பாட்டுச் சபையின் பல்வேறு ஆணைகளையும் சில உள்நாட்டு மற்றும் உலக மேம்பாடுகளால் விளைந்த முக்கியமான பெரிய நிதிப் பிரச்சினைகள் பற்றியும் விவாதித்தது.



## ஐக்கிய அரபு அமீரகத்தில் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்




- இந்திய – ஐக்கிய அரபு அமீரக வர்த்தக ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகமானது இந்தியாவிற்கு வெளியே தனது முதல் கிளையை நிறுவ உள்ளது.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒரு விரிவான பொருளாதாரக் கூட்டுறவு ஒப்பந்தமானது அனைத்துத் துறைகளிலும் கூட்டு மூலோபாய ஒத்துழைப்பின் ஒரு புதிய கட்டத்தின் தொடக்கத்திற்கு வழி வகுக்கும்.

## ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தின் புதிய கடலடிக் கம்பிவட இணைப்பு

- ரிலையன்ஸ் ஜியோ இன்ஃபோகாம் லிமிடெட் என்ற நிறுவனமானது மாலத்தீவின் ஹுல்ஹுமாலே என்னுமிடத்தில் அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பத்தைச் சேர்ந்த மல்டி-டெராபிட் திறனுடைய இந்திய-ஆசிய எக்ஸ்பிரஸ் எனும் ஒரு கடலடிக் கம்பிவட அமைப்பினை நிறுவ உள்ளது.
- உயர்திறன் மற்றும் அதிவேக திறனுடைய இந்த அமைப்பானது ஹுல்ஹுமாலே என்ற பகுதியை இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள உலகின் முக்கிய இணைய மையங்களுடன் நேரடியாக இணைக்கும்.
- அதே சமயம், இந்திய – ஐரோப்பிய எக்ஸ்பிரஸ் எனும் ஒரு கம்பிவட அமைப்பானது இத்தாலியின் சவோனாவிலிருந்து மும்பை பகுதியை மிலன் நகருடன் இணைக்கிறது.
- இதில் மத்தியக் கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்கா மற்றும் மத்தியத் தரைக்கடல் ஆகிய பகுதிகளில் கூடுதல் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளது.




## ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா உதவி




- இந்தியா தனது உதவியின் முதல் பகுதியாக 2,500 மெட்ரிக் டன் எடையுள்ள கோதுமைச் சரக்குகளை 50 சரக்குந்துகளில் ஏற்றி ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு அனுப்பியுள்ளது.
- இந்த வாகனங்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள ஜலாலாபாத் எனுமிடத்தில் உள்ள உலக உணவுத் திட்ட அமைப்பிடம் சரக்குகளை ஒப்படைக்கும்.
- ஒவ்வொரு பொதிகளிலும் "ஆப்கானிஸ்தான் மக்களுக்கு இந்திய மக்கள் அளிக்கும் பரிசு" என்ற வாசகம் ஆங்கிலம், தாரி மற்றும் பஷ்தோ போன்ற மொழிகளில் முத்திரை இடப்பட்டுள்ளது.

## ஜம்மு & காஷ்மீர் எல்லை நிர்ணய ஆணையம்

- மத்திய அரசானது இரண்டாவது முறையாக ஜம்மு & காஷ்மீரின் எல்லை நிர்ணய ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டித்துள்ளது.
- ஒன்றியப் பிரதேசங்களின் சட்டமன்றத் தொகுதிகளை மறுசீரமைக்கும் பணியானது இந்த ஆணையத்திற்கு வழங்கப் பட்டது.
- இந்த ஆணையத்தின் பணிக்காலம் மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு மே 06 அன்று நிறைவடைகிறது.
- எல்லை நிர்ணயச் செயல்முறைகள் நிறைவடைந்த பிறகு இந்த ஒன்றியப் பிரதேசத்தில் தேர்தல் நடைமுறைகள் தொடங்கும்.

- ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் இந்த ஆணையத்திற்கு தலைமை தாங்குகிறார்.




## "மிலன்" – பன்னாட்டு கடற்படைப் பயிற்சி




- மிலன் என்பது இந்தியக் கடற்படையினால் நடத்தப்படும் பன்னாட்டுக் கடற் படைப் பயிற்சியின் பெயராகும்.
- இது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படும் பயிற்சியாகும்.
- இந்தப் பயிற்சியானது 1995 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- அனைத்து வகையான மிலன் பயிற்சிகளும் அந்தமான் மற்றும் நிகோபர் படைப் பிரிவின் தலைமையில் அந்தமான் & நிகோபர் தீவில் நடைபெற்றன.
- இந்த ஆண்டின் மிலன் பயிற்சியானது முதல்முறையாக விசாகப்பட்டினத்தில் நடத்தப் பட உள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தப் பயிற்சியின் கருத்துரு, "Camaraderic – cohesion – collaboration" என்பதாகும்.

## கிராமப்புற இணைப்பு – புவியிடங்காட்டி அமைப்பின் தரவு




- மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் கிராமப்புற இணைப்பு பற்றிய புவியிடங்காட்டி அமைப்புத் தரவுகளைப் பொது தளத்தில் வெளியிட்டார்.
- இந்தத் தரவானது பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்திற்காக உருவாக்கப் பட்ட புவியிடங்காட்டி அமைப்பினை (GIS - Geographic information system) பயன்படுத்திச் சேகரிக்கப்பட்டு டிஜிட்டல் மயமாக்கப்பட்ட 8 லட்சம் கிராமப்புற இணைப்பு வசதிகள் பற்றிய புவியிடங்காட்டி தகவல்களை உள்ளடக்கியது.
- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டமானது 2000 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டமானது, நாடு முழுவதும் உள்ள இணைக்கப்படாத அனைத்து வாழிடங்களுக்கும் வேண்டி அனைத்து வானிலையிலும் பயணிக்க ஏதுவான சாலை இணைப்பினை வழங்குவதை ஒரு நோக்கமாகக் கொண்டதாகும்.

## சஞ்சீவ் சன்யால்



- நிதி அமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யால் பிரதம அமைச்சருக்கான பொருளாதார ஆலோசகர் சபையின் ஒரு முழு நேர உறுப்பினராக சேர்க்கப் பட்டுள்ளார்.
- இவர் 2 ஆண்டுக் காலத்திற்கு இப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.
- பிரதமருக்கான பொருளாதார ஆலோசகச் சபையானது, பொருளாதார விடயங்கள் பற்றிப் பிரதமருக்கு ஆலோசனை வழங்குவதற்காக மத்திய அரசினால் நிறுவப்பட்ட ஒரு தன்னியக்க அமைப்பாகும்.

## OCEANS 2022 - மாநாடு

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சிப் பூங்கா அமைப்பானது தேசியப் பெருங்கடல் சார் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் இணைந்து OCEANS (பெருங்கடல்) 2022 என்ற மாநாட்டினை நடத்தியது.
- இந்த மாநாடானது ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும் உலகக் கடல்சார் ஆராய்ச்சியாளர்களுக்கான நிகழ்வாகும்.
- இது முதன்முறையாக இந்தியாவில் நடத்தப்பட்டது.
- பெருங்கடல் பொறியியல் துறையானது கடல்சார் தொழில்நுட்பச் சமூகம் மற்றும் மின்சாரம் மற்றும் மின்னணுப் பொறியியல் & பெருங்கடல் பொறியியல் சமூகம் ஆகியவற்றின் சார்பாக OCEANS 2022 மாநாட்டினை ஒருங்கிணைந்து நடத்துகிறது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "ஊக்குவித்தல் – புத்தாக்கம் - நிலைத்தன்மை" (inspire-innovate-sustain) என்பதாகும்.




## பிரதான் மந்திரி கிஷான் திட்டத்தின் 3வது ஆண்டு



- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 ஆம் தேதி வரையில், சுமார் 11.78 கோடி விவசாயிகள் பிரதான் மந்திரி கிசான் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.
- 1.82 லட்சம் கோடி ரூபாய் தொகையானது இந்தியா முழுவதும் உள்ள தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வெவ்வேறு நிலைகளில் வழங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டமானது 2019 ஆம் அண்டு பிப்ரவரி 24 அன்று தொடங்கப்பட்ட மத்திய அரசின் திட்டமாகும்.
- நிலம் வைத்துள்ள விவசாயிகளின் நிதித் தேவைகளுக்கு உதவுவதற்காக வேண்டி இந்தத் திட்டமானது தொடங்கப்பட்டது.

## குறைதீர்ப்பாளன் (ஓம்புட்ஸ்பெர்சன்) செயலி




- மத்திய ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான குறைதீர்ப்பாளன் செயலியை வெளியிட்டுள்ளார்.
- ஒரு குறைதீர்ப்பாளன் செயலி, வெவ்வேறு மூலங்களிலிருந்து பெறும் புகார்களின் அடிப்படையில் அவர்களது குறைகளை வகைப்படுத்தவும் அது பற்றிய சில அறிக்கைகளைத் தாக்கல் செய்வதை எளிதாக்கவும் வேண்டி ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது இந்தச் செயலியை உருவாக்கியுள்ளது.

## தேவயாடனம்

- இந்திய அரசின் கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழான இந்திய தொல்லியல் ஆய்வு அமைப்பானது "தேவயாடனம் – இந்திய ஆலயக் கட்டிடக் கலை மீதான ஒரு பயணம்" என்ற இரண்டு நாட்கள் அளவிலான ஒரு சர்வதேச மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.
- இது கர்நாடகாவின் ஹம்பி என்னுமிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அமைச்சர் G. கிஷான் ரெட்டி இந்த மாநாட்டினைத் தொடங்கி வைக்கிறார்.
- இந்த மாநாடானது, ஆலயத்தின் தத்துவ, சமய, சமூக, பொருளாதார, தொழில்நுட்ப,

அறிவியல், கலை மற்றும் கட்டிடக்கலை அம்சங்கள் பற்றி விவாதிப்பதற்கான ஒரு மாநாடாகும்.




## தர்மா கார்டியன் பயிற்சி – 2022

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியான 3வது தர்மா கார்டியன் – 2022 (EX DHARMA GUARDIAN-2022) பயிற்சியானது கர்நாடகாவின் பெலகாவி (பெல்காம்) எனுமிடத்தில் நடத்தப் படுகிறது.
- இது 12 நாட்கள் நடைபெறும் ஒரு கூட்டுப் பயிற்சியாகும்.



- இந்திய இராணுவத்தின் மராத்திய இலகுரக ஆயுதமேந்தியக் காலாட்படைப் பிரிவின் 15வது படைப்பிரிவு மற்றும் ஜப்பானிய தற்காப்பு தரைப் படையின் 30வது காலாட் படைப் பிரிவு ஆகியவை இப்பயிற்சியில் ஈடுபடுகின்றன.
- இந்த இராணுவப் பயிற்சியில், காட்டுப்பகுதிகள் மற்றும் பகுதியளவு நகர/நகர்ப்புறப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் பற்றி அதிகம் கவனம் செலுத்தப் படும்.

## ஆரோக்கிய நட்சத்திர தரநிலை

fssai
FOOD SAFETY AND STANDARDS AUTHORITY OF INDIA
*Inspiring Trust, Assuring Safe & Nutritious Food*
Ministry of Health and Family Welfare, Government of India

- புதிய அமைப்பின் ஒரு பகுதியாக, பதப்படுத்தப்பட்டு பொதியிலடைக்கப்பட்டச் சரக்குப் பொருட்களில் ஆரோக்கிய நட்சத்திர தரநிலைக் குறியீடானது பதிக்கப்படும் என இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையம் கூறியுள்ளது.
- ஒரு பதப்படுத்தப்பட்ட சரக்குப் பொதியில், அது ஆரோக்கியமானதா இல்லையா என்பதைக் குறிக்கும் வகையில் நட்சத்திரங்கள் எண்ணிக்கை அளவில் பதிக்கப்படும்.
- உணவில் உள்ள கொழுப்பு, சர்க்கரை மற்றும் உப்பு ஆகியவற்றின் அளவைக் கொண்டு இந்தத் தரநிலைக்கான மதிப்பீடானது மேற்கொள்ளப்படும்.

## முப்பரிமாண அச்சாக்கத்திற்கான தேசிய உத்தி

- டிஜிட்டல் (எண்ணிம) தயாரிப்பின் அடுத்தத் தலைமுறைத் தொழில்நுட்பத்திற்கு ஏற்ற வகையில் முப்பரிமாண அச்சாக்கத்தின் (சேர்க்கைத் தயாரிப்பு) தேசிய அளவிலான உத்தியானது அறிவிக்கப்பட்டுள்ளது.
- உள்ளூர் (சிறிய) தொழிற்சாலைகளால் எதிர்கொள்ளப்படும் சில உடனடியான குறைபாடுகளைத் தணிப்பதே இதன் நோக்கமாகும்.
- இதன் மூலம் இயந்திரங்கள், பொருட்கள் மற்றும் மென்பொருள்களுக்கான 50 இந்தியா சார்ந்த தொழில்நுட்பங்கள், 100 புதிய சேர்க்கைத் தயாரிப்பு தொடக்க நிறுவனங்கள் மற்றும் 500 புதிய தயாரிப்புகள் உள்ளிட்ட சில இலக்குகளை 2050 ஆம் ஆண்டிற்குள் அடைவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சேர்க்கைத் தயாரிப்பு எனவும் அழைக்கப்படும் ஒரு முப்பரிமாண அச்சாக்கமானது தயாரிப்புப் பொருட்களின் மாதிரிகளை உருவாக்கும் ஒரு செயல்முறையாகும்.




## சர்வதேச அறிவுசார் சொத்துக் குறியீடு 2022

Rank 1- United States
Rank 2- United Kingdom
Rank 3- Germany
Rank 4- Sweden
Rank 5- France

- இந்தியாவின் ஒட்டு மொத்த அறிவுசார் சொத்துக் குறியீடானது 38.4 சதவிகிதம் என்ற அளவிலிருந்து உயர்ந்து 38.6% என்ற நிலையில் உள்ளது.
- இந்தியா 2022 ஆம் ஆண்டு சர்வதேச அறிவுசார் சொத்துக் குறியீட்டில் இடம் பெற்ற 55 நாடுகளுள் 43வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- இந்தக் குறியீடானது அமெரிக்க வர்த்தக சபையின் உலகப் புத்தாக்கக் கொள்கை மையத்தினால் வெளியிடப்பட்டது.

## யூஃப்லிக்டிஸ் ஜலதாரா

- புனேயிலுள்ள இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பானது ஒரு புதிய தவளை இனத்தினைக் கண்டறிந்துள்ளது.
- இவை மேற்குத் தொடர்ச்சி மலைகள் பரவியுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள நன்னீர் பகுதிகளில் வளர்கின்றன.

- இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பு, புவனேஷ்வரிலுள்ள தேசிய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பெங்களூருவிலுள்ள கார்மல் மவுன்ட் கல்லூரி ஆகியவற்றின் அறிவியலாளர்கள் இணைந்து இதனைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தத் தவளையின் பொதுப் பெயர் ஜலதாரா நீர் தத்தி தவளை மற்றும் இதன் அறிவியல் பெயர் யூஃப்லிக்டிஸ் ஜலதாரா என்பதாகும்.
- இந்தத் தவளையானது முதன்முதலில், கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்திலுள்ள தட்டேகாட் என்ற பறவைகள் சரணாலயத்தின் அருகிலுள்ள நன்னீர் நிலைகளில் கண்டறியப் பட்டது.

## இந்தியாவின் கோவிட்-19 தடுப்பு மருந்து உருவாக்கம் பற்றிய அறிக்கைகள்

- இந்தியாவின் கோவிட்-19 தடுப்பு மருந்து உருவாக்கம் மற்றும் அதன் வழங்கீடு பற்றி போட்டித் திறன் நிறுவனம் தயாரித்த 2 அறிக்கைகளை மத்திய சுகாதார அமைச்சர் மான்சுக் மான்டவ்யா வெளியிட்டார்.
- இந்த அறிக்கையானது, மாபெரும் வயது வந்தோருக்கான தடுப்பு மருந்து வழங்கீட்டு இயக்கம் வெற்றி பெறுவதில் மத்திய, மாநில மற்றும் மாவட்ட நிலைகளிலான ஒருங்கிணைந்தச் செயல்பாடுகள் எவ்வாறு உதவின என்பது பற்றி கூறுகிறது.
- இந்தியாவின் அதிகபட்சம் பயன்படுத்தப்பட்ட இரண்டு தடுப்பு மருந்துகளாவன; பாரத் பயோடெக் நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கோவாக்சின் மற்றும் ஆக்ஸ்போர்டு / ஆஸ்ட்ராசெனிகா என்ற நிறுவனத்துடன் இணைந்து இந்திய சீரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட கோவிசீல்டு ஆகியனவாகும்.

## P-8I ரக விமானம்



- விமானத் தயாரிப்பு நிறுவனமான போயிங், 12வது P-8I ரக நீள்வரம்புடைய கடல் ரோந்து விமானத்தை இந்தியக் கடற்படைக்கு வழங்கியுள்ளது.
- இது 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம், நான்கு கூடுதல் P-8I ரக விமானங்களை வாங்குவதற்கான ஃபாலோ-ஆன் (தொடர்) என்ற விதியைப் பூர்த்தி செய்கிறது.
- P-8I ரக விமானம் ஒரு நீள் வரம்புடைய கடல் உளவு மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் விமானம் ஆகும்.

## இந்திய இரயில்வேயின் முதல் சூரியசக்தி மின் நிலையம்




- மத்தியப் பிரதேசத்தில் பினா என்னுமிடத்தில் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் இந்திய இரயில்வே துறைக்காக 1.7 மெகாவாட் திறனுள்ள சூரியசக்தி ஒளி மின்னழுத்த ஆலையைத் திறந்துள்ளது.
- இந்திய இரயில்வேயின் இழுவை அமைப்புகளுக்கு (traction systems) தேவையான அளவு மின்சாரம் இந்த ஆலை மூலம் நேரடியாக வழங்கப்படும்.
- இழுவை சக்தியை நேரடியாக வழங்குவதற்காக இந்திய இரயில்வே கட்டமைப்பில் தொடங்கப்பட்ட முதல் சூரியசக்தி மின் நிலையம் இதுவாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## எண்ணிம உரிமைகள் மற்றும் கொள்கைகள்



- எண்ணிம உரிமைகளை அறிமுகம் செய்த முதல் பிராந்தியம் ஐரோப்பிய ஒன்றியம் ஆகும்.
- ஜனநாயகத்தினையும் மக்களின் உரிமைகளையும் ஆதரிப்பதே இந்த உரிமைகளின் நோக்கமாகும்.
- இது பாதுகாப்பான ஒரு இணையச் சூழலை உறுதி செய்கிறது.
- தனது உறுப்பினர் நாடுகள் அனைத்திற்கும் மலிவு விலையில் ஒரு எண்ணிம இணைப்பினை வழங்குவதே இதன் நோக்கமாகும்.
- மேலும் இணையத்தின் வேகத்தை அதிகரிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இவை வகுப்பறைகளைத் திறம்பட தயார் செய்து, எண்ணிமம் சார்ந்த அறிவு பெற்ற ஆசிரியர்களைப் பணியில் அமர்த்தும்.

## லித்துவேனியா மீது தடை விதித்த சீனா

- சீன அரசானது சமீபத்தில் லித்துவேனியா மீது இறக்குமதி தடைகளை விதித்தது.
- அதாவது, சீன நிறுவனங்கள் லித்துவேனியாவிலிருந்து சரக்குப் பொருட்களையோ மூலப் பொருட்களையோ இனி இறக்குமதி செய்யக் கூடாது.
- முன்னதாக 2021 ஆம் ஆண்டில், லித்துவேனியா அரசு தாய்வானை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரித்து தனது நாட்டில் தாய்வான் அலுவலகம் ஒன்றினைத் திறந்தது.
- சீனாவைப் பொருத்தவரையில், தாய்வான் அதன் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும்.
- லித்துவேனியாவின் இந்த நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுப்பதற்காகவும் அதன் உலகளாவிய விநியோகச் சங்கிலியை நிறுவத்துவதற்காகவும் சீனா இந்தத் தடையை விதித்துள்ளது.

## புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான உலக தினம் - ஜனவரி 30

- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் (NTD) பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அனைவருக்கும் சமமான சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தச் செய்வதற்கான செயல்திட்டங்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தவும் உலகம் முழுவதும் ஆண்டுதோறும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு 3வது புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான உலக தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டின் உலக NTD தினத்தின் கருத்துரு, 'Achieving health equity to end the neglect of poverty-related diseases' என்பதாகும்.



## ஹைட்ரஜனால் இயங்கும் வகையிலான பறக்கும் படகு

- உலகிலேயே முதன்முறையாக ஹைட்ரஜனால் இயங்கும் வகையிலான ஒரு பறக்கும் படகானது துபாயில் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- தி ஜெட் சீரோ எமிஷன் எனப்படும் சுவிட்சர்லாந்து நிறுவனமானது “தி ஜெட்” எனப் படும் இப்படகினைத் தயாரித்து இயக்குவதற்காக ஐக்கிய அரபு அமீரகத்தை சேர்ந்த ஜெனித் கடல்சார் சேவை நிறுவனம் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த DWYN ஆகியவற்றுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.




## அரசி எலிசபெத்தின் 70 ஆண்டுகால ஆட்சி




- 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 06 அன்று அரசி எலிசபெத் அவர்கள் தனது 70 ஆண்டுகால ஆட்சியைக் கொண்டாட உள்ளார்.
- இவரின் வயது 95 ஆண்டுகள் ஆகும்.
- இவர் 1952 ஆம் ஆண்டு பிப்ரவரி 08 அன்று அதிகாரப் பூர்வமாக அரியணையில் ஏறினார்.

## இரத்த ஞாயிறு நிகழ்வின் 50வது ஆண்டு நிறைவு

- 1972 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று பிரிட்டிஷ் படை வீரர்கள் ஆயுதமற்ற ஒரு பொது மக்கள் குழுவினைக் கொன்று குவித்தனர்.
- இவர்கள் டெரி எனுமிடத்தில் பாக்சைடு பகுதியில் போராட்டம் நடத்தியவர்கள் ஆவர்.
- இந்த நிகழ்வானது இரத்த ஞாயிறு எனக் குறிப்பிடப்படுகிறது.

- 2022 ஆம் ஆண்டில், வடக்கு ஐயர்லாந்தின் மக்கள் இரத்த ஞாயிறு நிகழ்வின் 50 ஆம் ஆண்டு நிறைவினை அனுசரித்தனர்.
- விசாரணையின்றிச் சிறையடைப்பு என்ற நிகழ்விற்கு எதிராகப் பொதுமக்கள் குழு ஒன்று போராட்டம் செய்தது.
- விசாரணையின்றிச் சிறையடைப்பு என்றால் ஒருவரை எந்த ஒரு நீதிமன்றத்திலும் விசாரிக்காமல் அவரைச் சிறையிலடைப்பதாகும்.




## சந்திரப் புத்தாண்டு

- பிப்ரவரி 01 அன்று கொண்டாடப்படும் சந்திரப் புத்தாண்டானது பொதுவாக சீனப் புத்தாண்டு என அழைக்கப் படுகிறது.
- சீனப் புத்தாண்டு அல்லது சந்திரப் புத்தாண்டானது இராசி (கிரகம்) மண்டலங்களுக்கு இடையிலான மாற்றத்தைக் குறிக்கிறது.
- எனவே 2022 ஆம் ஆண்டானது புலி ஆண்டாவதோடு, 2021 ஆம் ஆண்டு எருது ஆண்டாக அமைந்தது.



## உகாண்டா எண்ணெய் ஒப்பந்தம்

- சீனா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளின் எண்ணெய் விநியோக பெருநிறுவனங்கள், உகாண்டாவில் ஒரு மாபெரும் எண்ணெய்க் குழாய் இணைப்பை அமைப்பதற்கு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.
- இந்த நிறுவனங்கள் அந்த நாட்டின் எண்ணெய் வளங்களை உபயோகப்படுத்த உள்ளன.
- இது அந்நாட்டிலுள்ள மிகப்பெரிய தேசியப் பூங்காவாகும்.
- இத்திட்டமானது ஆயிரக்கணக்கான மக்களை அப்புறப்படுத்த வழி வகுக்கும்.
- இந்த நிலை சுற்றுச்சூழல் ஆர்வலர்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

## சர்வதேச விண்வெளி நிலைய மாற்றத் திட்டம்

- 2031 ஆம் ஆண்டில் சர்வதேச விண்வெளி நிலையம் அதன் செயல்பாடுகளை நிறுத்த உள்ளதாக நாசா சமீபத்தில் அறிவித்தது.
- 2031 ஆம் ஆண்டில், இந்த விண்கலம் தனது சுற்றுப் பாதையை விட்டு வெளியேறி தெற்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் விழும்.
- சர்வதேச விண்வெளி நிலையத்தினை மாற்றி அமைப்பதற்கானத் திட்டத்தினை நாசா வெளியிட்டது.
- நுண் ஈர்ப்பு விசையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலமாக சர்வதேச விண்வெளி நிலையம் தனது 3வது மற்றும் மிகவும் செயல்திறன் வாய்ந்த ஒரு பத்தாவது ஆண்டில் நுழைகிறது.

## சுகாதார நலக் கழிவுகள் பற்றிய உலக சுகாதார அமைப்பின் அறிக்கை



- உலக சுகாதார அமைப்பானது, சமீபத்தில் COVID-19 தொற்றுநோயால் உருவாக்கப் பட்ட கூடுதல் மருத்துவக் கழிவுகள் குறித்த அவலநிலை பற்றி எடுத்துரைத்தது.
- இந்தப் பெருந்தொற்றானது, உலகின் மருத்துவக் கழிவு மேலாண்மை அமைப்புகளின் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.
- 30% சுகாதார நல மையங்களில் மருத்துவக் கழிவுகளைக் கையாளும் வசதி இல்லை என்று உலக சுகாதார அமைப்பின் அறிக்கை கூறுகிறது.
- அவற்றுள் 60% மையங்கள் குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளன.

## கோஸ்க்

- தென் கொரிய நிறுவனம் ஒன்று கோஸ்க் என்ற வைரஸ் தடுப்பு முகக்கவசத்தினை உருவாக்கியுள்ளது.
- இது மூக்கை மட்டும் மறைக்கிறது.
- இதனை சாப்பிடும் போதும் குடிக்கும் போதும் அணிய இயலும்.
- "கோஸ்க்" என்பது கோ (மூக்கு என்பதற்கான கொரிய வார்த்தை) மற்றும் முகக்கவசம் (மாஸ்க்) ஆகிய வார்த்தைகளின் ஒரு கலவையாகும்.
- இதனை ஆத்மன் என்ற ஒரு நிறுவனம் வெளியிட்டுள்ளது.



## புதிய எச்ஐவி திரிபு



- நெதர்லாந்தின் ஆராய்ச்சியாளர்கள் புதிய எச்ஐவி திரிபினைக் கண்டுபிடித்துள்ளனர்.
- இதற்கு VB திரிபு என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தத் திரிபானது 3.5 மடங்கு முதல் 5.5 மடங்கு வரையிலான அதிக நோய்த்தொற்றை ஏற்படுத்துகிறது.
- இருப்பினும், நவீன சிகிச்சைகள் காரணமாக எச்சரிக்கை மிகுந்த சூழ்நிலை உருவாக எந்த வாய்ப்பும் இல்லை.
- இந்தத் திரிபானது, 1980 மற்றும் 1990 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் நெதர்லாந்து நாட்டில் தோன்றியது.
- ஆனால், இத்தொற்று 2010 ஆம் ஆண்டில் இருந்து குறையத் தொடங்கியது.

## ஐ.நா. சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது 2022 ஆம் ஆண்டில் தனது 50வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது.
- 1972 ஆம் ஆண்டில் நடைபெற்ற மனித சுற்றுச்சூழல் பற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஐ.நா. மாநாட்டினைத் தொடர்ந்து இது நிறுவப்பட்டது.
- இந்த அமைப்பின் முக்கிய அறிக்கைகளாவன; உமிழ்வு இடைவெளி அறிக்கை, உலக சுற்றுச்சூழல் கண்ணோட்ட அறிக்கை, வரம்புகள் (பிரான்டைர்ஸ்) அறிக்கை, வளமான புவிக்காக முதலீடு செய்தல் ஆகியனவாகும்.
- இந்த அமைப்பு மேற்கொண்ட முக்கியப் பிரச்சாரங்கள்; மாசுபாட்டினை எதிர்த்துச் செயல்படுதல், UN75, உலக சுற்றுச்சூழல் தினம், வைல்டு ஃபார் லைஃப் (Wild for Life) என்பனவாகும்.

UN environment programme 50 1972-2022

## ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு

- 35வது ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடானது எத்தியோப்பியாவிலுள்ள அடிஸ் அபாபா எனுமிடத்தில் நடைபெற்றது.
- இதில் பாதுகாப்பு மற்றும் பெருந்தொற்று ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டது.
- இதில் பங்கேற்ற நாடுகள், பல ஆப்பிரிக்க நாடுகளுக்கு கோவிட் -19 தடுப்பு மருந்துகள் கிடைக்கப் பெறாமல் இருப்பது பற்றி விவாதித்தன.

- மேலும், 11% ஆப்பிரிக்கர்கள் மட்டுமே முழு தவணை தடுப்பு மருந்தினையும் பெற்று உள்ளனர் என்றும் இந்த மாநாடு அறிவித்தது.

## என்டியூரன்ஸ் 22 கடல் ஆய்வுப் பயணம்

- என்டியூரன்ஸ் 22 கடல் ஆய்வுப் பயணமானது சமீபத்தில் கேப் டவுன் என்ற ஒரு தென் ஆப்பிரிக்க நகரிலிருந்து திட்டமிட்ட காலத்தில் புறப்பட்டது.
- இது அண்டார்டிகாவிலுள்ள வெடெல் கடலை நோக்கிப் பயணிக்கிறது.
- இது ஃபால்க்லேண்ட்ஸ் என்ற கடல்சார் பாரம்பரிய அறக்கட்டளையினால் தொடங்கப் பட்டது.
- இது புகழ்பெற்ற ஒரு துருவ ஆய்வாளரான சர் எர்னெஸ்ட் சாக்லெட்னின் தொலைந்து போன கப்பலான என்டியூரன்ஸ் கப்பலின் சேதமடைந்த பாகங்களைக் கண்டறிந்து, ஆய்வு செய்து படம் பிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## பத்சிராய் புயல்



- குறைந்தபட்சம் 6 பேர்களின் உயிர்களைப் பலியாக்கிய பத்சிராய் என்ற புயலானது மடகாஸ்கரின் கடற்கரையில் கரையைக் கடந்தது.
- இது தீவிரமான ஒரு வெப்பமண்டலப் புயலாகும்.

- இந்தத் தீவு நாட்டினை தாக்கிய 2வது பெரிய புயல் இதுவாகும்.
- 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உருவான அனா என்ற புயல் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது.

## பெருங்கடல் உச்சி மாநாடு




- ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் பிரான்ஸ் மற்றும் பிரெஸ்ட் ஆகியவை இணைந்து ஒரு பெருங்கடல் உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்தன.
- பெருங்கடல் உச்சி மாநாட்டின் உயர்மட்டக் குழு சந்திப்பில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.
- ஜெர்மனி, ஐக்கிய இராஜ்ஜியம், தென் கொரியா, ஜப்பான் மற்றும் கனடா உள்ளிட்ட பல நாடுகள் மற்றும் அரசுகளின் தலைவர்கள் இந்த உச்சி மாநாட்டின் உயர்மட்டக் குழு சந்திப்பில் உரையாற்றுவார்கள்.
- வளமான மற்றும் நிலையான கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் அதற்கான ஆதரவுகளை வழங்குவதற்குமான சில உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சர்வதேசச் சமூகத்தை அணி திரட்டச் செய்வதே இந்த உச்சி மாநாட்டின் நோக்கம் ஆகும்.

## கோலா கரடிகள்



- ஆஸ்திரேலியாவின் கிழக்கு மாநிலங்களில் உள்ள பாலூட்டிகளுக்கான யூகலிப்டஸ் மரங்களின் வாழ்விடங்கள் மீதான நெருக்கடியின் காரணமாக ஆஸ்திரேலிய அரசானது கோலா கரடிகளை அழிந்து வரும் இனமாக அறிவித்தது.
- குயின்ஸ்லாந்து, நியூ சவுத் வேல்ஸ் மற்றும் ஆஸ்திரேலிய தலைநகரப் பிரதேசத்திலும் இந்த இனமானது 10 ஆண்டுகளாக பாதிக்கப்படக்கூடியதாக வகைப்படுத்தப் பட்டு உள்ளது.
- இப்போது, இந்த விலங்குகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும்.

## குவாட் அமைச்சர்கள் சந்திப்பு

- ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர்கள், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நிலவும் அச்சுறுத்தல்கள் குறித்த உளவுத்துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்வதில் குவாட் நாடுகள் ஒத்துழைப்பதாக சமீபத்தில் குறிப்பிட்டன.
- மும்பையில் 26/11 பயங்கரவாத தாக்குதல் (2008) மற்றும் 2016 ஆம் ஆண்டில் நடந்த பதான்கோட் விமானப்படைத் தாக்குதலுக்கு நீதி வேண்டி இந்த அமைச்சர்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.
- பிரதமர் மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் மோரிசன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி பிடன் உள்ளிட்டவர்களின் குவாட் உச்சி மாநாட்டிற்கான திட்டங்களைப் பற்றியும் இந்தச் சந்திப்பில் அறிவிக்கப்பட்டது.
- இந்த உச்சி மாநாடானது 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில் ஜப்பான் பிரதமர் கிஷிடாவின் தலைமையில் டோக்கியோவில் நடத்தப்படும்.

## தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர் பெருக்கம் தொடர்பான உயர் லட்சியக் கூட்டணி

- பெருங்கடல் உச்சிமாநாட்டின் கடைசி நாளில், இந்த அறிவிப்பானது அறிமுகப் படுத்தப் பட்டது.
- பெருங்கடல் உச்சி மாநாடு பிரெஞ்சு அதிபரின் தலைமையில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பல்லுயிர் பெருக்க ஒப்பந்தம் ஆனது "Treaty of the High Seas" என்றும் அழைக்கப்படுகிறது.
- இது தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் கடல் உயிரியல் பன்முகத் தன்மையின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு பற்றிய ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகள் கடலின் 95% பகுதிகளாகும்.
- இந்த ஒப்பந்தமானது கடல் நிர்வாகத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்பவும் அதில் உள்ள பலவீனங்களை நிவர்த்தி செய்யவும் ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.
- இது பற்றி தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- பிப்ரவரி 11 ஆம் தேதி நிலவரப்படி, ஆஸ்திரேலியா, சிலி, கனடா, கொமோரோஸ், கொலம்பியா, இந்தியா, மொனாக்கோ, எகிப்து, பெரு, மொராக்கோ, நார்வே, காங்கோ குடியரசு, சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர், டோகோ, ஐக்கிய இராஜ்ஜியம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதன் 27 உறுப்பு நாடுகள் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளன.

## SWIFT

- SWIFT வலையமைப்பின் சேவைகளில் இருந்து ரஷ்யா விலக்கப் படுவதாக ரஷ்யா நாட்டிற்கு அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.
- உலகளவிலான வங்கிகளுக்கிடையிலான நிதித் தொடர்புச் சமூக அமைப்பு (SWIFT - Society for Worldwide Interbank Financial Telecommunication) என்பது ஒரு சர்வதேச செய்தி அனுப்பும் தொழில்நுட்ப வலையமைப்பு ஆகும்.
- உலகளவில் சுமூகமான பணப் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்காக வேண்டி இந்தத் தொழில்நுட்பமானது உலகளாவிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் பயன்படுத்தப் படுகிறது.
- இது 1973 ஆம் ஆண்டில் பெல்ஜியம் நகரில் நிறுவப்பட்டது.
- SWIFT என்பது எந்தப் பத்திரங்களையும் அல்லது பணத்தையும் வைத்திருக்காத அல்லது வெளி வாடிக்கையாளர் கணக்குகளை நிர்வகிக்காத, செய்திகளை மட்டுமே அனுப்பும் ஒரு தளமாகும்.




## சிங்கப்பூர் விமானக் கண்காட்சி 2022



- 2022 ஆம் ஆண்டு 'சிங்கப்பூர் விமானக் கண்காட்சியில் பங்கேற்பதற்காக இந்திய விமானப் படையின் 44 பேர் கொண்ட படைக் குழுவினர் சிங்கப்பூரில் உள்ள சாங்கி சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்துள்ளனர்.
- இந்த நிகழ்வின் போது இந்திய விமானப் படை உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட தனது தேஜாஸ் MK-I விமானத்தினைக் காட்சிப்படுத்தும்.
- சிங்கப்பூர் விமானக் கண்காட்சி என்பது உலகளாவிய விமானப் போக்குவரத்துத் துறைகள் அதன் தயாரிப்புகளை காட்சிப்படுத்த ஒரு தளத்தை வழங்குகின்ற, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்வாகும்.

## ஆளில்லா விமானங்கள் – இஸ்ரேல்

- பொதுப் போக்குவரத்து பகுதியில் ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கு அனுமதி வழங்கிய முதல் நாடாக இஸ்ரேல் மாறியுள்ளது.
- எல்பிட் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்தினால் தயாரித்து மேம்படுத்தப்பட்ட ஹெர்மீஸ் ஸ்டார்லைனர் என்ற ஆளில்லா விமான அமைப்பிற்கு இஸ்ரேலிய பொது வான்வழிப் போக்குவரத்து ஆணையமானது இந்தச் சான்றிதழை வழங்கியது.
- ஆளில்லா விமானங்களானது வேளாண்மை, சுற்றுச்சூழல், பொது நலன், பொருளாதார நடவடிக்கை மற்றும் குற்றங்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படும்.

## அவசரச் சட்டம் – கனடா




- கனட நாட்டின் பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ அரிதாகப் பயன்படுத்தப்படும் அவசர கால அதிகாரங்களைப் பயன்படுத்தினார்.
- இது "சுதந்திர அணிவகுப்பு" என்று அழைக்கப்படும் எதிர்ப்பாளர்களின் முற்றுகைகள் மற்றும் பொதுச் சீர்குலைவுகளை முடிவுக்கு கொண்டு வருவதில் மாகாணங்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது.
- சுதந்திர அணிவகுப்பு என்பது கனடாவில் நடைபெற்று வரும் தொடர் போராட்டங்கள் மற்றும் முற்றுகைகள் ஆகும்.
- கோவிட் – 19 தடுப்பூசி தொடர்பான ஆணைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு எதிராக சரக்குந்து ஓட்டுநர்களால் இந்த முற்றுகைகள் தொடங்கப்பட்டன.

## அமெரிக்கப் பசுமைக் கட்டிட சபையின் தரவரிசை

- அமெரிக்கப் பசுமைக் கட்டிடச் சபையானது, 2021 ஆம் ஆண்டில் எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் வடிவமைப்பில் தலைமைத்துவம் வகித்த அமெரிக்காவைச் சாராத முதல் 10 நாடுகளின் 9வது வருடாந்திரத் தரவரிசையினை வெளியிட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையின்படி, இந்தியா 146 திட்டப்பணிகளுடன் 3வது இடத்திலுள்ளது.
- சீனா இந்தத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது.
- இதனைத் தொடர்ந்து கனடா 2வது இடத்தில் உள்ளது.

## பானிபட் செயல்பாட்டு அலகு




- “பானிபட் செயல்பாட்டு அலகு” என்ற புதிய இராணுவப் பிரிவினை உருவாக்குவது பற்றி தாலிபன் அறிவித்துள்ளது.
- இந்தப் புதிய பிரிவானது பாகிஸ்தானுடன் எல்லையிலுள்ள ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹர் மாகாணத்தில் நிலைநிறுத்தப்படும்.

- ஹரியானாவிலுள்ள பானிபட் என்ற இடம் அந்நியப் படையெடுப்பாளர்களுக்கும் இந்திய அரசர்களுக்கும் இடையே 3 போர்கள் நடைபெற்ற ஒரு இடமாகும்.
- ஆப்கானிஸ்தானில் இந்த 3 போர்களும் குறிப்பாக, 1761 ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று அகமது சா அப்தலிக்கும் மராத்தியர்களுக்கும் இடையில் நடைபெற்ற 3வது போரானது அவ்வப்போது விவாதத்திற்கு வரும் ஒரு போராகும்.
- அப்தலி, இன்றைய ஆப்கானிஸ்தானை நிறுவியவராகக் கருதப்படுகிறார்.
- மராத்தியர்களுக்கு எதிரான போரில் இவர் பெற்ற ஒரு வெற்றியை ஆப்கானியர்கள் போற்றுகின்றனர்.

## 'Quit Tobacco' செயலி

- தென்கிழக்கு ஆசியப் பகுதிக்கான உலக சுகாதார அமைப்பானது 'Quit Tobacco' என்ற செயலியை வெளியிட்டுள்ளது.
- இந்தச் செயலியானது புகையற்ற மற்றும் அனைத்து வகையான புகையிலையின் பயன்பாட்டினையும் கைவிடுவதற்கு மக்களுக்கு உதவும்.
- இந்தச் செயலியானது உலக சுகாதார அமைப்பின் ஓராண்டு அளவிலான 'Commit to quit' பிரச்சாரத்தின் போது வெளியிடப்பட்டது.

## முனிச் பாதுகாப்பு மாநாடு

- முனிச் பாதுகாப்பு மாநாடானது 1963 ஆம் ஆண்டு முதல் ஜெர்மனியின் முனிச் நகரில் சர்வதேசப் பாதுகாப்புக் கொள்கை குறித்த ஒரு வருடாந்திர மாநாடாக நடத்தப்பட்டு வருகிறது.
- இது உலகின் மிகப்பெரிய மாநாடாகும்.
- இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் S. ஜெய்சங்கர் கலந்து கொள்கிறார்.

msc
Munich Security Conference

## கிரேட்டர் மாலத்தீவு ஆழ்கடல் முகடு பற்றிய ஆய்வு

- சமீபத்தில், மேற்கு இந்தியப் பெருங்கடலில் உள்ள புவி இயக்கப் பகுதியான "கிரேட்டர் மாலத்தீவு ஆழ்கடல் முகட்டின்" மேலோட்டு இயக்கப் பரிணாம வளர்ச்சியை (tectonic evolution) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

- மேலோட்டு இயக்கப் பரிணாமமானது, முதலில் இருந்த கோண்ட்வானா நிலப்பரப்பின் பிரிந்த பகுதியை மறுகட்டமைக்க உதவும்.
- இந்த அம்சமானது, கண்டங்களின் இன்றையக் கட்டமைப்பு, கண்டப் பகுதிகள் மற்றும் இந்தியப் பெருங்கடலில் கடல் படுகைகள் உருவாக வழி வகுத்தது.




## மலாவி தீவிர போலியோ பாதிப்பு



- மூன்று வயது குழந்தைக்குத் தீவிர போலியோ (wild polio) பாதிப்பு கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து மலாவி அங்கு தீவிர போலியோ பெருந்தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிவித்தது.
- ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட இவ்வகையான முதல் பாதிப்பு இதுவேயாகும்.
- 2020 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்கக் கண்டமானது அனைத்து வகையான தீவிர போலியோவிலிருந்து விடுபட்டதாக அறிவிக்கப்பட்டது.
- உலகில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளில் மட்டுமே இன்னும் தீவிர போலியோ பாதிப்பு உள்ளது.

## UNCTAD வெளியிட்ட உலகளாவிய வர்த்தக மேம்பாடு பற்றிய புதிய தகவல்

- 2021 ஆம் ஆண்டில் உலகின் சரக்கு வர்த்தகமானது வலுவான அளவில் தொடர்ந்து நடைபெற்றது என்றும், மேலும் சேவை வர்த்தகமானது இறுதியாக கோவிட்-19 தொற்றிற்கு முந்தைய நிலைகளுக்குத் திரும்பியது என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய வர்த்தகமானது சாதனை அளவான 28.5 டிரில்லியன் டாலர்களைத் தொட்டது.
- இது 2020 ஆம் ஆண்டில் 25% அதிகரிப்பையும், 2019 ஆம் ஆண்டில் கோவிட்-19 தொற்று நோய் தொடங்குவதற்கு முன்பு இருந்ததை விட 13% அதிகரிப்பையும் காட்டுகிறது.
- 2020 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் செல்வ வளமிக்க நாடுகளில் 15% ஆக இருந்த ஏற்றுமதியினை விட வளர்ச்சியடையாத நாடுகளின் ஏற்றுமதி சுமார் 30% அதிகரித்துள்ளது.



## ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் எல்லைகள் அறிக்கை




- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது எல்லைகள் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- "இரைச்சல், தீப்பிழம்பு மற்றும் பொருத்தமின்மை : சுற்றுச்சூழலில் அதிகரித்து வரும் பிரச்சினைகள்" (Noise, Blazes, and Mismatches: Emerging Issues of Environmental Concern) என்று இந்த அறிக்கைக்குத் தலைப்பிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இயல்பான உயிரிச் சுழற்சிகளை சீர்குலைக்கின்ற, உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற அதிகரித்து வரும் பொது சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துகிறது.
- அடிக்கடி நிகழும் ஒலி மாசுபாடு, தீவிர காட்டுத் தீ மற்றும் பல்வேறு சுற்றுச்சூழல் அச்சுறுத்தல்களில் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## mRNA தடுப்பு மருந்து உற்பத்தி

- 6 ஆப்பிரிக்க நாடுகள் தங்களுக்கான சொந்த mRNA தடுப்பு மருந்தினை உற்பத்தியை நிறுவுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- அவையாவன: எகிப்து, கென்யா, நைஜீரியா, செனகல், தென் ஆப்பிரிக்கா மற்றும் துனீசியா ஆகும்.
- கோவிட் மற்றும் பிற நோய்களை எதிர்கொள்வதற்காக வேண்டி ஆப்பிரிக்கா தனது மக்களுக்கான தடுப்பு மருந்தினைத் தானே உற்பத்தி செய்யும் என்பதை உறுதி செய்வதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகிறது.

## பாகிஸ்தானின் புதிய இணையவழிக் குற்றச் சட்டம்

- சமூக ஊடகங்களில் பரவும் பொய்யான செய்திகளை எதிர்த்து தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு உதவும் ஒரு புதிய சட்டத்தினைப் பாகிஸ்தானிய அதிகாரிகள் அறிவித்து உள்ளனர்.
- இந்தப் புதியச் சட்டமானது ஒரு நபரையோ அல்லது ஒரு நிறுவனத்தினையோ அவதூறாகப் பேசினால் விதிக்கப்படும் ஒரு அதிகபட்ச தண்டணையை 3 ஆண்டுகள் என்ற அளவிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தியதோடு குற்றவாளிகள் ஜாமீன் பெறுவதைக் கட்டுப்படுத்தும் விதிமுறையையும் கொண்டுள்ளது.
- தவறான செய்திகளைப் பரப்புதல் ஆனது, ஜாமீன் பெறமுடியாத ஒரு குற்றமாக வகைப்படுத்தப்பட்டு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.
- பாகிஸ்தான் மனித உரிமைகள் ஆணையமானது இந்தப் புதியச் சட்டத்தினை ஜன நாயகத்திற்கு முரணானது என்று விவரித்துள்ளது.

## C – Dome

- இஸ்ரேல் நாடானது "C-Dome" எனப்படும் ஒரு புதிய கடற்படை வான்வழிப் பாதுகாப்பு அமைப்பினை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- இது இஸ்ரேலியக் கடற்படையின் சார்-6 ரக போர்க்கப்பல்களில் பயன்படுத்தப்பட உள்ளது.
- C-Dome என்பது காசா நிலப்பகுதியிலுள்ள ஈரான் டோம் அமைப்பின் கடல்பரப்பில் இயங்கக் கூடிய மாதிரியிலான ஒரு வடிவமாகும்.
- இதனை வெற்றிகரமாகப் பரிசோதித்தன் மூலம் இஸ்ரேல் நாட்டின் கடல்சார் சொத்துகளைப் பாதுகாப்பதில் இஸ்ரேலியக் கடற்படையின் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பிற்கு மேலும் வலிமை கூடியுள்ளது.




## 9000 ஆண்டுகள் பழமையான ஆலயம்

- ஜோர்டானின் கிழக்குப் பாலைவனத்திலுள்ள ஒரு தொலைதூரப் புதிய கற்காலத் தளத்தில், 9000 ஆண்டுகள் பழமையான ஆலயம் ஒன்றினை ஜோர்டான் மற்றும் பிரான்ஸ் நாட்டின் தொல்லியலாளர் குழுவானது கண்டறிந்தது.

- டெசர்ட் கைட்ஸ் அல்லது மிகப்பெரிய விலங்குப் பொறி அமைப்பாக அறியப்படும் ஒரு மிகப் பெரியக் கட்டமைப்பின் அருகில் ஒரு சடங்கு வளாகமும் கண்டறியப்பட்டது.
- இந்தப் பொறி அமைப்புகளானது புதிய கற்கால முகாம் மையங்களில் வன விலங்குகளைப் பிடித்துக் கொள்வதற்குப் பயன்படுத்தப் பட்டதாக கருதப்படுகிறது.



## நோர்டு ஸ்டிரீம் 2 குழாய் இணைப்பு




- இது ரஷ்யாவிலுள்ள உஸ்த்-லூகாவிலிருந்து பால்டிக் கடல் வழியாக ஜெர்மனியிலுள்ள கிரீஃப்ஸ்வால்ட் பகுதி வரை செல்லும் 1,200 கி.மீ. நீளம் கொண்ட ஒரு குழாய் இணைப்பு ஆகும்.
- இது ஆண்டுக்கு 55 பில்லியன் கன மீட்டர் வாயுவினை எடுத்துச் செல்லுகிறது.
- இந்தக் குழாய் இணைப்பை நிறுவுவதற்கான ஒரு முடிவானது 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டது.
- நோர்டு ஸ்டிரீம் 1 அமைப்பின் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்தது.
- நோர்டு ஸ்டீரிம் 2 அமைப்புடன் சேர்த்து இந்த அமைப்பு 110 பில்லியன் கன மீட்டர் வாயுவினை ஜெர்மனி நாட்டிற்குக் கொண்டுச் செல்லும்.

- கிழக்கு உக்ரைனின் பிரிவினைவாதக் குடியரசுகளான டோனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் ஆகியவற்றின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதாக ரஷ்யா அறிவித்ததை அடுத்து, நோர்டு ஸ்டிரீம் 2 வாயு குழாய் இணைப்புத் திட்டத்திற்கு அனுமதி வழங்கும் செயல்முறையை நிறுத்த ஜெர்மனி நடிவடிக்கை எடுத்துள்ளது.

## காட்டுத்தீக்கான தயார்நிலை விதிமுறை

| New "Fire Ready Formula" | |
|---|---|
| Budget item | % share of the total on wildfire management recommended |
| Planning | 1% |
| Prevention | 32% |
| Preparedness | 13% |
| Response | 34% |
| Recovery | 20% |

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது (UNEP) காட்டுத்தீ பற்றிய தனது அறிக்கையில், 'காட்டுத்தீக்கான தயார்நிலை விதிமுறைகளை' ஏற்றுக் கொள்ளுமாறு உலக அரசாங்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது காட்டுத்தீ நிகழ்வுகள் ஏற்படுவது எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்று எச்சரித்து, அதற்காக "காட்டுத்தீக்கான தயார்நிலை விதிமுறைகளை" பரிந்துரைத்தது.
- இந்த விதிமுறையானது, செலவினங்களில் 66 சதவீதத்தினை (மூன்றில் இரண்டு பங்கு) திட்டமிடல், தடுப்பு, தயார்நிலை மற்றும் மீட்பு ஆகிய பணிகளுக்காக வேண்டி ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- மீதமுள்ள 34% (மூன்றில் ஒரு பங்கு) நிதிகளை மீட்பு நடவடிக்கைகளுக்காக வேண்டி செலவிடலாம்.

## ரஷ்ய-உக்ரைன் நெருக்கடி ஐ.நா.பாதுகாப்புச் சபையின் வரைவுத் தீர்மானம்

- உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் தாக்குதல்களைக் கடுமையாகக் கண்டிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தில் (அமெரிக்காவின் ஆதரவுப் பெற்ற) இருந்து இந்தியா விலகிக் கொண்டது.
- கருத்து வேறுபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரே வழி விவாதம் என்று கூறிய இந்தியா, இராஜதந்திர உத்திகள் கைவிடப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்தது.
- பிப்ரவரி மாதத்திற்கான தலைமைத்துவத்தை வகிக்கும் ரஷ்யா, இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கித் தீர்மானத்தினை நிராகரித்தது.
- ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சீனா ஆகிய நாடுகளும் வாக்களிக்கவில்லை.
- இந்த தீர்மானத்தை ரஷ்யா நிராகரித்ததால், பிற உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.



PR/Amb T S Tirumurti
@ambtstirumurti

In UN Security Council meeting on #Ukraine today, India abstained on the vote on draft resolution.

Our Explanation of Vote ⤵️

**UNSC Adoption of Resolution on the situation in Ukraine**
**[25 February 2022; 1500 hrs]**
**Statement by Ambassador T.S. Tirumurti**
**Permanent Representative of India to the United Nations**
**-----**
**EXPLANATION OF VOTE**

- India is deeply disturbed by the recent turn of developments in Ukraine.
- We urge that all efforts are made for the immediate cessation of violence and hostilities.
- No solution can ever be arrived at, at the cost of human lives.
- We are also deeply concerned about the welfare and security of the Indian community, including a large number of Indian students, in Ukraine.
- The contemporary global order has been built on the UN Charter, international law, and respect for the sovereignty and territorial integrity of states.
- All member states need to honour these principles in finding a constructive way forward.
- Dialogue is the only answer to settling differences and disputes, however daunting that may appear at this moment.
- It is a matter of regret that the path of diplomacy was given up. We must return to it.
- For all these reasons, India has chosen to abstain on this resolution.

# பொருளாதாரச் செய்திகள்

## உலகில் தங்கத்தின் தேவைப் போக்குகள்

- "உலகில் தங்கத்தின் தேவைப் போக்குகள்" என்று தலைப்பிடப்பட்ட அறிக்கையினை உலக தங்கச் சபை வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் பல்வேறு நாடுகளின் மத்திய வங்கிகள் வாங்கிய தங்கத்தின் மதிப்பு சரிந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- இது கிட்டத்தட்ட 60% ஆக குறைந்து 272.9 டன்களாக சரிந்தது.
- 2020-21 ஆம் நிதியாண்டின் இரண்டாம் கால்பகுதியில் ஏற்பட்ட சரிவானது மிகவும் குறிப்பிடத் தக்கது.

## பொருளாதார ஆய்வறிக்கை 2022




- ❖ நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், 2021-22 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை 2022 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதியன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- ❖ நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படும் பொருளாதார ஆய்வறிக்கை, தலைமைப் பொருளாதார ஆலோசகர் தலைமையிலான குழுவால் தயாரிக்கப் பட்டது.
- ❖ இதனைச் சமர்ப்பிப்பதற்கு சில நாட்களுக்கு முன்பாக, பொருளாதார நிபுணர் V. ஆனந்த நாகேஸ்வரனை புதிய தலைமைப் பொருளாதார ஆலோசகர் ஆக மத்திய அரசு நியமித்தது.
- ❖ 2022-23 ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 8-8.5 சதவீதமாக வளர்ச்சி அடைய உள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.
- ❖ நடப்பு நிதியாண்டு 2021-22 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் ஆனது 9.2 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ 2025 ஆம் நிதியாண்டில் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியை எட்டுவதற்கு, இந்தக் காலகட்டத்தில் இந்தியா சுமார் 1.4 டிரில்லியன் டாலர்களை உள்கட்டமைப்புக்காக வேண்டி செலவிட வேண்டும் என்று இந்தப் பொருளாதார ஆய்வறிக்கை கூறுகிறது.
- ❖ 2021-22 ஆம் ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கையின் கருத்துரு, “Agile approach” என்பதாகும்.

## எண்ணிம ரூபாய்

- ❖ 2022-2023 ஆம் ஆண்டு முதல் டிஜிட்டல் (எண்ணிம) ரூபாய் வெளியிடப்படும் என மத்திய நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.
- ❖ எண்ணிம ரூபாயானது இந்தியாவின் மத்திய வங்கியினுடைய டிஜிட்டல் பணமாகும்.
- ❖ இந்தப் பணமானது இந்திய ரிசர்வ் வங்கியினால் வெளியிடப்படும்.
- ❖ எண்ணிம ரூபாய் இயக்கப்படுவதற்கான தொழில்நுட்பம் தொடர் சங்கிலி (Blockchain) தொழில்நுட்பமாகும்.




## முதலாவது மறுமதிப்பிடப்பட்ட GDP மதிப்பீடுகள் – NSO

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழான தேசியப் புள்ளியியல் அலுவலகமானது, 2020-21 ஆம் ஆண்டிற்கான தேசிய வருமானம், நுகர்வுச் செலவினம், சேமிப்பு மற்றும் மூலதன உருவாக்கம் ஆகியவற்றிற்கான முதலாவது மறு மதிப்பிடப் பட்ட மதிப்பீடுகளை வெளியிட்டது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 6.6% அளவு குறைந்துள்ளதாக இந்த மதிப்பீடுகள் கூறுகின்றன.
- முன்பாக, மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.3% ஆக குறைந்தது.
- இந்தக் குறைவிற்கான ஒரு முக்கியக் காரணம் கோவிட் பெருந்தொற்று மற்றும் பொது முடக்கம் விதிக்கப் பட்டதேயாகும்.

## தேசிய நிலப் பணமாக்கல் கழகம்

- இந்திய அரசானது தேசிய நிலப் பணமாக்கல் கழகத்தை நிறுவி வருவதாக பொருளாதார ஆய்வறிக்கை கூறுகிறது.
- நிலம் மற்றும் இதர பிற சொத்துகளைப் பணமாக்குதலை மேற்கொள்வதற்காக இது நிறுவப் படுகிறது.
- நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பிற்கு இணங்க இது நிறுவப்பட்டு வருகிறது.
- இது முழுவதுமாக அரசிற்குச் சொந்தமான நிறுவனமாக உருவாக்கப்படுகிறது.

## இந்தியாவின் முன்னணி வர்த்தகப் பங்குதார நாடு – 2021

- 2021 ஆம் ஆண்டில் 112.3 பில்லியன் டாலர் மதிப்பிலான வர்த்தகத்துடன் இந்தியாவின் முன்னணி வர்த்தகப் பங்குதார நாடாக அமெரிக்கா திகழ்ந்தது.
- இதில் அமெரிக்காவினையடுத்து சீனா இடம்பெற்றுள்ளது.
- இந்தியா மற்றும் சீனா இடையிலான வர்த்தகத்தின் மதிப்பு 110.4 பில்லியன் டாலர் ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் முன்னணி வர்த்தகப் பங்குதார நாடாக சீனாவும் அதனையடுத்து 2வது இடத்தில் அமெரிக்காவும் இருந்தன.
- 2019 ஆம் ஆண்டில் அமெரிக்கா முதலிடத்திலும் சீனா 2வது இடத்திலும் இருந்தன.

## சவரன் தங்கப் பத்திரங்கள் மீட்பு

- இந்திய ரிசர்வ் வங்கியானது, 2016 ஆம் ஆண்டில் சவரன் தங்கப் பத்திரத்தின் அலகு ஒன்றுக்கு ரூ.4,813 என்ற விலையில் வழங்கப்பட்ட சவரன் தங்கப் பத்திரங்களை முன்கூட்டியே மீட்டெடுக்க முடிவு செய்துள்ளது.
- மத்திய அரசின் விதிகளின்படி, அத்தகையத் தங்கப் பத்திரங்கள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்தாவது வருடத்திற்குப் பிறகு வட்டி செலுத்தப்படும் தேதியில் அதனை முன்கூட்டியே திரும்பப் பெற அனுமதிக்கப்படுகிறது.

## அதிகளவில் தங்கம் வாங்கிய 2வது பெரிய நிறுவனம் - இந்திய ரிசர்வ் வங்கி

- அதிகளவில் தங்கம் வாங்கும் மிகப்பெரிய நிறுவனம் தாய்லாந்தின் மத்திய வங்கி 2021 ஆம் ஆண்டில் 90 மெட்ரிக் டன் தங்கத்தை வாங்கியது.
- 2021 ஆம் ஆண்டில் (77.5 மெட்ரிக் டன்கள்) தங்கத்தை வாங்கிய இரண்டாவது பெரிய நிறுவனமாக இந்திய ரிசர்வ் வங்கி உள்ளது.
- இதன் மூலம் தங்கத்தின் மொத்தக் கையிருப்பு 754.1 டன்னாக உயர்ந்துள்ளது.
- கோல்ட்ஹப் என்ற தளத்தின் கூற்றுப் படி, இந்தியாவின் அதிகாரப்பூர்வ தங்க இருப்பு உலகிலேயே ஒன்பதாவது பெரியது ஆகும்.
- கோல்ட்ஹப் என்பது உலக தங்கச் சபையின் அதிகாரப்பூர்வ இணையதளமாகும்.
- இது விலை மதிப்பற்ற பல உலோகங்கள் தொடர்பான அனைத்துத் தரவையும் கண்காணிக்கிறது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கை புதுப்பிப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு முக்கிய வட்டி விகிதங்களை மாற்றாமல் வைத்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு, வெளியிடப்பட்ட அதன் முதல் கொள்கையில் ரிசர்வ் வங்கி அதன் இணக்கமான நிலைப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டது.
- தொடர்ந்து பத்தாவது முறையாக நிதிக் கொள்கைக் குழு தனது நிலைப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டது.
- நிதிக் கொள்கைக் குழு ஆனது ரெப்போ விகிதம் மற்றும் ரிவர்ஸ் ரெப்போ விகிதங்கள் ஆகியவற்றை முறையே 4 சதவீதம் மற்றும் 3.35 சதவீதமாக மாற்றாமல் வைத்துள்ளது.
- இது அதிக பணவீக்கத்தின் பின்னணியில் 'உள்ளடக்க' நிலைப்பாட்டை (accommodative' stance) மேற்கொண்டுள்ளது.
- 2023 ஆம் நிதியாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 7.8 சதவீதமாக இருக்கும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் உள்ள (FY 2022) 9.2 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது, பொருளாதாரத்தைத் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு மேலான நிலைக்குக் கொண்டு செல்லும்.

- 2022 ஆம் நிதியாண்டிற்கான நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்கமானது 5.3 சதவீதமாக கணிக்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் நிதியாண்டில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதத்திற்கும் குறைவாக உள்ளது.
- மின்னணு ரசீதுகளின் வரம்பை ரூ.10,000 ரூபாயிலிருந்து ரூ.1 லட்சமாக உயர்த்த இக்குழு பரிந்துரைத்தது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தி பணமதிப்பிழப்புக் கணிப்பு

- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், 2022-23 ஆம் ஆண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பணமதிப்பிழப்பு பற்றிய மத்திய அரசின் கணிப்பு 3 முதல் 3.5 சதவீதமாக இருக்கும் என்று எடுத்துரைத்தார்.
- 2022-23 நிதியாண்டிற்கான உண்மையான GDP வளர்ச்சிக்கான அரசின் கணிப்பு 7.6 -8.1 சதவிகிதம் என்ற வரம்பில் உள்ளது.
- அதே நேரத்தில் மத்திய நிதிநிலை அறிக்கையில் 2023 நிதியாண்டிற்கான பெயரளவு GDP வளர்ச்சி விகிதம் 11.1 சதவிகிதமாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி பணமதிப்பிழப்பானது 'மறைமுகமான பண மதிப்பு இழப்பு' என்றும் அழைக்கப்படுகிறது.
- இது பொதுவான விலையில் ஏற்படும் பணவீக்கத்தின் அளவீடு ஆகும்.
- இது 'பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் உள்ள வேறுபாடு' என வரையறுக்கப்படுகிறது.
- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தி பணமதிப்பிழப்பு பற்றிய தகவல்களை வெளியிடுகிறது.

## புதியப் பங்கு வெளியீட்டு நடைமுறை – ஆயுள் காப்பீட்டுக் கழகம்




- ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் உள்ள தனது 5% பங்கினை விற்பதற்கு இந்திய அரசு திட்டமிட்டு வருகிறது.

- இதன் மூலம் 65,000 கோடி ரூபாய் நிதியினைத் திரட்ட அரசு முயற்சி செய்கிறது.
- இதில் 10% பங்குகளானது தகுதி வாய்ந்த காப்பீட்டாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
- இதில் 316.25 மில்லியன் பங்குகளை விற்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இது மொத்தப் பங்கில் 5 சதவிகிதத்திற்குச் சமமானதாகும்
- ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மொத்தப் பங்கு 6.32 பில்லியன் பங்குகள் ஆகும்.
- இதில் 35% பங்குகள் சில்லறை விற்பனை முதலீட்டாளர்களுக்காக ஒதுக்கப்பட உள்ளன.

## இந்தியாவின் சில்லறை விற்பனை விலை பணவீக்கம்




- நுகர்வோர் விலைக் குறியீட்டின் மூலம் கணக்கிடப்படும் இந்தியாவின் சில்லறை விற்பனை விலை பணவீக்கமானது ஜனவரி மாதத்தில், இந்திய ரிசர்வ் வங்கியின் ஏற்பு வரம்பான 6 சதவீதத்தையும் தாண்டி 6.01% ஆக உயர்ந்துள்ளது.
- ஒரு வருடத்திற்கு முன்பு ஒப்பீட்டளவில் குறைவான வீதத்தில் நுகர்வோர் பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளின் விலை அதிகரித்ததுடன் பணவீக்கத்தில் இந்த உயர்வானது ஏற்பட்டுள்ளது.
- நுகர்வோர் விலைக் குறியீட்டின் மூலம் கணக்கிடப்படும் பணவீக்கமானது முந்தைய டிசம்பர் மாதத்தில் 5.66% ஆக இருந்தது.
- 6% உச்சகட்ட ஏற்பு வரம்பு மற்றும் தாழ்மட்ட ஏற்பு வரம்பு 2% என்ற வரம்புடன் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 வரையில் வருடாந்திர பணவீக்கத்தினை 4% என்ற அளவில் வைத்திருக்க மத்திய வங்கியின் பணவியல் கொள்கையில் குறிப்பிடப்பட்டது.

## மில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துகளைக் கொண்டவர்கள் பற்றிய ஹுருன் அறிக்கை

- 2021ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள பணக்காரக் குடும்பங்களின் எண்ணிக்கை என்பது 11 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஹுருன் அறிக்கை கூறுகிறது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் பணக்காரக் குடும்பங்களின் எண்ணிக்கை 30% என்ற ஒரு அளவில் அதிகரித்து 6,00,000 என்ற அளவை எட்டும் என ஹுருன் அறிக்கை கூறுகிறது.

- அதிக எண்ணிக்கையிலான மில்லியன் டாலர் மதிப்பிலான சொத்துகளைக் கொண்ட குடும்பங்களைக் கொண்ட நகரங்களின் பட்டியலில் முதலிடத்தில் தற்போது மும்பை உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து டெல்லி மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்கள் உள்ளன.




## இந்தியாவின் மொத்த விற்பனை விலை பணவீக்கம்




- முந்தைய மாதத்தில் 13.56% ஆக இருந்த இந்தியாவின் மொத்த விற்பனை விலை பண வீக்கமானது ஜனவரி மாதத்தில் 12.96% ஆக குறைந்துள்ளது.
- மொத்த விற்பனை விலைக் குறியீட்டு அடிப்படையிலான பணவீக்கம் சமீபத்திய மாதங்களில் தொடர்ந்து குறைந்துள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 14.87% ஆக இருந்து 2021 டிசம்பர் மாதத்தில் 13.56% ஆகவும், 2022 ஜனவரி மாதத்தில் 12.96% ஆகவும் குறைந்துள்ளது.

## IDRCL நிறுவனத்தின் பங்கிற்கான சந்தா

- பாரத் ஸ்டேட் வங்கி, பஞ்சாப் தேசிய வங்கி, பாங்க ஆப் பரோடா, யுனியன் பாங்க் ஆஃப் இந்தியா, கனரா வங்கி மற்றும் மகாராஷ்டிரா வங்கி ஆகியவை இந்தியக் கடன் தீர்ப்பு நிறுவனத்தின் பங்குகளுக்கான ஒரு சந்தாவினைச் செலுத்துவதாக அறிவித்து உள்ளன.
- பொதுத்துறை வங்கிகள் மற்றும் பொதுத்துறை நிதி நிறுவனங்கள் IDRCL நிறுவனத்தில் அதிகபட்சம் 49% பங்கினை மேற்கொள்ளும்.
- மீதமுள்ள பங்குகளானது தனியார் துறை வங்கிகளிடம் இருக்கும்.
- தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனமானது நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், கொண்டு வரப்பட்டுள்ளது.
- தனியார் துறை வங்கிகள் தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்தின் 51% என்ற அளவிலான பங்கினைக் கொண்டிருக்கும்.

| Name of Bank | Stake acquired | Reduces stake by March 31, 2022 |
|---|---|---|
| State Bank of India (SBI) | 12.3% | 5% |
| Punjab National Bank (PNB) | 11.18% | 5% |
| Union Bank of India (UBI) | 12.3% | 10% |
| Canara Bank | 14.9% | 5% |
| Bank of Maharashtra (BoM) | 6.21% | 4% |
| Bank of Baroda (BoB) | 12.3% | 9.9% |

## இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியத்தின் இயக்குநர்



- நிதித் துறை அமைச்சகத்தின் நிதிச் சேவைகள் துறையின் செயலாளர் சஞ்சய் மல்ஹோத்ராவினை இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய வாரியத்தின் இயக்குநராக மத்திய அரசு நியமித்துள்ளது.
- நிதிச் சேவைகள் துறையின் செயலாளராக நியமிக்கப் படுவதற்கு முன்பு, மல்ஹோத்ரா REC லிமிடெட் என்ற நிறுவனத்தின் தலைவராகவும் அதன் மேலாண்மை இயக்குநராகவும் பணியாற்றினார்.
- இவர் தேபாசிஷ் பாண்டா என்பவரையடுத்து இந்தப் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

## டாலர்/ரூபாய்க்கான 2 ஆண்டுகால விற்பனை /கொள்முதல் பரிமாற்ற ஏலம்

| Swap Amount (USD Billion) | Auction date | Auction Time | Near Leg/Spot Date | Far Leg Date |
|---|---|---|---|---|
| 5 | March 08, 2022 | 10.30 AM-11.30 AM | March 10, 2022 | March 11, 2024 |

- இந்திய ரிசர்வ் வங்கியானது டாலர்/ரூபாய்க்கான ஒரு 2 ஆண்டு கால அளவிலான விற்பனை/கொள்முதல் பரிமாற்ற ஏலத்தினை அறிவித்துள்ளது.
- தனது முன்னோக்கு ஒப்பந்தங்களின் இறுதிநிலை வரம்பை நீட்டித்தல் மற்றும் எதிர் காலச் சொத்துகள் தொடர்பான சில வரவுகளை மிதப்படுத்தச் செய்தல் ஆகிய சில நோக்கங்களுடன் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- மத்திய வங்கியானது சந்தையில் ஈடுபடுபவர்கள் அதிகளவில் ஈடுபடச் செய்யும் 5 பில்லியன் டாலர் மதிப்பிலான, 2 ஆண்டுகால டாலர்/ரூபாய் விற்பனை/கொள்முதல் பரிமாற்ற ஏலத்தினை மேற்கொள்ள உள்ளது.
- இந்தப் பரிமாற்ற ஏலத்தின் கீழ், ஒரு வங்கியானது அமெரிக்க டாலர்களை இந்திய ரிசர்வ் வங்கியிடம் விற்கும்.

## முக்கிய நிதிச் சேவைத் தீர்வுகள்

- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் முக்கிய நிதிச் சேவைத் தீர்வுகளை அமல்படுத்துமாறு வங்கிசாரா நிதி நிறுவனங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவு இட்டுள்ளது.
- 10 அல்லது அதற்கு மேற்பட்ட நிலையான சேவை வழங்கும் நிறுவனங்களைக் கொண்ட மேல்நிலை மற்றும் நடுநிலை அளவிலான வங்கிசாரா நிதி நிறுவனங்கள் இவற்றைக் கட்டாயமாக 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் அமல்படுத்த வேண்டும்.

## இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடுகளின் வரவு- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை

- இந்தியாவின் அன்னிய நேரடி முதலீட்டு (FDI) பங்குகளின் வரவு 16 சதவீதம் குறைந்து 43.17 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- இது தொழில், உள்நாட்டு வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுத் துறை வெளியிட்ட 2021 ஆம் ஆண்டு ஏப்ரல்-டிசம்பர் மாதத்திற்கான தரவுகளில் கூறப்பட்டுள்ளது.
- முந்தைய ஆண்டின் இதே காலக் கட்டத்தில், பங்குகளின் வரவானது 51.47 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது.
- வன்பொருள் மற்றும் கணினி தொழில்நுட்பத் துறையில் (hardware and computer software sector) அதிக வரவுகள் இருந்தன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வாய்ப் புற்றுநோயைக் கண்டறிதல்

- மேற்கு வங்கத்திலுள்ள குருநானக் பல் மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் வாய்ப்புற்று நோயைக் கண்டறிவதற்கு ஒரு புதிய செயல் முறையை உருவாக்கியுள்ளனர்.
- இது புற்றுநோயின் நிலைகளையும் அதற்கு முந்தைய நிலைகளையும் வேறுபடுத்திக் காட்டுகிறது.
- உயர்தர திசு ஆய்வுச் செயல்முறை மூலம் இந்த வேறுபாடுகள் பதிவு செய்யப் படுகின்றன.
- இந்த ஆராய்ச்சியாளர் குழுவானது ஒரு புதிய புகைப்படமிடும் கருவியை உருவாக்கி உள்ளது.
- திசுக்களில் இரத்த ஓட்டத்தின் வீதத்தை மதிப்பிட்டுப் புற்றுநோயின் நிலைகளை இது மதிப்பிடுகிறது.

## ஓமைக்ரான் வைரசின் மூலக்கூறு நிலைப் பகுப்பாய்வு




- ஓமிக்ரான் திரிபின் முள் வடிவ புரதத்தின் மூலக்கூறு அளவிலான கட்டமைப்பின் பகுப்பாய்வை உலகிலேயே முதன்முதலாக பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.
- கிரையோ-எலக்ட்ரான் என்ற நுண்ணோக்கியைப் பயன்படுத்தி இந்தப் பகுப்பாய்வு செய்யப் பட்டது.
- பெரிதும் மாற்றமடைந்த இந்தத் திரிபானது, மனித உயிரணுக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும், நோய் எதிர்ப்புச் சக்தியை எவ்வாறு அதிகளவில் தவிர்க்கிறது என்பதையும் இந்தப் பகுப்பாய்வு வெளிக் கொணர்ந்தது.

## செவ்வாய்க் கிரகத்தில் நீர்




- நாசாவின் செவ்வாய் ஆய்வுப் பணி விண்கலமானது, செவ்வாய்க் கிரகத்தில் 2 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நீர் இருந்ததைக் கண்டறிந்துள்ளது.
- ஆனால் இன்று, அந்தக் கிரகத்திலிருந்த அனைத்து நீரும் ஆவியாகிவிட்டன.
- அந்தக் கிரகத்தின் மேற்பரப்பில் படிந்திருந்த உப்புப் படிமங்களைக் கொண்டு இந்த ஆய்வு இதனை உறுதி செய்துள்ளது.

## ஹம்பர்டியம் கோவிடம்

- அறிவியலாளர்கள் சமீபத்தில் ஹம்பர்டியம் கோவிடம் என்ற ஒரு புதிய இனத்தைக் கண்டறிந்தனர்.
- இவை புதிய தட்டைப்புழு இனங்களாகும்.
- இவை இத்தாலி மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளில் காணப்படும் வேட்டை நத்தை இனங்களில் காணப்படுகின்றன.
- கோவிட் பெருந்தொற்றின் நினைவாக இவற்றிற்கு இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.




## மீத்திறன் கணினி பரம் பிரவேகா




- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனமானது "பரம் பிரவேகா" எனப் படும், இந்தியாவின் மிகவும் சக்தி வாய்ந்த மீத்திறன் கணினிகளுள் ஒன்றை இயக்கி உள்ளது.
- பரம் பிரவேகா ஆனது 3.3 பெட்டாஃபிளாப்ஸ் என்ற மீத்திறனைக் கொண்டுள்ளது.
- இது ஒரு இந்தியக் கல்வி நிறுவனத்திலுள்ள மிகப்பெரிய மீத்திறன் கணினியாகும்.
- இது மேம்பட்ட கணினிமுறையை உருவாக்குவதற்கான மையத்தினால் (Centre for Development of Advanced Computing) வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## அட்லஸ் குறுங்கோள் கண்காணிப்பு அமைப்பு




- நாசாவின் நிதியுதவி பெற்ற அட்லஸ் என்ற அமைப்பானது (Asteroid Terrestrial-Impact Last Alert System - ATLAS) ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கு ஒரு முறை, பூமிக்கு அருகில் உள்ள பொருள்களின் (NEOs) முழு இருண்ட வெளியையும் ஆய்வு செய்யும் திறன் கொண்ட ஒரு முதல் ஆய்வுக் கலமாகும்.
- அட்லஸ் என்பது ஒரு அதிநவீன குறுங்கோள் கண்காணிப்பு அமைப்பு ஆகும்.
- அட்லஸ் சமீபத்தில் சிலி மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய இடங்களில் இரண்டு கூடுதல் கண்காணிப்பு மையங்களை நிறுவி தெற்கு அரைக்கோளம் வரையில் அதன் கண்காணிப்பு வரம்பினை விரிவுபடுத்தியுள்ளது.
- இது இப்போது நான்கு தொலைநோக்கிகளைக் கொண்டுள்ளது.
- இது ஏற்கனவே ஹவாயில் உள்ள ஹலேகலா மற்றும் மௌனலோவா ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டுள்ள இரண்டு வடக்கு அரைக்கோளத் தொலை நோக்கிகளைக் கொண்டுள்ளது.

## ஊடுருவ இயலாத குவாண்டம் தகவல் தொடர்பு

- அகமதாபாத்திலுள்ள விண்வெளி பயன்பாட்டு மையம் மற்றும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தைச் சேர்ந்த சில ஆராய்ச்சியாளர்கள் ஒரு குவாண்டம் கட்டமைப்பினை வெற்றிகரமாக நிரூபித்துக் காட்டியுள்ளனர்.
- இவர்கள் ஒரு நிகழ்நேர முதன்மை குவாண்டம் வழங்கீட்டினைப் பயன்படுத்தி 300 மீ இடைவெளியில் அமைந்த இரு இடங்களுக்கு இடையே ஊடுருவே இயலாத ஒரு தகவல் தொடர்பினை மேற்கொண்டனர்.
- குவாண்டம் தகவல் தொடர்பானது வேற்று நிறுவனம் ஒன்றினால் மறைகுறியாக்கம் செய்யவோ (அ) அதனுள் ஊடுருவவோ இயலாத உயர்மட்டக் குறியீடு மற்றும் குவாண்டம் குறியாக்கத்தினைக் கொண்டு இரு பகுதிகளை இணைப்பதற்கான மிக பாதுகாப்பான வழிமுறைகளாகும்.
- குவாண்டம் தகவல் தொடர்பில் ஒருவர் ஒரு செய்தியை முடக்க முயற்சித்தால், இந்தத் தொழில்நுட்பம் அந்தச் செய்தியை, அனுப்புநரை எச்சரிக்கும் வகையில் மாற்றி அமைத்து அல்லது நீக்கும் வகையிலான அதன் படிவத்தை மாற்றுகிறது.




## கோள்களை வாழ்வதற்கு ஏற்றதாக்குவதில் துணைக் கோள்கள் (நிலவு)

- ஒரு புதிய ஆய்வானது நிலவின் உருவாக்கத்தை ஆய்வு செய்து ஒரு சில கோள்கள் மட்டுமே ஒரு முதன்மைக் கோளினை ஒத்த ஓரளவு பெரிய துணைக் கோள்களை உருவாக்க முடியும் என கண்டறிந்துள்ளனர்.
- நிலவானது நமது பூமியின் உயிரியல் மூலக்கூறுகளின் உயிரியல் சுழற்சி மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பகல் நேரத்தின் நீளத்தினையும் கடல் அலைகளையும் கட்டுப்படுத்துகிறது.
- மேலும் பூமியின் சுழல் அச்சினை உறுதிப்படுத்துவதன் மூலம் உயிர்கள் உருவாகி வளர்ச்சியடைவதற்கு ஏற்ற ஒரு சூழலை வழங்கி பூமியின் பருவநிலைக்குப் பெரும் பங்கினை வழங்குகிறது.
- பூமியில் வாழ்வதற்கு நிலவு மிகவும் முக்கியமானது என்பதால் மற்றக் கிரகங்களில் உயிர் வாழ்வதற்கு ஒரு துணைக்கோள் ஆனது (நிலவு) ஒரு சாத்தியமிக்க நன்மை பயக்கும் ஓர் அம்சமாக இருக்கலாம் என அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

## வளைய வடிவ மூலக்கூறுகள் பற்றிய ஆராய்ச்சி



- மாசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் வேதிப் பொறியாளர்கள் எஃகை விட வலுவானதும் நெகிழியை விட இலகுவானதுமான புதிய பொருளை உருவாக்கி உள்ளனர்.
- இதனை எளிதாக பெரிய அளவில் உற்பத்தி செய்ய இயலும்.
- இவர்களின் ஆய்வானது "நேச்சர்" என்ற இதழில் வெளியிடப்பட்டது.
- இது மற்ற பாலிமர்களைப் போலல்லாது தானாகவே தகடாக வடிவம் பெரும்.

## குவார்க் – குளுவான் பிளாஸ்மாவில் உள்ள X – துகள்கள்

- ஒரு பெரிய ஹேட்ரான் மோதல் கருவியில் மேற்கொள்ளப்பட்ட கனரக அயனி மோதல்களில் உருவான குவார்க் – குளுவான் பிளாஸ்மாவில் (quark-gluon plasma), 2003 ஆம் ஆண்டில் முதன்முதலில் கண்டறியப்பட்ட நான்கு குவார்க்கல்களை (மீநுண் அணுத் துகள்) கொண்ட ஒரு மர்மமான X-துகள் கண்டறியப்பட்டுள்ளது.
- CERN மேற்கொள்ளும் சிறிய மியூன் கம்பிச்சுருள் (Compact Muon Solenoid) ஆய்வில் ஈடுபட்டுள்ள இயற்பியலாளர்களால் இந்தக் கண்டுபிடிப்பானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்தத் துகளை பற்றிய கூடுதல் ஆய்வுகள், குவார்க் – குளுவான் பிளாஸ்மாவிலிருந்து உருவான புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்கள் போன்ற ஆரம்பகால பேரண்டத்தில் இருந்ததாக நம்பப்படும் ஹேட்ரான்கள் (hadrons) எவ்வாறு உருவாகின்றன என்பதை விளக்க உதவும்.



## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மார்பக (X-கதிர்) ஊடுகதிர் ஆய்வு

- ஜோத்பூர் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஒரு மார்பக ஊடுகதிர் (X-கதிர்) தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.
- இந்தத் தொழில்நுட்பமானது கோவிட்-19 பரிசோதனையில் பயன்படுத்தப்படும்.
- ஆராய்ச்சியாளர்கள் குழுவானது ஓர் ஆழ்ந்த கற்றல் அடிப்படையிலான ஒரு வழி முறையை முன்வைத்துள்ளது.
- இந்த வழிமுறையானது, மார்பக ஊடுகதிர் வரைபடத்திலுள்ள அசாதாரணங்களைக் கண்டறிந்து கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஒரு நுரையீரலையும் கோவிட் தொற்றினால் பாதிக்கப்படாத ஒரு நுரையீரலையும் வேறுபடுத்திக் காட்டும்.

## மாபெரும் மேகெல்லன் தொலைநோக்கி

- மாபெரும் மேகெல்லன் தொலைநோக்கியானது கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- இது ஹபிள் என்ற ஸ்பேஸ் தொலைநோக்கியை விட 10 மடங்கு அதிக பகுதிறனைக் கொண்டிருக்கும்.
- மேகெல்லன் தொலைநோக்கியானது ஒரு மாபெரும் தொலைநோக்கி ஆகும்.
- இது சிலி நாட்டிலுள்ள லாஸ் காம்பனாஸ் ஆய்வகத்தில் அமைக்கப்பட உள்ளது.
- அமெரிக்காவின் தலைமையில் இது கட்டமைக்கப்படுகிறது.
- பிரேசில், ஆஸ்திரேலியா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் இத்திட்டத்தின் பங்கு தார நாடுகளாகும்.
- சிலி இத்திட்டத்தின் ஏற்பு நாடாகும்.



## அணுக்கரு இணைவு ஆற்றலில் புதிய சாதனை

- ஐக்கிய ராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஜெட் ஆய்வகமானது, சமீபத்தில் ஓர் இணைவு வினையிலிருந்து 59 என்ற அளவில் மெகா ஜூல் ஆற்றலை உற்பத்தி செய்தது.
- இந்த வினையானது ஐந்து விநாடிகளுக்கு நடத்தப்பட்டது.

- இதன் மூலம் இந்த நிறுவனம் தனது சொந்த உலகச் சாதனையை முறியடித்துள்ளது.
- இதன் மூலம், இந்த நிறுவனம் ஒரு சிறு நட்சத்திரத்தை உருவாக்கி அதை 5 வினாடிகள் நிலை பெறச் செய்யும் திறனைப் பெற்றுள்ளது.




## MUSE மற்றும் ஹீலியோஸ்வார்ம் ஆய்வுக் கலம்

- சூரியனின் இயக்கவியல், தொடர்ந்து மாறிவரும் விண்வெளிச் சூழல் மற்றும் சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான இணைப்பு பற்றிய நமது புரிதலை மேம்படுத்துவதற்காக, பல்பிரிவு சூரியசக்தி ஆய்வுக் கலம் (MUSE) மற்றும் ஹீலியோ ஸ்வார்ம் ஆகிய இரண்டு அறிவியல் ஆய்வுக் கலங்களை நாசா தேர்ந்தெடுத்தது.
- இந்த இரண்டு ஆய்வுக் கலங்களும் பிரபஞ்சத்தைப் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவுகளை வழங்குவதோடு, விண்வெளி வீரர்கள், செயற்கைக்கோள்கள் மற்றும் புவியிடங்காட்டி அமைப்பு போன்ற தகவல் தொடர்பு சமிக்ஞைகளைப் பாதுகாப்பதற்கான சில முக்கியமான தகவல்களையும் வழங்கும்.
- இந்த ஆய்வுப் பயணங்கள் சூரிய வளிமண்டலம் மற்றும் விண்வெளி பற்றிய புதிய மற்றும் ஆழ்ந்த தகவல்களை வழங்கும்.
- சூரியனின் கரோனா பகுதியின் வெப்பம் உண்டாக்கும் ஆற்றல் பற்றி புரிந்து கொள்வதற்கு MUSE (Multi-slit Solar Explorer) ஆய்வுக் கலம் விஞ்ஞானிகளுக்கு உதவும்.
- ஹீலியோஸ்வார்ம் கலம் என்பது ஒன்பது விண்கலங்களின் ஒரு தொகுதி அல்லது "திரள்" ஆகும்.

## வாழத்தகுந்த கிரகங்கள்

- இந்திய வானியற்பியல் கழகத்தைச் சேர்ந்த வானியலாளர்கள், வாழ்வதற்கு ஏற்ற அதிக வாய்ப்புகளை உடைய கிரகங்களை அடையாளம் காண ஒரு புதிய வழியை உருவாக்கியுள்ளனர்.
- BITS பிலானியின் கோவா வளாகத்தினைச் சேர்ந்த வானியலாளர்களுடன் இணைந்து இவர்கள் இந்தப் புதிய வழியை உருவாக்கியுள்ளனர்.

- இதற்காக அவர்கள் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான வழிமுறை ஒன்றைப் பயன்படுத்தினர்.
- இதைப் பயன்படுத்தி இதுவரையில் அறியப்பட்ட 5,000 கிரகங்களில் 60 கிரகங்கள் வாழ்வதற்கு ஏற்ற சாத்தியக் கூறுகள் உள்ளவையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- புதிய செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முறைக்கு "Multi-Stage Memetic Binary Tree Anomaly Identifier" என்று பெயரிடப்பட்டுள்ளது.

## ப்ராக்ஸிமா டி கோள்




- ப்ராக்ஸிமா சென்டாரி என்ற நட்சத்திரத்தினைச் சுற்றியுள்ள பகுதியில் 'ப்ராக்ஸிமா டி' என்ற ஒரு புதிய கோளினை ஐரோப்பியத் தெற்கு ஆய்வகம் கண்டறிந்துள்ளது.
- ப்ராக்ஸிமா சென்டாரி நமது சூரியக் குடும்பத்திற்கு மிக நெருக்கமாக நான்கு ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்த ஒரு நட்சத்திரம் ஆகும்.
- இது ஆல்பா சென்டாரி என்ற நட்சத்திர அமைப்பின் ஒரு அங்கமாகும்.

## இன்ஸ்பைர்சாட் – 1

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது இன்ஸ்பைர்சாட் – 1 எனப்படும் ஒரு செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியது.
- இந்தியா, அமெரிக்கா, தாய்வான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் அடங்கிய ஒரு குழுவினால் இன்ஸ்பைர்சாட் – 1 உருவாக்கப்பட்டது.
- இன்ஸ்பைர்சாட் – 1 (INSPIRE Sat – 1) என்பதன் விரிவாக்கம் International Space Program in Research and Education Satellite – 1 (ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான சர்வதேச விண்வெளி செயற்கைக்கோள் திட்டம்) என்பதாகும்.
- இந்தச் செயற்கைக்கோளானது போல்டர் எனுமிடத்திலுள்ள கொலராடோ பல்கலைக் கழகத்திலுள்ள வளிமண்டல மற்றும் விண்வெளி இயற்பியல் ஆய்வகத்துடன் இணைந்து இந்திய விண்வெளி அறிவியல் கல்வி மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.

- இது PSLV-C52 எனும் துருவ செயற்கைக்கோள் ஏவூர்தி மூலம் விண்ணில் ஏவப்பட்டது.




## ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி பதிவு செய்த முதல் புகைப்படங்கள்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி பதிவு செய்த முதல் புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.
- HD84406 எனப்படும் உர்சா மேஜர் விண்மீன் திரளில் உள்ள தனித்த பிரகாசமான நட்சத்திரத்தின் மீது தொலைநோக்கியைக் குவியமையமாக்கல் செய்ததன் மூலம் இந்த புகைப்பட நிலை நிறுத்துதல் என்ற திட்டமானது உருவாக்கப்பட்டது.




## எலக்ட்ராவின் 3வது துணைக்கோள்

- எலக்ட்ரா எனும் முதன்மை குறுங்கோள் பட்டையைச் சுற்றிவரும் 3வது துணைக் கோளினை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது வரை கண்டறிந்த முதலாவது நான்கு மூலக்கூறு குறுங்கோள் இதுவாகும்.
- எலக்ட்ரா முதலில் லிட்ச்ஃபீல்டு ஆய்வகத்தின் வானியலாளர் கிறிஸ்டியன் பீட்டர்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

- எலக்ட்ராவின் முதல் துணைக்கோளானது 2003 ஆம் ஆண்டில் டாக்டர் வில்லியம் மெர்லின் மற்றும் அவரது குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- இரண்டாவது துணைக்கோளானது S/2014(130)1 (அ) S2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- வானியலாளர்கள் தற்போது எலக்ட்ராவைச் சுற்றி வரும் 3வது துணைக் கோளினையும் கண்டறிந்துள்ளனர்.
- அது S/2014(130)2 (அ) S3 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




## ஜேபி மோர்கன் - மெட்டாவேர்ஸ் என்ற டிஜிட்டல் உலகில் விற்பனையகம் அமைத்த முதல் வங்கி




- ஜேபி மோர்கன் மெட்டாவேர்ஸ் என்ற டிஜிட்டல் உலகில் ஒரு விற்பனையகத்தினை அமைத்த உலகின் முதல் வங்கியாக மாறியுள்ளது.
- அமெரிக்காவின் இந்த மிகப்பெரிய வங்கியானது பிளாக்செயின் அடிப்படையிலான டீசென்ட்ராலாந்து உலகில் ஓர் அமைப்பினை திறந்துள்ளது.
- மெட்டாவெர்ஸ் என்பது ஒரு மெய்நிகர் உலகாகும்.

- இதில் பயனர்கள் தங்கள் மாதிரி அவதார உருவங்களின் மூலம் சமூகமயமாக்கல், ஷாப்பிங் (பொருட்கள் வாங்குதல்) அல்லது நிகழ்வுகளில் கலந்து கொள்வது போன்ற பல செயல்பாடுகளைச் செய்யலாம்.

## ஜப்பானிய மூளைக் காய்ச்சல் வைரஸைக் கண்டறியும் முறை




- ஹைதராபாத்தில் உள்ள தேசிய விலங்கு உயிரித் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், ஜப்பானிய மூளையழற்சி வைரஸைக் கண்டறிய "அளவு குறைக்கப்பட்ட கிராபீன் ஆக்சைடால் ஆன புளோரின் ஏற்றம் செய்யப்பட்ட ஒரு டின் ஆக்சைடு மின்முனை" (Fluorine Doped Tin Oxide (FTO) electrode fabricated with reduced Graphene Oxide) என்பதினை உருவாக்கியுள்ளது.
- ஜப்பானிய மூளைக் காய்ச்சல் வைரஸ் ஆனது மேற்கு பசிபிக் மற்றும் தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளில் கொசுக்களால் பரவும் மூளைக் காய்ச்சலுக்கு ஒரு முக்கிய காரணியாகும்.
- இது பெரும்பாலும் டெங்குக் காய்ச்சல் என்று தவறாகக் கண்டறியப்படுகிறது.
- ஜப்பானிய மூளைக் காய்ச்சலுக்கு எந்தச் சிகிச்சையும் இல்லை.
- எனவே, இந்த நோயின் தொற்றினைத் தணிக்க, அதை முன்கூட்டியே கண்டறிவது மிக அவசியமாகும்.

## அந்துப் பூச்சிகளின் மகரந்தச் சேர்க்கை பற்றிய சமீபத்திய ஆய்வு

- வடகிழக்கு இந்தியாவின் இமாலயச் சூழலமைப்பில் திகழும் மகரந்தச் சேர்க்கைக்கு அந்துப்பூச்சிகள் மிக அவசியம் என்று ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது.
- வடகிழக்கு இமாலயத்திலுள்ள அருணாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகிய பகுதிகளிலுள்ள 21 வெவ்வேறு வகையான தாவர இனங்களில் 91 அந்துப்பூச்சி இனங்கள் மகரந்தச் சேர்க்கை செய்வதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- எரேபிடே (டைகர் அந்துப் பூச்சிகள், எரேபிடே அந்துப்பூச்சிகள், லைச்சன் அந்துப் பூச்சிகள்) ஆகியவை இமாலயப் பகுதிகளில் நடைபெறும் மகரந்தப் பரிமாற்றத்திற்கான மிக முக்கியக் குடும்பங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

- ❖ பகல் நேரங்களில் மகரந்த தேனிக்கள் செய்யும் வண்ணத்துப்பூச்சி மற்றும் தேனிக்கள் போன்றவை மீதே பெரும்பாலான மகரந்தச் சேர்க்கை ஆராய்ச்சியானது மேற்கொள்ளப் படுகின்றன என்பதால் இந்த ஆய்வு முடிவுகள் ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.
- ❖ அதே சமயம் இரவு நேர மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சிகளின் பங்கு குறைந்த அளவு அறிவியல் ஈர்ப்பினையேப் பெறுகிறது.



## கடலடி கம்பிவடக் கூட்டமைப்பு

- ❖ தொலைத்தொடர்பு நிறுவனமான பாரதி ஏர்டெல் லிமிடெட் என்ற நிறுவனமானது தென்கிழக்கு ஆசியா-மத்திய ஆசியா-மேற்கு ஐரோப்பா – 6 கடலடி கம்பிவடக் கூட்டமைப்பில் இணைந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ அதனுடைய அதிவேக உலகளாவிய இணையக் கட்டமைப்புத் திறனை மேம்படுத்தச் செய்வது மற்றும் இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் தேவையை நிவர்த்தி செய்வது போன்றவற்றிற்கான முயற்சியில் இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.




- ❖ இது கம்பிவட அமைப்பின் ஒட்டு மொத்த முதலீட்டில் 20% முதலீட்டினை வழங்க உள்ளது.
- ❖ இந்தக் கூட்டமைப்பின் மூலம் ஏர்டெல் நிறுவனம் தனது உலகளாவிய இணையக் கட்டமைப்பில் 100 TBPS இணையத் திறனை இணைக்க இயலும்.
- ❖ அந்தத் தொலைத் தொடர்பு நிறுவனமானது SEA-ME-WE-6 கம்பிவட அமைப்பினை மும்பை மற்றும் சென்னை ஆகிய புதிய நிலையங்களில் நிறுவ உள்ளது.

## அலசியோனஸ் அண்டம்

**Alcyoneus**



Alcyoneus, depicted through LOFAR radio data at 144 MHz (orange) and WISE infrared data at 3.4 micron (blue)

| Observation data (J2000 epoch) | |
|---|---|
| Constellation | Lynx |
| Right ascension | $8^h\ 14^m\ 21.6^s$ |
| Declination | 52° 24′ 10.06″ |
| Redshift | 0.246 74 ± 0.000 06 |
| Distance | 3 billion ly |
| **Characteristics** | |
| Mass | 240 billion ± 40 billion (host) $M_{\odot}$ |
| Size | 4.99 ± 0.04 Mpc |

- இந்த அண்டமானது பரந்த அகச்சிவப்பு ஆய்வு தொலைநோக்கி (Wide-field Infrared Survey Explorer) மற்றும் குறை அதிர்வெண் வரிசை அமைப்பு (Low-Frequency Array network) ஆகியவற்றைப் பயன்படுத்திக் கண்டறியப்பட்டது.
- இது பேரண்டத்தில் கண்டறியப்பட்ட ஒரு மிகப்பெரிய அண்டமாகும்.
- இது லினக்ஸ் விண்மீன் திரளில் சுமார் 3 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.

## முதல் காது அறுவைச் சிகிச்சை நடைபெற்றதற்கான சான்று

- ஸ்பானிய நாட்டில் 5,300 வருடங்கள் பழமையான மண்டை ஓட்டினைத் தொல்லியல் ஆய்வாளர் குழு ஒன்று கண்டறிந்துள்ளது.
- அது முதல் காது அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதற்கான ஒரு சான்றாக கருதப் படுகிறது.
- "அறிவியல் அறிக்கைகள்" என்ற ஒரு இதழில் வெளியான ஒரு கட்டுரையில், இந்தச் சான்றானது மாஸ்டோயிடெக்டோமி (mastoidectomy) என்ற முறையினைக் குறிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

- மாஸ்டோயிடெக்டோமி என்பது இடைச் செவியழற்சி மற்றும் மாஸ்டோய்டிடிஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருந்த முந்தையக் கால மனிதனின் வலியைப் போக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு அறுவைச் சிகிச்சையாகும்.



## சூரிய புரோட்டான் நிகழ்வு கண்டுபிடிப்பு

- சந்திராயன் – 2 உலவு ஊர்தியின் சந்திராயன் – 2 பெரும்பரப்பு மிதரக ஊடுகதிர் கொண்ட நிறமாலைமானி என்ற விண்பொருளானது சூரிய புரோட்டான் நிகழ்வைச் சமீபத்தில் கண்டறிந்தது.
- சூரிய புரோட்டான் நிகழ்வுகளானவை விண்வெளியில் உள்ள மனிதர்கள் கதிர் வீச்சிற்கு உட்படும் அளவில் கணிசமான உயர்வை ஏற்படுத்துகின்றன.
- இந்த CLASS விண்பொருளானது, சமீபத்தில் கரோனா அடுக்கின் சூரிய வெப்ப உமிழ்வு நிகழ்வினையும் பதிவு செய்தது.

## டீரோசர்களின் புதிய இனம்



- பறக்கும் திறன் பெற்ற முதல் முதுகெலும்பிகளான டீரோசர்களின் (Pterosaurs) புதிய இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பூமியின் வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய பறக்கும் விலங்குகள் இந்த இனத்தில் அடங்கும்.
- புதியதாகக் கண்டறியப்பட்ட இந்த இனத்திற்கு “டியர்க் ஸ்கியாதானாச்” (Dearc sgiathanach) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

- இது இதுவரையில் அறியப்பட்ட ஒரு மிகப்பெரிய ஜூராசிக் டீரோசர் ஆகும்.

## வரலாற்றிற்கு முந்தையக் காலத்தில் சேர்ந்த ஒரு பறவை இனங்கள்

- சீனாவில், வரலாற்றிற்கு முந்தையக் காலத்தைச் சேர்ந்த இரு பறவை இனங்களின் மாதிரிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அவை மீமன்னவிஸ் ட்க்டிரிக்ஸ் மற்றும் பிரெவிடென்டாவிஸ் ஷாங்கி (Meemannavis ductrix and Brevidentavis zhangi) ஆகியனவாகும்.
- இந்த மாதிரிகள் வடமேற்கு சீனாவில் உள்ள சங்கமா எனும் ஒரு பகுதியிலிருந்து கண்டறியப் பட்டன.
- பழங்கற்கால ஆராய்ச்சியாளர்கள், ஒரு பறவையின் பரிணாம வளர்ச்சியை ஆய்வு செய்வதற்கு இது ஒரு முக்கியப் பகுதியாகும்.
- இது மீசோசோயிக் காலப் பறவைகளின் படிமங்களை அதிகளவில் கொண்ட உலகின் 2வது இடமாகும்.
- இருப்பினும், இங்குக் கண்டறியப்பட்ட படிமங்களில் பாதிக்கும் மேலானவை கன்சஸ் யூமெனின்சிஸ் (Gansus Yumenensis) என்ற இனத்தைச் சேர்ந்தவையாகும்.
- கன்சஸ் யூமெனின்சிஸ் என்பது ஒரு நீர்வாழ் பறவை இனமாகும்.

## தாவரத்திலிருந்துப் பெறப்பட்ட கோவிட் தடுப்பூசி

- தாவரத்திலிருந்துப் பெறப்பட்ட ஒரு தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதித்த உலகின் முதல் நாடு கனடா ஆகும்.
- இதில் தாவரங்கள் மெடிகாகோ நிறுவனத்தினால் உயிர் வாழும் தொழிற்சாலை என்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன.
- கொரோனா வைரஸின் ஸ்பைக் புரதத்தை ஒத்திருக்கும் வைரஸ் போன்றவற்றை வளர்க்க இந்தத் தாவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- மெடிகாகோ நிறுவனமானது, கியூபெக் நகரில் அமைந்துள்ளது.
- இது பல வகையான நோய்களுக்கு எதிராக தாவர அடிப்படையிலான பல்வேறு வகையான தடுப்பூசிகளை உருவாக்கி வருகிறது.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## பெருந்தடுப்பு பவளத்திட்டினைப் பாதுகாத்தல்

- உலகின் இயற்கை சார்ந்த அதிசயங்களுள் ஒன்றாக பெருந்தடுப்பு பவளத்திட்டினைப் பாதுகாப்பதற்காக பில்லியன் டாலர் மதிப்பிலான திட்டத்தினை ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.
- இது தற்போது பருவநிலை நெருக்கடியின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.
- இது உலகின் 85% பவளப்பாறைகளைக் கொண்டுள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பானது இதனை தனது "ஆபத்தில் உள்ளவை" என்ற பட்டியலில் சேர்த்துள்ளது.




## கிரீன்லாந்தின் உருகும் பெருங்கடல் பற்றிய ஆய்வுப் பணி - நாசா

- பொதுவாக OMG ஆய்வுப்பணி என குறிப்பிடப்படும் கிரீன்லாந்தின் உருகும் பெருங் கடல் பற்றிய ஆய்வுப் பணியானது நாசாவால் தொடங்கப்பட்டதாகும்.
- இது ஐந்தாண்டு அளவிலான ஒரு ஆய்வுப்பணியாகும்.
- இது 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 அன்று முடிவடைந்தது.
- இந்த ஆய்வுப்பணியானது முதன்மையாக கிரீன்லாந்து பகுதியில் ஏற்பட்ட பனி இழப்பை அளவிடுகிறது.
- கிரீன்லாந்தின் அனைத்துப் பனிகளும் உருகினால், உலகக் கடல் மட்டம் 7.4 மீட்டர் என்ற அளவிற்கு உயரும் என்று அந்த ஆய்வு கூறுகிறது.
- கிரீன்லாந்தில் உள்ள பனிக்கட்டிகள் 25 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வேகத்தை விட ஐந்து மடங்கு வேகமாக உருகி வருகின்றன.




### எவரெஸ்ட் சிகரத்தில் பனிப்பாறை உருகல்

- எவரெஸ்ட் சிகரத்தில் உள்ள மிக உயரமான பனிப்பாறை வேகமாக உருகி வருவதை அறிவியலாளர்கள் சமீபத்தில் கண்டறிந்துள்ளனர்.
- இது தென் கோல் பனிப்பாறையாகும்.
- இந்தப் பனிப்பாறையானது, கடந்த 25 ஆண்டுகளில் 54 மீட்டர் தடிமன் அளவு பனிப் பரவலை இழந்துள்ளது.
- தெற்கு கோல் பனிப்பாறை 7,906 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

## மாநிலச் செய்திகள்

### உள்ளூர் மாநில இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புச் சட்டம் – ஹரியானா

- இந்தச் சட்டமானது மாதம் 30,000 ரூபாய்க்கும் குறைவான ஊதியமுள்ள தனியார் துறை வேலைகளில் உள்ளூர் மாநில இளைஞர்களுக்கு 75% இடஒதுக்கீடு வழங்குகிறது.
- இந்தச் சட்டமானது 10 ஆண்டுகள் வரை நடைமுறையில் இருக்கும்.

### சரக்கு ரயில் - மணிப்பூர்

- முதல் சரக்கு இரயிலானது மணிப்பூரின் ராணி கைடின்லியு இரயில் நிலையத்தை அடைந்தது.
- 75 ஆண்டுகளுக்குப் பிறகு மணிப்பூருக்குள் நுழையும் முதல் சரக்கு ரயில் இதுவாகும்.
- மணிப்பூர் மலைகள் நிறைந்த ஒரு மாநிலம் ஆகும்.
- இதனால், இப்பகுதியில் இரயில் பாதை அமைப்பதில் சிரமம் ஏற்பட்டது.
- இந்த மாநிலத்தில் கட்டமைக்கப்பட்ட புதிய இரயில் பாதையின் நீளம் 111 கி.மீ. ஆகும்.
- இது ஜிரிபாம் நகர் முதல் இம்பால் வரை நீள்கிறது.

- ஜிரிபாம் இரயில் நிலையம் ஆனது, அசாம் - மணிப்பூர் எல்லையில் இருந்து 17 கிமீ தொலைவில் உள்ளது.
- இந்தப் புதிய இரயில் பாதையில் 46 சுரங்கப் பாதைகளை இரயில்வே துறை அமைக்க உள்ளது.
- மேலும், இதில் 153 பாலங்கள் அமைக்கப்பட உள்ளன.
- உலகின் மிக உயரமான பாலம் இந்த வழித் தடத்திலேயே அமைந்துள்ளது.
- இது நோனி மாவட்டத்தில் உள்ளது.
- இந்தப் பாலமானது 141 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.




## ஸ்பிடக் கஸ்டர் திருவிழா



- ஸ்பிடக் கஸ்டர் திருவிழா என்பது லே மற்றும் லடாக் போன்ற பிரதேசங்களில் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 30 மற்றும் 31 ஆகிய நாட்களில் லடாக் பகுதியின் கலாச்சாரம் மற்றும் மரபுப் பாரம்பரியத்தைக் கொண்டாடும் 2 நாட்கள் அளவிலான ஒரு வருடாந்திரக் கொண்டாட்டமாகும்.
- பக்தர்கள் ஒவ்வோர் ஆண்டும் ஸ்பிடக் மடாலயத்திற்கு வந்து "சாம்ஸ்" என்று அழைக்கப்படும் ஒரு வண்ணமயமான முகமூடிகள் அணிந்து நிகழ்த்தும் நடன நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.

## டோர்கியா திருவிழா




- அருணாச்சலப் பிரதேசத்தின் மோன்பா பழங்குடியினச் சமூகத்தினரின் 3 நாட்கள் அளவிலான டோர்கியா என்ற திருவிழாவானது அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மடத்தில் கொண்டாடப்படுகிறது.
- இத்திருவிழாவின் முக்கிய அம்சம் "ஷா-நா-சாம்" ஆகும்.
- இது சோ-கியால் யாப் மற்றும் யம் சா-முன்டே போன்ற தெய்வங்களைக் காட்சிப் படுத்துவதற்காக துறவிகள் மேற்கொள்ளும் சடங்கு முறையிலான ஒரு நடனமாகும்.

## ஒரு நாடு ஒரு குடும்ப அட்டை

- ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டமானது சமீபத்தில் சத்தீஸ்கர் மாநிலத்தில் செயல் படுத்தப் பட்டது.
- இத்துடன், இத்திட்டமானது 35 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் அமலில் கொண்டு வரப்பட்டுள்ளது.
- இது தற்போது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 96.8% மக்களையும் உள்ளடக்கியுள்ளது.

## 104 அடி உயர தேசியக் கொடி

- அருணாச்சலப் பிரதேச முதல்வர் பேமா காண்டு, தவாங்கிலுள்ள நகன்பா நத்மே (புத்தப் பூங்கா) எனுமிடத்தில் 104 அடி உயர தேசியக் கொடியை ஏற்றினார்.
- அருணாச்சலப் பிரதேச மாநிலமானது தற்போது இந்தியாவிலேயே இரண்டாவது உயரிய தேசியக் கொடியைக் கொண்டுள்ளது.
- கர்நாடகாவின் கோடே கேரி என்னுமிடத்திலுள்ள பெலகாவி அல்லது பெல்காம் கோட்டையானது 361 அடி உயரம் கொண்ட இந்தியாவின் மிக உயரிய கொடிக் கம்பத்தினைக் கொண்டுள்ளது.



## மணிப்பூரின் கைவினை வரைபடம்




- 2018-19 ஆம் ஆண்டில் ஒரு நிபுணர் குழு மேற்கொண்ட கள ஆய்வின் அடிப்படையில் மணிப்பூரின் கைவினை வரைபடமானது தயாரிக்கப்பட்டது.

- அனைத்துக் கலை வடிவங்களுக்கும் சமமான, செறிவு மிக்க ஈடுபாட்டினை வழங்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட முதல் வகை வரைபடம் இதுவாகும்.
- இது மணிப்பூரின் கைத்தறி மற்றும் கைவினை மரபுகள் பற்றிய சில விவரங்களை வழங்குகிறது.
- கொன்சம் இபோம்சா சிங் என்பவர் பொம்மைகள் செய்யும் கைவினைக்காக 2022 ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருதைப் பெற்ற போது இந்த வரைபடமானது மிகவும் பிரபலம் அடைந்தது.

## மூன்றாவது எல்லைச் சந்தை - திரிபுரா

- திரிபுரா முதல்வர் பிப்லப் குமார் தேப் இந்தியா மற்றும் வங்கதேசம் இடையிலான கமால்பூர்-குர்மகாட் எல்லைச் சந்தைக்கு அடிக்கல் நாட்டினார்.
- இந்த எல்லைச் சந்தையானது தலாய் மாவட்டத்தில் நிறுவப்பட உள்ளது.
- இந்தத் திட்டமானது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேலும் மேம்படுத்தும்.
- இது இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சார மற்றும் உணர்ச்சி உறவுகளை வலுப்படுத்தும்.

## புதிய சிலந்தி மற்றும் மரவட்டை இனங்கள் – கேரளா

- இரிஞ்சலகுடம் என்னுமிடத்திலுள்ள கிறித்துவர் கல்லூரியின் விலங்கியல் துறையின் ஆராய்ச்சியாளர்கள், தெஹ்னிப்பாலத்திலுள்ள கோழிக்கோடு பல்கலைக்கழக வளாகத்திலிருந்து ஒரு புதிய மரவட்டை இனத்தினையும் வயநாடு வனவிலங்குச் சரணாலயத்தில் ஒரு புதிய சிலந்தி இனத்தினையும் கண்டறிந்துள்ளனர்.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளிலுள்ள வனவிலங்குச் சரணாலயத்தின் தோல்பெட்டி வனப் பிரிவின் ஈர இலையுதிர் காடுகளில் இருந்து கண்டறியப்பட்ட புதிய சிலந்தி இனத்தின் பெயர் கார்ஹோட்டஸ் தோல்பெட்டியென்சிஸ் (Carrhotus tholpettyensis) என்பதாகும்.
- ஆராய்ச்சியாளர்கள் கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் ஒரு புதிய மர வட்டை இனத்தினையும் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய இனத்திற்கு டெலார்த்ரம் அனோமலான்ஸ் (Delarthrum anomalans) எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இது பாராடோக்சோமட்டிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்தது.

## கஞ்சோத் திருவிழா – ஜம்மு காஷ்மீர்

- சமீபத்தில், பதேர்வா மக்கள் பண்டைய காலத் திருவிழாவான கஞ்சோத் என்ற ஒரு திருவிழாவைக் கொண்டாடினர்.
- இது பண்டைய நாக் கலாச்சாரத்தின் ஒரு சின்னமாகும்.
- இந்த கௌரி திருதியை நாளில், சிவபெருமானும் பார்வதி தேவியும் திருமணம் செய்து கொண்டதாக நாக் கலாச்சாரத்தைப் பின்பற்றுபவர்கள் நம்புகிறார்கள்.



## தேசிய ஒற்றைச் சாளர அமைப்பில் ஜம்மு & காஷ்மீர்




- ஜம்மு மற்றும் காஷ்மீர் ஆனது, தேசிய ஒற்றைச் சாளர அமைப்புடன் ஒருங்கிணைக்கப் பட்ட முதல் ஒன்றியப் பிரதேசமாக மாறியுள்ளது.
- இந்த அமைப்பில் 130க்கும் மேற்பட்ட தொழில்துறை சேவைகள் இணைய மயமாக்கப் பட்டுள்ளன.
- மேலும் 160 சேவைகள் சேர்க்கப்பட உள்ளன.
- இதன் மூலம், உலகளாவிய முதலீட்டாளர்கள் தங்கள் வணிக ஒப்புதலைப் பெறுவதற்கு இணைய முறையில் விண்ணப்பிக்கலாம்.

## ஹரியானா மதமாற்ற எதிர்ப்பு மசோதா

- ஹரியானா மாநிலத்தில் சட்டவிரோத மத மாற்றங்களைத் தடுக்கும் வகையிலான ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- ஹரியானா பாஜக ஆளும் மாநிலம் ஆகும்.
- உத்தரப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இந்த மசோதாவை அறிமுகம் செய்துள்ள மற்ற பாஜக ஆளும் மாநிலங்கள் ஆகும்.

## மஜி வசுந்தரா பிரச்சாரம்

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பானது, மகாராஷ்டிர அரசின் 'மஜி வசுந்தரா' என்ற பிரச்சாரத்தை ஆதரிப்பதற்காக அம்மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இது சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் ஆற்றலின் நிலையான பயன்பாட்டை நோக்கிய ஒரு முன்முயற்சியாகும்.
- 'மஜி வசுந்தரா' என்பதன் பொருள் 'எனது பூமி' என்பதாகும்.
- இது மகாராஷ்டிரா அரசின் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறையின் முயற்சியாகும்.




## கங்கை ஆற்றின் மீது இரட்டை அடுக்குப் பாலம்



- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி மற்றும் பீகார் முதல்வர் நிதிஷ் குமார் ஆகியோர் இணைந்து பீகாரில் 14.5 கிலோமீட்டர் நீளமான ரயில் மற்றும் சாலைப் பாலத்தை (இரட்டை அடுக்குப் பாலம்) திறந்து வைத்தனர்.
- பீகாரின் முங்கர் பகுதியில் NH 333B என்ற தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே பாயும் கங்கை ஆற்றின் மீது இந்தப் பாலமானது கட்டப்பட்டுள்ளது.

## ஹோப் எக்ஸ்பிரஸ் - மகாராஷ்டிரா

- மகாராஷ்டிரா மாநிலத்தில் புற்றுநோயைத் தடுக்கும் வகையில் "ஹோப் எக்ஸ்பிரஸ்" தொடங்கப்படும் என்று அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் ராஜேஷ் தோபே அறிவித்துள்ளார்.
- இந்தியாவில் இது போன்ற முதல் இயந்திரம் இதுவேயாகும்.
- கோலாப்பூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் நவீன மொசைக்-3டி (மூன்று பரிமாண) கதிர்வீச்சு இயந்திரத்தைத் தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார்.

## மத்தியச் சிறைச்சாலையில் FM வானொலி ஒலிபரப்பு

- மத்தியப் பிரதேசத்திலுள்ள இந்தூர் மத்தியச் சிறையானது 'ஜெயில் வாணி-எஃப்எம் 18.77' தனது சொந்த வானொலி ஒலிபரப்பு அலைவரிசையினைத் தொடங்கியுள்ளது.
- இந்த வானொலி அலைவரிசை மூலம் சிறையில் உள்ள கைதிகள் உலகில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்ள இயலும்.
- இந்த வானொலி அலைவரிசையானது சிறைக் கைதிகளுக்கு உடல்நலம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் பற்றிய தகவல்களையும் வழங்கும்.

## சிந்தாமணி பதய நாடகம்



- 100 ஆண்டுகள் பழமையான "சிந்தாமணி பதய நாடகத்தினை" நடத்துவதற்கு ஆந்திர அரசு தடை விதித்துள்ளது.
- இந்த நாடகமானது சமூகச் சீர்திருத்தவாதியான கள்ளக்குறி நாராயண ராவ் என்ற நாடக ஆசிரியரால் 1920 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது.
- இந்த நாடகமானது பஜனைகளைப் பாடி மோட்சத்தைக் கண்டறியும் தேவதாசியும் கிருஷ்ணனின் பக்தையுமான சிந்தாமணியைப் பற்றியதாகும்.
- இதன் அசலான நாடகமானது சில சமூக கருத்துகளைக் கொண்டிருந்தாலும் பல ஆண்டுகளாக இது பொழுதுப் போக்குக்கான ஒன்றாக மாற்றப்பட்டது.
- ஆரிய வைசியச் சமூகத்தினர் இந்த நாடகங்கள் தங்களை எதிர்மறையாக சித்தரிப்பதாக கூறி, அவற்றைத் தடை செய்யுமாறு பல ஆண்டுகளாக அரசுகளிடம் மனு அளித்து வந்துள்ளனர்.

## மாரு மகோத்சவ்



- தங்க நகரத்தின் மாரு மகோத்சவ் எனவும் அழைக்கப்படும் புகழ்பெற்ற ஜெய்சால்மர் பாலைவனத் திருவிழாவானது இராஜஸ்தானின் ஜெய்சால்மரிலுள்ள பொக்ரான் கிராமத்தில் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 முதல் 16 வரை கொண்டாடப்பட்டது.
- வண்ணமயமான பிரம்மாண்ட அணிவகுப்புடன் தொடங்கப்பட்ட இந்த விழாவில் பொக்ரான் அழகி மற்றும் பொக்ரான் ஆணழகன் போட்டிகள் நடத்தப்பட்டன.
- இது 4 நாள்கள் நடைபெறும் ஒரு வருடாந்திரத் திருவிழாவாகும்.
- வட்டார நாட்டுப்புற நடனங்களான கல்பேலியா, கச்சி கோடி, கைர் (Kalbelia, Kachhi Ghodi, Gair) போன்றவையும் இதில் நிகழ்த்தப்பட்டன.

## மேதாரம் ஜத்தாரா 2022

- மேதாரம் ஜத்தாரா என்பது தெலுங்கானாவின் 2வது மிகப்பெரியப் பழங்குடியினச் சமூகமான கோயா பழங்குடியினரால் கொண்டாடப்படும், இந்தியாவின் 2வது மிகப் பெரிய திருவிழா (கும்ப மேளாவிற்கு அடுத்தப்படியாக) ஆகும்.



- 1996 ஆம் ஆண்டில் ஜத்தாரா மாநிலத் திருவிழாவாக அறிவிக்கப்பட்டது.

- இது சம்மக்கா சரளம்மா ஜத்தாரா எனவும் அழைக்கப்படுகிறது.
- ஒரு அநியாயச் சட்டத்தை எதிர்த்து அரசர்களுக்கு எதிராக சண்டையிட்ட சம்மக்கா மற்றும் சரளம்மா ஆகிய தாய் மற்றும் மகள் ஆகியோரைக் கௌரவிக்கும் ஒரு பழங்குடியினப் பண்டிகை ஆகும்.
- மேதாரம் என்பது எட்டூர்நகரம் (Eturnagaram) என்ற வனவிலங்குச் சரணாலயத்தில் அமைந்த ஒரு தொலைதூரப் பகுதியாகும்.

## ஆட்டுக்கல் பொங்கலா



- ஆட்டுக்கல் பொங்கலா என்பது கேரளாவின் திருவனந்தபுரத்தில் ஆட்டுக்கல் பகவதி ஆலயத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பிரபலமான மலையாளத் திருவிழாக்களுள் ஒன்றாகும்.
- இந்த விழாவானது மலையாள மாதமான மகரம் அல்லது கும்பத்தின் கார்த்திகை நட்சத்திரத்தில் தொடங்கி, இரவில் ஒரு புனிதப் பலியாகக் கருதப்படும் குருதித் தர்ப்பணம் என்ற நிகழ்வுடன் நிறைவடைகிறது.
- இது 10 நாட்கள் அளவிலான ஒரு திருவிழாவாகும்.
- சிலரின் நம்பிக்கைகளின் படி, இந்த ஆலையமானது, 'சிலப்பதிகாரம்' என்ற தமிழ்க் காப்பியத்தின் ஒரு மையக் கதாபாத்திரமான கண்ணகியின் மறு அவதாரமாகும்.

## குன்ஸ்னியோம் திட்டம்

- லேயிலுள்ள லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டுச் சபையானது மாற்றுத் திறனாளிகளுக்காக குன்ஸ்னியோம் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- அனைவரும் சமம், அனைவருக்கும் நியாயம் எனப் பொருள்படும் குன்ஸ்னியோம் திட்டமானது உள்ளார்ந்த மற்றும் அணுகக் கூடிய ஒரு லடாக்கினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய திட்டத்தின் கீழ், லே மலை மேம்பாட்டுச் சபையானது, தேவையுள்ள மக்களுக்கு 90% மானியத்தில் உதவிக் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை வழங்கி வருகிறது.

## பீகார் ஷாஹித் திவாஸ்

- பிப்ரவரி 15 ஆம் தேதியானது "ஷாஹித் திவாஸ்" தினமாகக் கொண்டாடப்படும் என்று பீகார் முதல்வர் நிதிஷ் குமார் சமீபத்தில் அறிவித்தார்.
- பீகார் மாநிலத்தின் முங்கர் மாவட்டத்தில் உள்ள தாராப்பூர் நகரில் 90 ஆண்டுகளுக்கு முன்பு காவல்துறையினரால் கொல்லப்பட்ட 34 சுதந்திரப் போராட்ட வீரர்களின் ஒரு நினைவாக பிப்ரவரி 15 ஆம் தேதியன்று ஷாஹித் திவாஸ் என நினைவு கூரப்படும்.
- 1932 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 அன்று தாராப்பூரில் உள்ள தானா பவனில் "இந்தியத் தேசியக் கொடியை" ஏற்ற ஒரு இளம் சுதந்திரப் போராட்ட வீரர்கள் குழு ஒரு திட்டம் போட்டிருந்த போது இந்த சம்பவம் நடந்தது.

## கேரளாவின் முதல் கேரவன் (கவிகை வாகனம்) பூங்கா



- கேரளாவின் முதல் கேரவன் பூங்காவானது இடுக்கி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு இயற்கை எழில் கொஞ்சும் மலை வாசஸ்தலமான வாகமனில் (Vagamon) அமைக்கப்பட உள்ளது.
- இந்த மாநில அரசின் புதிய கேரவன் சுற்றுலாக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்தப் பூங்கா பயணிகளுக்காக திறக்கப்பட உள்ளது.
- கோவிட்-19 பரவல் காரணமாக மக்கள் வெளியே செல்லவோ அல்லது பயணிக்கவோ முடியாத நேரத்தில் விடுமுறையைக் கொண்டாடுவதற்குப் பாதுகாப்பான ஒரு வழி முறையாக அம்மாநில சுற்றுலாத் துறையினால் கேரவன் சுற்றுலா அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

## ஹரியானா தனியார் துறை இடஒதுக்கீட்டுச் சட்டம்

- உள்மாநிலத்தவர்க்குத் தனியார் துறை வேலைவாய்ப்பில் 75% இடஒதுக்கீட்டினை வழங்கும் ஹரியானா அரசின் சட்டத்திற்குத் தடை விதித்து பஞ்சாப் & ஹரியானா உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவினை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டு ஹரியானா உள்மாநிலத்தவர் வேலைவாய்ப்புச் சட்டமானது கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.
- இந்தச் சட்டமானது அதிகபட்சம் மொத்த மாத சம்பளம் அல்லது 30000 ரூபாய் ஊதியம் வழங்கப் படும் வேலைகளுக்குப் பொருந்தும்.

## கஜுராஹோ நடனத் திருவிழா

- மத்தியப் பிரதேச கலா பரிசத் அமைப்பானது கஜுராஹோ நடனத் திருவிழாவினை ஏற்பாடு செய்கிறது.
- இது மத்தியப் பிரதேசத்தின் சதார்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கஜுராஹோ ஆலயங்களின் அருகில் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு வார கால அளவிலான பாரம்பரிய நடனத் திருவிழா வாகும்.
- இந்த ஆண்டு 48வது கஜுராஹோ நடனத் திருவிழாவாகும்.
- இந்தத் திருவிழாவில், பல்வேறு நடனக் கலைஞர்களுக்கு மத்தியப் பிரதேச மாநில ரூபன்கர் கலா விருதும் தேசிய காளிதாஸ் விருதும் வழங்கப்படும்.




## மணிப்பூர் கொடியேற்ற மரபு

- மணிப்பூரில் பிப்ரவரி 27 முதல் மார்ச் 03 வரையில் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், வேட்பாளர்கள் ஒரு தனித்துவமிக்கக் கொடியேற்ற விழாவினை நடத்தி வருகின்றனர்.
- மக்களிடம் பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்கு முன்பாக அவர்கள் தங்களது தொகுதிகளில் கொடியை ஏற்றுவர்.
- இது மணிப்பூரின் ஒரு தனித்துவமிக்க மரபாகும்.
- இந்த நடைமுறையானது அனைத்து இனங்கள் அரசியல் கட்சிகள், சமயங்கள் மற்றும் சமூகத்தினராலும் கடைபிடிக்கப் படுகின்றது.

## லாவெண்டர் சாகுபடி – ரம்பன்



- ஜம்மு & காஷ்மீரின் ரம்பன் மாவட்டத்தில் "ஊதாப் புரட்சியை" தொடங்குவதற்கு மத்திய அரசு திட்டமிட்டது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் மூலம் CSIR-IIIM நிறுவனம் மேற்கொள்ளும் அரோமா திட்டத்தின் கீழ் லாவெண்டர் சாகுபடியை ஊக்குவிப்பதன் மூலம் ஊதாப் புரட்சியானது திட்டமிடப்படும்.

## இமாச்சலப் பிரதேசம் – முதல் உயிரிப் பல்லுயிர்ப்பெருக்க பூங்கா

- அழிந்து வரும் இமாலய மூலிகைகளைப் பாதுகாப்பதன் நோக்கில் இந்த மாநிலம் பங்களிப்பினை வழங்குவதற்காக தொடங்கப் படுகிறது.
- இந்தப் பூங்காவானது மண்டி எனுமிடத்திலுள்ள புலாஹ் பள்ளத் தாக்குப் பகுதியில் அமைக்கப்பட உள்ளது.
- இந்தப் பூங்காவானது இமாலய ஆய்வுகளுக்கான தேசிய ஆணையத்தின் கீழ் இமாச்சலப் பிரதேச மாநிலத்தின் வனத்துறையினால் நிறுவப்படும்.

## இந்தியாவின் முதலாவது இரவுநேரப் போக்குவரத்து கைபேசி செயலி

- அசாம் முதல்வர் ஹிமாந்தா பிஸ்வாஸ் சர்மா, அசாமின் கௌகாத்தி நகரில் பாயும் பிரம்மபுத்ரா நதி மீதான சரக்குப் போக்குவரத்துச் சேவைகளுக்காக இந்தியாவின் முதலாவது இரவு நேரப் போக்குவரத்து கைபேசி செயலியை வெளியிட்டுள்ளார்.
- இது சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஒரு முதன்மை அறிவியலாளர் K. ராஜுவுடன் இணைந்து அம்மாநிலப் போக்குவரத்துத் துறையினால் உருவாக்கப் பட்டது.
- கௌகாத்தி மற்றும் வடக்கு கௌகாத்தி இடையிலான முதல் இரவுநேர உள்நாட்டு நீர் வழி சரக்குப் போக்குவரத்தானது 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று தொடங்கப் பட்டது.

## லாவெண்டர் மற்றும் டோடா மாவட்டம்




- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர், டாக்டர். ஜிதேந்திரா சிங், ஜம்மு & காஷ்மீரின் பல்வேறு மாவட்டங்களின் மாவட்ட மேம்பாட்டு ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் அமர்விற்குத் தலைமை தாங்கினார்.

- ❖ லாவென்டரை ஒரு டோடா தயாரிப்புப் பொருளாக அறிவிப்பதற்கான முடிவானது இந்தச் சந்திப்பில் எடுக்கப்பட்டது.
- ❖ 'ஒரே மாவட்டம், ஒரே தயாரிப்புப் பொருள்' என்ற முன்னெடுப்பின் கீழ், லாவென்டர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.
- ❖ ஜம்மு & காஷ்மீரிலுள்ள டோடா மாவட்டமானது இந்தியாவின் ஊதாப் புரட்சி அல்லது லாவென்டர் சாகுபடியின் பிறப்பிடமாகும்.
- ❖ ஊதாப் புரட்சியானது (லாவென்டர் சாகுபடி) மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் நறுமணத் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- ❖ நறுமணத் திட்டமானது, அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையினால், ஜம்முவிலுள்ள தனது ஆய்வகமான இந்திய ஒருங்கிணைந்த மருத்துவக் கல்வி நிறுவனத்தின் மூலம் அமல்படுத்தப்படுகிறது.

## ராஜஸ்தானில் எண்ணெய் கண்டுபிடிப்பு

- ❖ வேதாந்தா லிமிடெட் கைர்ன் எண்ணெய் மற்றும் வாயு நிறுவனமானது ராஜஸ்தானின் பார்மர் மாவட்டத்தில் எண்ணெய் இருப்பதைக் கண்டறிந்தது.
- ❖ இது பற்றிய ஒரு தகவலை இந்நிறுவனம் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்திடமும் தலைமை ஹைட்ரோ கார்பன் இயக்குநரகத்திடமும் தெரிவித்து உள்ளது.
- ❖ RJ – ONHP – 2017/1 என்ற இந்த இடமானது பார்மர் மாவட்டத்தின் சோட்டான் மற்றும் குடமலனி போன்ற தாலுக்கா பகுதிகளில் அமைந்துள்ளது.
- ❖ கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பகுதிக்கு 'துர்கா' எனப் பெயரிடப்பட்டது.




## மணிப்பூர் மெய்தி சமூகம்

- ❖ பெரும்பான்மையான மெய்தி சமூகத்தினருக்குப் பட்டியலினப் பழங்குடியினர் (ST) அந்தஸ்து கோரிய விவகாரமானது மணிப்பூரில் மிகப்பெரிய தேர்தல் பிரச்சினையாக மாறியுள்ளது.

- மெய்தி சமூகம், பட்டியலினப் பழங்குடியினர் அந்தஸ்தினைக் கோருவது மத்தியத் துறைகளின் பணிக்காக அல்ல.
- அவர்களால் மலைப் பகுதிகளில் நிலம் வாங்க இயலவில்லை என்பதற்காக வேண்டி இது கோரப் பட்டது.



# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தெலுங்கு குறும்படம்

- இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணையமானது தனது மதிப்புமிக்க 7வது குறும்பட விருதுப் போட்டியில் திரு. அகுலா சந்தீப் இயக்கிய "Street Student" என்ற ஒரு குறும்படத்தினைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- கல்வி உரிமை மற்றும் சமூகம் அதை எவ்வாறு அதை ஆதரிக்க வேண்டும் என்ற ஒரு வலுவான செய்தியை ஒரு தெருப் பகுதியில் வாழும் சிறுவனின் கதை மூலமாக இப்படம் தெரிவிக்கிறது.

## காத்மா நடவடிக்கை

- பத்திரிகையாளர்கள் R.C.கஞ்சு மற்றும் அஷ்வினி பட்நாகர் ஆகியோர் எழுதிய 'காத்மா நடவடிக்கை' என்ற புத்தகமானது வெளியிடப்பட்டுள்ளது.
- ஜம்மு & காஷ்மீர் விடுதலைப் படையைச் சேர்ந்த 22 பயங்கரவாதிகளைக் கொன்று வீழ்த்திய ஜம்மு & காஷ்மீர் மாநிலக் காவல்துறையின் சிறப்பு நடவடிக்கைக் குழுவின் பணிகளை இப்புத்தகம் அடிப்படையாகக் கொண்டுள்ளது.




## ஆகாஷ் கன்சாலின் புத்தகம்

- இந்தியாவின் முதலாவது பருவ பாணியிலான புத்தகமானது "The Class of 2006 : Sneak Peek into the Misadventures of the Great Indian Engineering Life" என்ற தலைப்பில் ஆகாஷ் கன்சால் என்பவரால் எழுதப்பட்டதாகும்.
- இப்புத்தகமானது, கல்லூரி கால நிகழ்வுகளை நினைவுப்படுத்துகின்ற 18 வெவ்வேறு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.




## லதா மங்கேஷ்கர்

- பழம்பெரும் பாடகி லதா மங்கேஷ்கர் தனது 92வது வயதில் மும்பையில் காலமானார்.
- இவர் இந்தூரில் பிறந்தவர் ஆவார்.
- இவருக்கு 1990 ஆம் ஆண்டில் தாதா சாகேப் பால்கே விருதானது வழங்கப்பட்டது.
- இந்திய இசைத்துறைக்கு இவர் ஆற்றியப் பங்கிற்காக 1969 ஆம் ஆண்டில் பத்மபூஷன் விருதும் 2001 ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருதும் வழங்கப்பட்டது.



## சுபாஷ் கார்க்கின் புத்தகம்

- இந்தியாவின் முன்னாள் நிதிச் செயலாளர் சுபாஷ் சந்திர கார்க் "THE $10 Trillion Dream" எனப்படும் அவரது முதல் புத்தகம் பற்றி அறிவித்துள்ளார்.
- இந்தப் புதியப் புத்தகமானது, இந்தியா இன்று எதிர்கொள்ளும் ஒரு கொள்கை சார்ந்த சிக்கல்களை ஆராய்ந்து, 2030 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தியாவினை 10 டிரில்லியன் டாலர் கொண்ட பொருளாதாரமாக மாற்றுவதற்கான சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்கிறது.
- இப்புத்தகமானது பெங்குயின் ராண்டம் ஹவுஸ் இந்தியா என்ற பதிப்பகத்தினால் வெளியிடப் படுகிறது.



## சந்து பட்லா ஜங்கா ரெட்டி

- பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் சந்துபட்லா ஜங்கா ரெட்டி, சமீபத்தில் ஹைதராபாத்தில் காலமானார்.
- ஆந்திரப் பிரதேசத்தின் ஒரு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான இவர் வாரங்கல்லை சேர்ந்தவர் ஆவார்.
- 1984 ஆம் ஆண்டில் 8வது மக்களவையின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலக் கட்டத்தில் இவர் பிரபலமாக அறியப்படுகிறார்.
- மேலும் இந்தக் காலகட்டமானது, இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மக்களவையில் பா.ஜ.க வின் உள்நுழைவிற்கும் வழி வகுத்தது.

- 1984 ஆம் ஆண்டில் மக்களவையின் தேர்தலில் 543 இடங்களில் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட இரண்டு பா.ஜ.க உறுப்பினர்களுள் ரெட்டியும் ஒருவர் ஆவார்.
- மற்றொருவர் A.K. படேல் ஆவார்.



## R. ராஜமோகன்

- பெங்களூருவில் உள்ள இந்திய வானியற்பியல் கல்வி கழகத்தில் பல தசாப்தங்களாக வானியலாளராக பணியாற்றிய பேராசிரியர் R. ராஜமோகன் காலமானார்.
- இவர் சுதந்திர இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது குறுங்கோள் கண்டுபிடிப்பினை மேற்கொண்டவர் ஆவார்.
- இவர் தனது கல்கி திட்டத்திற்காக பிரபலமாக அறியப்படுகிறார்.
- காவலூர் வைனு பப்பு ஆய்வகத்தில் உள்ள 48 செமீ ஷ்மிட் தொலைநோக்கியைப் பயன்படுத்தி குறுங்கோள்களைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்தத் திட்டமானது இந்தியா சார்பில் 4130 என்ற புதிய குறுங்கோளைக் கண்டுபிடித்தது.
- 104 ஆண்டுகளில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் குறுங்கோள் இதுவாகும்.

## இப்ராஹிம் சுதார்



- பத்மஸ்ரீ விருது பெற்றவரும் சமூக சேவையாளருமான இப்ராஹிம் சுதார் காலமானார்.

- இவர் "கன்னட கபீர்" என்று அன்புடன் அழைக்கப்படுகிறார்.
- சமூகம் மற்றும் மத நல்லிணக்கத்தைப் பரப்புவதற்கான அவரது பணிக்காக சுதர் பிரபலமாக அறியப்பட்டார்.
- இவருக்கு 2018 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

## பிரவீன் குமார் சோப்தி

- நடிகரும் தடகள வீரருமான பிரவீன் குமார் சோப்தி காலமானார்.
- "மகாபாரத்" என்ற தொலைக்காட்சி தொடரில் பீமன் கதாபாத்திரத்தில் நடித்தற்காகவும், ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதற்காகவும் அவர் மிகப் பிரபலமாக அறியப்பட்டார்.
- அவர் சம்மட்டி மற்றும் வட்டு எறிதல் போன்ற பல்வேறு தடகளப் போட்டிகளில் இந்தியா சார்பாக பங்கேற்றுள்ளார்.
- 1966 மற்றும் 1970 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்கள் உட்பட நான்கு பதக்கங்களை அவர் வென்றார்.
- பிரவீன் குமார் சோப்தி 1966 ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டியில், சம்மட்டி எறிதலில் (Hammer Throw) வெள்ளிப் பதக்கம் வென்றார்.



## இந்திய ஆவணப்படம் - ஆஸ்கார் விருதுகள் 2022

- இந்திய ஆவணப்படமான 'Writing with Fire' சிறந்த ஆவணப்படம் பிரிவில் ஆஸ்கார் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டது.
- இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களான ரிந்து தாமஸ் மற்றும் சுஷ்மித் கோஷ் ஆகியோரால் இயக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட இந்தத் திரைப்படம் ஆனது 94வது அகாடமி விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

- இந்தப் பிரிவில் பரிந்துரைக்கப்பட்ட முதல் இந்தியத் திரைப்படம் இதுவாகும்.
- இந்தப் படம் பெண் பத்திரிகையாளர்களின் வாழ்க்கைப் பயணத்தை ஆவணப் படுத்துகிறது.
- இதற்கு முன், இந்தியாவில் எடுக்கப்பட்ட 'Smile Pinki' மற்றும் 'Period. End Of Sentence' ஆகிய இரண்டு ஆவணப்படங்கள் சிறந்த ஆவணப்படத்திற்கான (குறும்படம்) ஆஸ்கார் விருதை வென்றுள்ளன.




### 18வது மறைந்த மாதவராவ் லிமாயே விருது



- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, 2020-21 ஆம் ஆண்டிற்கான காரியகிரம் காஸ்தர் (திறமையான நாடாளுமன்ற உறுப்பினர்) பிரிவில் 18வது மறைந்த மாதவ்ராவ் லிமாயே விருதிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இந்த விருது நாசிக் பொது நூலகமான சர்வஜனிக் வசனாலாய் அலுவலகத்தினால் வழங்கப் படுகிறது.
- முன்னதாக, மகாராஷ்டிராவின் திறமையான சட்டமன்ற உறுப்பினரான காா்யக்சம் ஆம்தார் என்பவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

## சாகரிகா கோஸ் எழுதிய புத்தகம்

- ❖ சாகரிகா கோஸ் எழுதிய “அடல் பிஹாரி வாஜ்பாய்” என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.
- ❖ இது இந்தியாவின் முன்னாள் பிரதமரின் வாழ்க்கை வரலாறு பற்றிய புத்தகம் ஆகும்.
- ❖ சாகரிகா கோஸ் ஒரு பத்திரிகையாளர் ஆவார்.
- ❖ இவர் "இந்திரா: இந்தியாவின் மிக சக்திவாய்ந்த பிரதமர்" என்ற புத்தகத்தையும் எழுதி உள்ளார்.




## ரெயில்டெல்




- ❖ ரெயில்டெல் நிறுவனமானது, பொதுத்துறை நிறுவனங்களின் பிரிவில், 2020-21 ஆம் ஆண்டிற்கான சிறப்பான நிதி அறிக்கையிடலுக்காக ICAI என்ற விருதை வென்றுள்ளது.

- ரெயில்டெல் என்பது ரயில்வே அமைச்சகத்தின் கீழ் உள்ள, மத்திய அரசின் கீழ் மினி ரத்னா வகையிலான ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.
- இந்த நிறுவனமானது, "பிளேக்" பிரிவில் இந்த விருதின் வெற்றியாளராக அறிவிக்கப் பட்டது.
- இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமானது (ICAI - Institute of Chartered Accountants of India) இந்தியாவின் முதன்மையான கணக்கியல் அமைப்பாகும்.
- இந்த நிறுவனமானது 1958 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இந்த விருதுகளுக்கான போட்டியை நடத்தி வருகிறது.

## லூக் மோன்டெக்னியர்

- சமீபத்தில் காலமான இவருக்கு வயது 89 ஆகும்.
- எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் ஒரு வைரஸைக் கண்டுபிடித்ததற்காக வேண்டி 2008 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசைப் பகிர்ந்து கொண்ட பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த நச்சுயிரியல் வல்லுநர் ஆவார்.
- H.I.V பற்றிய கண்டுபிடிப்பு 1983 ஆம் ஆண்டு ஜனவரி 03 அன்று பாரீஸ் நகரில் தொடங்கியது.



## டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவர்

- டாடா சன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாகத் தலைவராக N. சந்திர சேகரனை இரண்டாவது ஐந்தாண்டுக் காலத்திற்கு மீண்டும் நியமிப்பதற்கு அந்தக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போதைய தலைவராக இருக்கும் சந்திரசேகரனின் பதவிக் காலம் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் முடிவடைகிறது.
- அவர் 2016 ஆம் ஆண்டில் டாடா சன்ஸ் வாரியத்தில் சேர்ந்து 2017 ஆம் ஆண்டில் அதன் தலைவராக பொறுப்பேற்றார்.




## ஜாரா ரூதர்ஃபோர்ட்

- 19 வயதான ஜாரா ரூதர்ஃபோர்ட் உலகம் முழுவதும் தனியாக விமானத்தில் பயணித்த இளையப் பெண்மணி ஆனார்.
- ஐந்து கண்டங்கள் மற்றும் 28,000 நாட்டிகல் மைல்கள் கடந்த ஒரு பூகோளப் பயணத்தை நிறைவு செய்த அவரது விமானம் பெல்ஜியத்தின் கோர்ட்ரிஜ் நகரில் தரையிறங்கியது.
- 2021 ஆம் ஆண்டில் கிரேட் பிரிட்டனைச் சேர்ந்த டிராவிஸ் லுட்லோ தனது 18வது வயதில் தனியாகப் பறந்து உலகைச் சுற்றிய முதல் இளம் நபர் என்ற பெருமையைப் பெற்றார்.



## ராகுல் பஜாஜ் (83)

- தொழிலதிபரும் வணிக உலகில் பிரபலமானவருமான ராகுல் பஜாஜ் புனேவில் சமீபத்தில் காலமானார்.
- இவர் 1938 ஆம் ஆண்டில் கொல்கத்தாவில் பிறந்தார்.
- இவர் பஜாஜ் குழுமத்தின் முன்னாள் தலைவராக இருந்தவர் ஆவார்.
- 'ஹமாரா பஜாஜ்' என்ற முழக்கமானது இவர் காலத்தில் ஒரு பிரபலமான விளம்பரமாக மாறியது.

- இவர் இந்த நிறுவனத்தின் ஓய்வு பெற்ற தலைவராக இருந்தார்.



## ராஜீவ் பாட்டியா

- "India-Africa Relations: Changing Horizons" என்ற ஒரு புதிய புத்தகத்தினை ராஜீவ் பாட்டியா எழுதியுள்ளார்.
- தூதர் ராஜீவ் பாட்டியா, கேட்வே ஹவுஸின் வெளிநாட்டுக் கல்வி திட்டத்தின் ஒரு புகழ் பெற்ற கல்வியாளர் ஆவார்.
- கேட்வே ஹவுஸ்: உலக உறவுகள் பற்றிய இந்திய சபை என்பது இந்தியாவின் மும்பை நகரில் உள்ள வெளியுறவுக் கொள்கை சார்ந்த ஒரு சிந்தனைக் குழுவாகும்.




## ESPNcricinfo விருதுகள்

- 15வது ESPNcricinfo விருது வழங்கும் விழாவில், இந்தியாவின் ஒரு விக்கெட் கீப்பர் - பேட்ஸ்மேன் ஆன ரிஷப் பந்த் 'டெஸ்ட் பேட்டிங்' விருதை வென்றார்.
- 2021 ஆம் ஆண்டு பார்டர் கவாஸ்கர் கோப்பையை இந்திய அணி வெல்வதற்கு இவர் பெரும் பங்காற்றினார்.
- நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் 'ஆண்டின் சிறந்த அணித் தலைவராக'

தேர்வு செய்யப்பட்டார்.




## வணிகத்தர வங்கியாளர்

- சந்தீப் பக்சி 2020-21 ஆம் ஆண்டின் வணிகத்தர வங்கியாளர் ஆவார்.
- இவர் ICICI வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார்.
- கடந்த மூன்றரை ஆண்டுகளில் அவர் வகித்த பதவிக் காலத்தில் தனியார் துறை வங்கிகளை மாற்றியமைத்து, அதைப் பற்றிய கருத்தை மாற்றியதற்காக இவருக்கு இந்தக் கௌரவமானது வழங்கப்பட்டது.

## மத்திய இடைநிலைக்கல்வி வாரியத்தின் தலைவர்



- இந்திய ஆட்சிப்பணி அதிகாரி வினீத் ஜோஷி மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கூடுதல் அலுவலராக இந்திய ஆட்சிப் பணி அதிகாரி மனோஜ் அஹூஜா நியமிக்கப்பட்டதையடுத்து ஜோஷி இவரது பதவியினை ஏற்க உள்ளார்.

## பப்பி லஹிரி

- மூத்தப் பாடகரும் இசையமைப்பாளருமான பப்பி லஹிரி தனது 68வது வயதில் காலமானார்.
- இவர் மகத்தான பாடல்களை வழங்கியதற்காக வேண்டி இசைத்துறையின் பப்பி தா என அன்போடு அழைக்கப்பட்டார்.
- இவரது இயற்பெயர் அலோகேஷ் லஹிரி ஆகும்.
- இவரது கடைசிப் பாடல் 2020 ஆம் ஆண்டில் வெளியான பாகி 3 என்ற திரைப்படத்தில் இடம் பெற்ற பன்காஸ் எனும் ஒரு பாடலாகும்.




## சாமுவேல் மோய்ன் எழுதிய புத்தகம்

- "Humane: How the United States Abandoned Peace and Reinvented War" என்று தலைப்பிடப்பட்ட சாமுவேல் மோய்ன் எழுதிய ஒரு புதிய புத்தமானது வெளியிடப்பட்டது.
- சாமுவேல் மோய்ன் யேல் சட்டப்பள்ளியில் நீதித்துறைப் பேராசியராகவும், யேல் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசியராகவும் உள்ளார்.
- இந்தப் புத்தகமானது போர்களை எதிர் கொள்வதற்கான அமெரிக்காவின் உத்திகள் பற்றியும் சர்ச்சைகளைத் தீர்ப்பதில் ஆயுதமேந்திய போர் முறையானது ஒரு பொருந்தாத முறையாக இருந்த நிலையிலிருந்து நவீனச் சூழல்களின் ஓர் அங்கமாக அது எவ்வாறு மாறியது என்பது பற்றியும் எடுத்துரைக்கிறது.



## வருடாந்திர வங்கித் தொழில்நுட்ப விருதுகள் 2021

- இந்திய வங்கிகள் சங்கமானது, தனது 17வது வருடாந்திர வங்கித் தொழில்நுட்ப விருதுகளை (2021) அறிவித்துள்ளது.
- இந்த நிகழ்வில் தென் இந்திய வங்கியானது மொத்தமாக 6 விருதுகளை வென்றுள்ளது.
- அடுத்தத் தலைமுறை வங்கிகளைக் கொண்டாடும் இந்த ஆண்டிற்கான இந்திய வங்கிகள் சங்க விருதுகள் கடந்த சில ஆண்டுகளாக அதிக அளவிலான புதுமைகளை வெளிப்படுத்திய வங்கித் துறையின் தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை அங்கீகரித்துள்ளது.

The list of winners in different categories is given below:

Best Technology Bank of the Year
In Large Banks segment: Bank of Baroda
In Small Banks segment: The South Indian Bank
In Foreign Banks segment: Citibank N.A.
Regional Rural Banks: Baroda Rajasthan Kshetriya Gramin

Best Digital Financial Inclusion Initiatives
Large Banks: State Bank of India
Small Banks: The Jammu & Kashmir Bank
Regional Rural Banks: Baroda Rajasthan Kshetriya Gramin

Best Payments Initiatives
Public Banks: State Bank of India
Private Banks: ICICI Bank

Best Fintech Adoption
Large Banks: ICICI Bank
Medium Banks: Federal Bank
Small Banks: The South Indian Bank
Regional Rural Banks: Baroda Rajasthan Kshetriya Gramin

## கர்நாடக வங்கி

- கர்நாடக வங்கியானது "17வது வருடாந்திர வங்கித் தொழில்நுட்ப மாநாடு மற்றும் விருதுகள்: 2020-21 ஆம் ஆண்டின் அடுத்த தலைமுறை வங்கி" என்ற விழாவில் மூன்று விருதுகளைப் பெற்றுள்ளது.
- இது இந்திய வங்கிகள் சங்கத்தால் நிறுவப்பட்டதாகும்.
- இந்த வங்கியானது பின்வரும் பிரிவுகளில் விருதுகளை வென்றுள்ளது.
    - ஆண்டின் சிறந்த தொழில்நுட்ப வங்கி,
    - சிறந்த நிதித் தொழில்நுட்ப ஏற்பு மற்றும்
    - AI/ML (artificial intelligence/machine learning) மற்றும் தரவுப் பகுப்பாய்வுகளைச் சிறந்த முறையில் பயன்படுத்துதல்.
- மேலே உள்ள மூன்று பிரிவுகளிலும் இந்த வங்கி இரண்டாவது இடத்தைப் பெற்றது.

## ரோ கண்ணா எழுதிய புத்தகம்

- ❖ ரோ கண்ணா எழுதிய "Dignity in a Digital Age: Making Tech Work for All of Us" என்ற ஒரு புதிய புத்தகமானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- ❖ தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக அமெரிக்கர்களின் வாழ்க்கை முறை மாறி வருவதால் ஏற்படும் விளைவுகளை இந்தப் புத்தகம் எடுத்துரைக்கிறது.
- ❖ அமெரிக்கா எதிர்கொள்ளும் மிக நெருக்கடியான பிரச்சினைகளில் டிஜிட்டல் இடைவெளியும் ஒன்று என இப்புத்தகம் குறிப்பிட்டுள்ளது.
- ❖ ரோ கண்ணா ஓர் இந்திய-அமெரிக்கர் ஆவார்.




## தாதா சாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விருது விழா – 2022




- ❖ இந்த ஆண்டு தாதா சாகேப் பால்கே சர்வதேச திரைப்பட விருது விழாவானது இந்திய சினிமாத் துறையின் செழுமையினையும் ஆசாதி கா அம்ரித் மகோத்சவ் (அ) 75வது ஆண்டு சுதந்திர விழாவினையும் நினைவு கோரி கொண்டாடியது.

*விருதுகள்*

- ஆண்டின் சிறந்த திரைப்படம் – புஷ்பா : தி ரைஸ்
- சிறந்த திரைப்பட விருது – செர்ஷா
- சிறந்த நடிகர் விருது - 83 திரைப்படத்திற்காக ரன்வீர் சிங்
- சிறந்த நடிகை விருது - மிமி திரைப்படத்திற்காக கிரித்தி சனோான்

## உமா தாஸ் குப்தா எழுதிய புத்தகம்

- "A History of Sriniketan : Rabindranath Tagore's pioneering work in Rural Construction" என்று தலைப்பிடப் பட்ட புத்தகமானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- உமா தாஸ் குப்தா இந்தப் புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகமானது, நோபல் பரிசு பெற்ற ரபீந்திரநாத் தாகூர், ஸ்ரீ நிகேதனை நிறுவியதன் மூலம் கிராமப்புற மறுகட்டமைப்பில் ஆற்றியப் பணிகள் பற்றி கூறுகிறது.
- இது சாந்தி நிகேதனிலுள்ள விஷ்வ பாரதி சர்வதேச பல்கலைகழகத்தின் கிளையாக 1922 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது மேற்கு வங்கத்தில் அமைந்துள்ளது.




## இந்தியாவின் மிக நம்பகமான பொதுத் துறை நிறுவன விருது

- இந்திய நிலக்கரி நிறுவனத்திற்கு இந்தியாவின் நம்பகமான பொதுத்துறை நிறுவன விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- கொல்கத்தாவில் நடைபெற்ற எரிசக்திச் சந்திப்பு மற்றும் சிறப்பு விருது வழங்கும் விழாவில் இந்த விருதானது வழங்கப்பட்டது.
- இது ASSOCHAM என்ற தொழில்துறைச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

Coal India Limited

A Maharatna Company

## சகுந்தலா சௌத்ரி



- புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரரும், காந்திய சமூகப் பணியாளருமான சகுந்தலா சௌத்ரி காலமானார்.
- இவரின் வயது 102 ஆகும்.
- இவருக்கு 2022 ஆம் ஆண்டில் இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது.
- இவர் அசாமிலுள்ள காமரூப் என்னுமிடத்தைச் சேர்ந்தவர்.
- காந்திய வழியில் வாழ்க்கையைப் பிரபலப்படுத்துவதில் தனது அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டிற்காக இவர் பிரபலமாக அறியப்பட்டார்.
- இவர் கிராமப்புறங்களில் குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக பணியாற்றினார்.

## பிரியம் காந்தி மோடி எழுதிய புத்தகம்

- பிரியம் காந்தி மோடி எழுதிய "A Nation to Protect" என்ற புத்தகத்தினை மத்திய சுகாதார அமைச்சர் மான்சுக் மாண்டவ்யா வெளியிட்டார்.
- இந்தப் புத்தகமானது கடந்த 2 ஆண்டுகளாக இருந்து வரும் கோவிட் நெருக்கடி காலத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பங்கினை பற்றி எடுத்து உரைக்கிறது.
- மேலும், இந்த எதிர்பாராத சூழலில் மத்திய அரசின் தலைமைத்துவம் பற்றியும், இந்த நெருக்கடி காலம் முழுவதிலும் தேசத்தை அது எவ்வாறு ஒரு சேர இயக்கியது என்பது பற்றியும் ஆவணப்படுத்துகிறது.




## நடிகை KPAC லலிதா



- மூத்த மலையாளத் திரைப்பட மற்றும் மேடை (நாடக) நடிகையான KPAC லலிதா தனது 74வது வயதில் காலமானார்.
- இவர் மலையாளம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் 550க்கும் மேற்பட்ட திரைப் படங்களில் நடித்தவராவார்.
- இவர் ஆலப்புழாவின் காயங்குளம் என்ற பகுதியில் மகேஷ்வரி அம்மா என்ற பெயரில் பிறந்தவராவார்.

## இளம் கணிதவியலாளர்களுக்கான இராமானுஜன் பரிசு

- பேராசிரியர் நீனா குப்தாவிற்கு 2021 ஆம் ஆண்டின் இளம் கணிதவியலாளர்களுக்கான இராமானுஜன் பரிசானது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் கொல்கத்தாவிலுள்ள இந்தியப் புள்ளியியல் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு கணிதவியலாளர் ஆவார்.
- கேண்முறை இயற்கணித வடிவியல் மற்றும் பரிமாற்ற இயற்கணிதம் (affine algebraic geometry and commutative algebra) ஆகியவற்றில் இவர் ஆற்றிய ஒரு சிறப்பானப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்பட்டது.

- இளம் கணிதவியலாளர்களுக்கான இராமானுஜன் பரிசானது, இத்தாலியிலுள்ள "சர்வதேசக் கோட்பாட்டு இயற்பியல் மையத்தினால்" ஆண்டுதோறும் வழங்கப்படும் ஒரு கணிதப் பரிசாகும்.
- இந்தப் பரிசானது 2004 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது.



## அனிருத் சூரி எழுதிய புத்தகம்

- இந்திய எழுத்தாளர் அனிருத் சூரி, "The Great Tech Game : Shaping Geopolitics and the Destinies of Nations" என்ற ஒரு புதியப் புத்தகத்தினை வெளியிட்டுள்ளார்.
- இது ஹார்பர்கோலின்ஸ் இந்தியா என்ற பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தப் புத்தகத்தில், தொழில்நுட்ப ஆதிக்கம் நிறைந்த இந்தக் காலகட்டத்தில் வெற்றி பெறுவதற்கான தனது சொந்த மூலோபயத் திட்டங்களை ஒவ்வொரு நாடும் எவ்வாறு உருவாக்க வேண்டும் என்ற ஒரு செயல்திட்டத்தை இவர் வகுத்துள்ளார்.



## ஹேமானந்தா பிஸ்வால்

- ஒடிசாவின் முதல் பழங்குடியின முதல்வரும், மாநிலத்தின் கடைசி காங்கிரஸ் முதல்வருமான ஹேமானந்தா பிஸ்வால் சமீபத்தில் காலமானார்.
- இவரது வயது 82 ஆண்டுகள் ஆகும்.
- பிஸ்வால் ஜார்சுகுடா மாவட்டத்தைச் சேர்ந்த புயான் என்ற இனப் பழங்குடியினர் ஆவார்.
- 1989 – 1990 மற்றும் 1999 - 2000 ஆகிய இரண்டு காலக்கட்டத்தில் இவர் இரண்டு முறை முதலமைச்சராகப் பதவி வகித்தார்.



# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸ்திரேலிய ஓபன் போட்டி – 2022




- 2009 ஆம் ஆண்டிற்குப் பிறகு 13 ஆண்டுகள் கழித்து நடால் தனது 2வது ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தைப் பெற்றார்.

- 21 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் வீரர் என்ற பெருமையையும் ரஃபேல் நடால் பெற்றார்.
- நான்கு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு முறை வெற்றி பெற்ற 4வது நபராகவும் நடால் மாறியுள்ளார்.
- கென் ரோஸ்வால் மற்றும் பெடரர் ஆகியோரையடுத்து ஓபன் சகாப்தத்தில் (1970 முதல்) ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற 3வது வயதான மனிதரும் இவரே ஆவார்.

## 2021 ஆம் ஆண்டிற்கான உலக விளையாட்டுப் போட்டிகளில் ஆண்டின் சிறந்த தடகள வீரர் விருது




- இந்திய ஆடவர் ஹாக்கி வீரர் P.R.ஸ்ரீஜேஷ் 2021 ஆம் ஆண்டிற்கான உலக விளையாட்டுப் போட்டிகளில் ஆண்டின் சிறந்த தடகள வீரர் விருதை வென்றுள்ளார்.
- ராணி ராம்பாலுக்குப் பிறகு இந்த விருதைப் பெற்ற இரண்டாவது இந்தியர் இவரே ஆவார்.
- 2020 ஆம் ஆண்டில், இந்திய மகளிர் ஹாக்கி அணித் தலைவர் ராணி ராம்பால் 2019 ஆம் ஆண்டில் தனது சிறந்த செயல்திறனுக்காக இந்த கௌரவப் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார்.

## இந்தியாவின் முதல் மாபெரும் ஒற்றை யுனிகார்ன் விளையாட்டு நிறுவனம்




- சென்னை சூப்பர் கிங்ஸ் நிறுவனத்தின் சந்தை மூலதனம் ரூ.7,600 கோடி என்ற ஒரு அளவை எட்டியதையடுத்து இந்த நிறுவனம் இந்தியாவின் முதல் மாபெரும் ஒற்றை யுனிகார்ன் விளையாட்டு நிறுவனம் ஆக மாறியுள்ளது.

- கடந்த ஆண்டு துபாயில் நடந்த நான்காவது ஐபிஎல் போட்டியில் பட்டத்தை வென்ற மகேந்திர சிங் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியானது, இப்போது அதன் தலைமை நிறுவனமான இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தை விட அதிக சந்தை மூலதனத்தை கொண்டுள்ளது.

## ஒடிசா ஓபன் பேட்மிண்டன் போட்டி 2022




- 2022 ஆம் ஆண்டு ஒடிசா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்திய இளம்பெண் உன்னதி ஹூடா, தனது சகப் போட்டியாளரான ஸ்மித் தோஷ்னிவாலை வீழ்த்தி பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.
- 14 வயதான உன்னதி இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற இளம் இந்தியர் ஆவார்.
- ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் 21 வயதான கிரண் ஜார்ஜ், பிரியன்ஷு ரஜாவத்தை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

## U19 உலகக் கோப்பை போட்டி 2022



- மேற்கு இந்தியத் தீவுகளின் ஆன்டிகுவாவில் உள்ள சர் விவியன் ரிச்சர்ட்ஸ் என்ற மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்திய அணியானது இங்கிலாந்து அணியினை 4 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி ஐந்தாவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது.
- இதற்கு முன் 2000, 2008, 2012, 2018 ஆகிய ஆண்டுகளில் கோப்பையை வென்ற இந்திய அணி தற்போது, ஐந்தாவது பட்டத்தைத் தனது பட்டியலில் சேர்த்துள்ளது.
- முகமது கைஃப், விராட் கோலி, உன்முக்த் சந்த் மற்றும் பிருத்வி ஷா ஆகியோருக்குப் பிறகு இந்தப் பட்டத்தை வென்ற ஐந்தாவது இந்திய அணித்தலைவர் என்ற ஒரு பெருமையை யாஷ் துல் பெற்றார்.
- இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2022 ஆம் ஆண்டு ஐசிசி 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக இந்தியாவின் ராஜ் அங்கத் பாவா அறிவிக்கப்பட்டுள்ளார்.

## ICC கிரிக்கெட் உத்வேக விருது 2021

- நியூசிலாந்து கிரிக்கெட் வீரர், டேரில் மிட்செல் சர்வதேச கிரிக்கெட் சபையினால் வழங்கப் படும் 2021 ஆம் ஆண்டு கிரிக்கெட் உத்வேக விருதினைப் பெறுபவராக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- டேனியல் வெட்டோரி, பிரெண்டன் மெக்கல்லம் மற்றும் கேன் வில்லியம்சன் ஆகியோரையடுத்து இந்த விருதினைப் பெறும் 4வது நியூசிலாந்து நாட்டு வீரர் இவரே ஆவார்.
- இந்த விருதானது கிரிக்கெட்டின் உத்வேக நிலையினை நிலைநாட்டியதற்காக மிகவும் போற்றப்படும் வீரருக்கு சர்வதேச கிரிக்கெட் சபையினால் ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.



## ஒலிம்பிக் போட்டிகள் 2028




- ❖ 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளானது லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற உள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டின் பாரீஸ் நகரில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பிறகு இந்தப் போட்டிகள் நடைபெறும்.
- ❖ 2022 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் டோக்கியோவில் நடைபெற்றன.
- ❖ இவை முக்கிய ஒலிம்பிக் போட்டியான கோடைக் கால ஒலிம்பிக் போட்டிகளாகும்.
- ❖ தற்போது சீனாவில் நடைபெற்று வரும் போட்டிகள் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ஆகும்.
- ❖ 2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் கடல் அலை சறுக்கல், மலை ஏறுதல் மற்றும் பலகைச் சறுக்குப் போட்டி ஆகியவையும் இடம் பெறும்.
- ❖ இவை புதிதாக சேர்க்கப்படும் போட்டிகளாகும்.
- ❖ இவை 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் அறிமுகப் படுத்தப் பட்டன.

## இந்திய அணியின் 1000வது ODI போட்டி




- ❖ 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 06 அன்று இந்திய அணி தனது 1000வது ODI போட்டியில் பங்கேற்றது.
- ❖ மேற்கிந்திய அணிக்கு எதிராக இப்போட்டி நடைபெற்றது.

- இந்திய அணியானது ரோகித் சர்மாவின் தலைமையின் கீழ் பங்கேற்றது.
- இந்திய அணி இப்போட்டியில் வெற்றி பெற்றது.
- உலகிலேயே 1000 ODI போட்டிகளை நிறைவு செய்த முதல் அணி இந்தியக் கிரிக்கெட் அணியாகும்.

## 2028 ஒலிம்பிக் போட்டிகளில் புதிய விளையாட்டுப் போட்டிகள்




- அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற உள்ள 2028 ஆம் ஆண்டு கோடைக் கால ஒலிம்பிக் போட்டிகளில் அலை சறுக்கு, பலகை சறுக்கு மற்றும் மலை ஏறுதல் ஆகிய போட்டிகளைச் சேர்ப்பதற்கான முன்மொழிதலுக்கு சர்வதேச ஒலிம்பிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2028 ஆம் ஆண்டு கோடைக் கால ஒலிம்பிக் போட்டிகளானது XXXIV ஒலிம்பியாய்டு (அ) லாஸ் ஏஞ்செல்ஸ் 2028 என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப்படுகிறது.
- 2024 ஆம் ஆண்டு கோடைக் கால ஒலிம்பிக் போட்டிகளானது பிரான்சின் பாரீஸ் நகரில் நடைபெற உள்ளது.
- இத்துடன் 3 கோடைக் கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய 2வது நகராக பாரீஸ் மாற உள்ளது.
- அலை சறுக்கு, பலகை சறுக்கு மற்றும் மலை ஏறுதல் ஆகியவை 2021 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் அறிமுகப் படுத்தப்பட்டன.

## AFC மகளிர் ஆசியக் கோப்பைப் போட்டி - இந்தியா 2022

- சீன மக்கள் குடியரசு அணியானது தென் கொரிய அணியை (கொரியக் குடியரசு) தோற்கடித்து AFC மகளிர் ஆசியக் கோப்பை இந்தியா 2022 இறுதிப் போட்டியில் வென்றது.
- இது நவி மும்பையில் உள்ள D.Y. பட்டீல் மைதானத்தில் நடைபெற்றது.
- இது சீனா வென்ற 9வது AFC மகளிர் ஆசியக் கோப்பைப் பட்டமாகும்.
- ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள 2023 FIFA மகளிர் உலகக் கோப்பைக்கு சீனா தற்போது தகுதி பெற்றுள்ளது.




## குஜராத் டைட்டன்ஸ்

- குஜராத் டைட்டன்ஸ் என்பது சிவிசி கேப்பிட்டல் நிறுவனத்திற்குச் சொந்தமான புதிய அகமதாபாத் அணியின் அதிகாரப்பூர்வப் பெயராகும்.
- 2022 ஆம் ஆண்டு இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) போட்டியில் ஹர்திக் பாண்டியா இந்த அணிக்குத் தலைமை ஏற்க உள்ளார்.
- RPSG குழுமத்திற்குச் சொந்தமான லக்னோ அணி அதன் அதிகாரப்பூர்வப் பெயரை லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் என்று அறிவித்த சில நாட்களுக்குப் பிறகு அகமதாபாத் அணிக்குப் பெயரிடப்பட்டுள்ளது.
- லக்னோ அணிக்கு K.L. ராகுல் தலைமை தாங்குகிறார்.




## டாடா ஓபன் டென்னிஸ் – மகாராஷ்டிரா

- புனேவில் நடைபெற்ற மகாராஷ்டிர டாடா ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ரோகன் போபண்ணா மற்றும் ராம்குமார் ராமநாதன் இருவரும் இணைந்து இரண்டாவது ஏடிபி உலகப் போட்டியின் பட்டத்தை வென்றனர்.
- இவர்கள் ஆஸ்திரேலியாவின் லூக் சாவில் மற்றும் ஜான்-பேட்ரிக் ஸ்மித் ஆகியோரை வீழ்த்தினர்.

- ❖ பின்லாந்தின் எமில் ரூசுவூரியை வீழ்த்தி போர்ச்சுகலின் ஜோவா சோசா வென்றார்.

## ஆரிப் கான்

- ❖ இந்தியப் பனிச்சறுக்கு வீரரான ஆரிப் கான், 2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் இரண்டு போட்டிகளுக்குத் தகுதி பெற்ற முதல் இந்தியர் ஆவார்.
- ❖ 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 அன்று சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவின் போது அவர் ஒரு சிறிய அளவிலான இந்திய அணியை வழி நடத்தினார்.
- ❖ இவர் ஸ்லாலோம் மற்றும் ஜெயன்ட் ஸ்லாலோம் (பனிச்சறுக்கு) போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளார்.
- ❖ பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் ஒரே ஒரு இந்தியப் போட்டியாளர் இவரே ஆவார்.
- ❖ இவர் காஷ்மீரில் பிறந்தவர் ஆவார்.
- ❖ 2022 ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை அரச முறையில் புறக்கணிப்பதாக இந்தியா அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.




## 2021 ஆம் ஆண்டு FIFA கிளப் உலகக் கோப்பைப் போட்டி

- ❖ ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அபுதாபியில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டு FIFA கிளப் உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இங்கிலாந்து கிளப் அணியான செல்சி அணி, பிரேசிலிய கிளப் அணியான பால்மீராஸைத் தோற்கடித்துள்ளது.
- ❖ FIFA கிளப் உலகக் கோப்பையை செல்சி அணி முதன்முறையாக வென்றுள்ளது.
- ❖ மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் லிவர்பூல் ஆகிய அணிகளுக்குப் பிறகு கிளப் உலகக் கோப்பையை வென்ற மூன்றாவது இங்கிலாந்து அணி செல்சி ஆகும்.




## தேசிய வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டி - சீனியர்

- 2021-22 ஆம் ஆண்டு மூத்த வயதினருக்கான (சீனியர்) தேசிய வாலிபால் சாம்பியன் ஷிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்திய இரயில்வே அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஹரியானா அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.
- பெண்கள் பிரிவில் கேரள அணி 3-1 என்ற கோல் கணக்கில் இந்திய இரயில்வே அணியை வீழ்த்தி கோப்பையைக் கைப்பற்றியது.
- 70வது மூத்த வயதினருக்கான (2021-22) தேசிய வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டி என்பது (ஆண்கள் மற்றும் பெண்கள்) ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள பிஜு பட்நாயக் உள் விளையாட்டு அரங்கில் நடத்தப் பட்டது.

## சாகிபுல் கானி – ரஞ்சி கோப்பை



- தான் அறிமுகமான முதல் போட்டியிலேயே மூன்று சதங்கள் அடித்த உலகின் முதல் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை இந்தியாவின் சாகிபுல் கானி பெற்றுள்ளார்.
- இவர் ரஞ்சி கோப்பைப் போட்டியில் 341 ரன்கள் எடுத்தார்.
- இவர் பீகார் அணியினைச் சேர்ந்தவர் ஆவார்.

## சர்வதேச ஒலிம்பிக் குழு கூட்டம் – 2023




- 2023 ஆம் ஆண்டின் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் கூட்டமானது இந்தியாவின் மும்பை நகரில் நடைபெற உள்ளது.
- இந்தக் கூட்டமானது மும்பையிலுள்ள ஜியோ மாநாட்டு மையத்தில் நடத்தப் பட உள்ளது.
- இந்தக் குழுவின் முந்தைய ஒரு கூட்டமானது 1983 ஆம் ஆண்டில் இந்தியாவின் புது டெல்லியில் நடத்தப் பட்டது.
- 2022 ஆம் ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் குழுவின் கூட்டமானது சீனாவின் பெய்ஜிங் நகரில் நடத்தப் பட்டது.
- இக்குழுவில் இடம் பெற்றுள்ள இந்தியப் பிரதிநிதி நீதா அம்பானி ஆவார்.

## பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்




- 2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளானது பிப்ரவரி 4 முதல் 20 வரையில் சீனாவின் பெய்ஜிங் நகரில் நடைபெற்றது.
- 7 விளையாட்டுத் துறைகளில் 15 பிரிவுகளில் 109 போட்டிகள் நடைபெற்றன.
- பெய்ஜிங், யாங்கிங் மற்றும் சாங்கிஜியகோ ஆகிய மூன்று இடங்களில் போட்டிகள் நடத்தப் பட்டன.
- இந்தப் போட்டிகளின் தலைமைத்துவமானது, 2026 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்காக வேண்டி இத்தாலியின் மிலன் மற்றும் கார்டினா டி அம்பெசோவிடம் அதிகாரப் பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

- மொத்தம் 37 பதக்கங்களை வென்று தொடர்ந்து 2 குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் நார்வே முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- இது ஒரு குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் அதிகபட்ச தங்கப் பதக்கம் வெல்லப்பட்ட ஒரு புதிய சாதனையாகும்.
- இதில் ஜெர்மனி 2வது இடத்தைப் பெற்றது.
- இதில் சீனா 3வது இடத்தினைப் பெற்றது.
- இந்தியாவின் சார்பாக ஆல்பைன் பனிச்சறுக்கு வீரர் ஆரிஃப் கான் இப்போட்டியில் பங்கேற்றார்.
- இப்போட்டியில் இந்தியாவால் எந்த பதக்கமும் வெல்ல இயலவில்லை.

## IOC தடகள வீரர்கள் ஆணையம்

- சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தடகள வீரர்கள் ஆணையமானது இங்கிலாந்தைச் சேர்ந்த பனித்தள ஹாக்கி வீரரான எம்மா டெர்ஹோவினை (Emma Terho) அதன் தலைவராக மீண்டும் தேர்வு செய்துள்ளது.
- இவர் 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகள் வரையில் இந்த ஆணையத்தின் தலைவராக பணியாற்றுவார்.
- இந்த ஆணையமானது, கொரியக் குடியரசினைச் சேர்ந்த டென்னிஸ் வீரரான சியோங்மின் ரியூவினை தனது முதலாவது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து உள்ளது.
- மேலும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த சைக்கிள் ஓட்டும் வீரரான சாரா வால்கடிரை ஆணையத்தின் 2வது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளது.




## ATP 500 சாம்பியன்சிப்பினை வென்ற இளம் வீரர்

- ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த 18 வயதான கார்லஸ் அல்காரஸ் (Carlos Alcaraz), பிரேசிலின் ரியோ டி ஜெனிரியோவில் நடைபெற்ற போட்டியில் டியேகோ ஸ்வார்ட்ஸ்மேனை (Diego Schwartzman) வீழ்த்தி ரியோ ஓபன் டென்னிஸ் பட்டத்தை வென்றார்.
- 2009 ஆம் ஆண்டில் இந்த பிரிவு உருவாக்கப்பட்டதிலிருந்து ATP 500 சாம்பியன்சிப் பட்டத்தை வென்ற இளம் வீரராக இவர் மாறியுள்ளார்.



## பிரக்ஞானந்தாவின் வெற்றி




- இந்தியாவில் சென்னையினைச் சேர்ந்த ரமேஷ் பாபு பிரக்ஞானந்தா ஒரு புகழ்பெற்ற உலகச் சாம்பியனான நார்வே நாட்டைச் சேர்ந்த மேக்னஸ் கார்ல்செனை வீழ்த்தி உள்ளார்.
- இணையவழியாக நடைபெற்று வரும் ஏர்திங்க்ஸ் மாஸ்டர்ஸ் என்ற செஸ் போட்டியின் முதல்நிலைப் போட்டியின் 8வது சுற்றில் இவர் இந்த வெற்றியைப் பெற்றார்.
- 16 வயதான பிரக்ஞானந்தா, விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் பென்டாலா ஹரி கிருஷ்ணா ஆகியோரையடுத்து மேக்னஸ் கார்ல்செனை வீழ்த்திய மூன்றாவது இந்தியராக ஆனார்.
- மேக்னஸ் கார்ல்சென் 5 முறை உலக சாம்பியன் பட்டம் பெற்ற நார்வே நாட்டின் ஒரு கிராண்ட் மாஸ்டர் ஆவார்.
- இவர் 3 முறை உலக விரைவு சதுரங்க சாம்பியன்சிப் போட்டியினையும் 5 முறை உலக பிளிட்ஸ் சதுரங்கப் போட்டியினையும் வென்றுள்ளார்.

## தேசிய சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டி




- 58வது தேசிய மூத்தோர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில், பெட்ரோலிய விளையாட்டு மேம்பாட்டு வாரியத்தின் முன்னாள் சாம்பியன் ஆன அதிபனுக்கு (Adhiban) முன்னணி இடமானது வழங்கப்பட்டது.
- இந்தப் போட்டியில் மொத்தம் 184 வீரர்கள் பங்கேற்கின்றனர்.
- 23 கிராண்ட் மாஸ்டர்கள் மற்றும் 30 சர்வதேச மாஸ்டர்கள் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

## சர்வதேச அளவிலான சிங்கப்பூர் பளு தூக்குதல் போட்டி

- 2022 ஆம் ஆண்டு சர்வதேச அளவிலான சிங்கப்பூர் பளு தூக்குதல் போட்டியின் 55 கிலோ எடைப் பிரிவில் மீராபாய் சானு தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.
- சானு 191 கிலோ (86 கிலோ+105 கிலோ) எடையைத் தூக்கியதன் மூலம் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
- இவர் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றவர் ஆவார்.



# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடலோரக் காவல்படை நிறுவன தினம் - பிப்ரவரி 01




- இந்தியக் கடலோரக் காவல்படை ஆனது, 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 அன்று தனது 46வது நிறுவன தினத்தைக் கொண்டாடுகிறது.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது, உலகின் நான்காவது பெரிய கடலோரக் காவல் படையாக, இந்தியக் கடலோரப் பகுதிகளைப் பாதுகாப்பதிலும், இந்தியாவின் கடல்சார் மண்டலங்களில் விதிமுறைகளைச் செயல்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்கப் பங்கினை ஆற்றியுள்ளது.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 அன்று இந்திய நாடாளுமன்றத்தின் 1978 ஆம் ஆண்டு கடலோரக் காவல்படைச் சட்டத்தின் மூலம் அதிகாரப் பூர்வமாக நிறுவப்பட்டது.
- இது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## உலக ஈரநில தினம் - பிப்ரவரி 02




- 2022 ஆம் ஆண்டானது, ஈரநிலங்கள் தொடர்பான ஒரு உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டதன் 51 ஆண்டுகள் நிறைவினைக் குறிக்கிறது.

- 2022 ஆம் ஆண்டின் உலக ஈரநில தினத்திற்கான சர்வதேச கருத்துரு, 'Wetlands Action for People and Nature'' என்பதாகும்.
- மக்களுக்கும் நமது பூமிக்கும் ஈரநிலங்கள் ஆற்றும் முக்கியப் பங்கு பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த தினமானது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலக சமய நல்லிணக்க வாரம் – பிப்ரவரி 01 முதல் 07

- உலக சமய நல்லிணக்க வாரமானது கலாச்சார அமைதி மற்றும் அகிம்சையை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டது.
- இது முதன்முறையாக 2010 ஆம் ஆண்டில், ஜோர்டான் நாட்டின் அரசர் இரண்டாம் அப்துல்லாவினால் ஐக்கிய நாடுகள் அவையில் முன்மொழியப்பட்டது.




## சர்வதேச மனித சகோதரத்துவ தினம் – பிப்ரவரி 04




- இத்தினமானது சகிப்புத் தன்மையை மேம்படுத்துதல், வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் சமயங்கள் அல்லது நம்பிக்கைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதையும், சகிப்புத் தன்மை, பன்மைத்துவப் பாரம்பரியம், பரஸ்பர மரியாதை மற்றும் மதங்கள் & நம்பிக்கைகளின் பன்முகத்தன்மை ஆகியவை மனித சகோதரத்துவதை ஊக்குவிக்கின்றன என்பதை மக்களுக்குக் கற்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதலாவது சர்வதேச மனித சகோதரத்துவ தினமானது 2021 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- இத்தினமானது பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் அனுசரிக்கப்படும் உலக மத நல்லிணக்க வாரத்தின் ஒரு பகுதியாகும்.

### உலகப் புற்றுநோய் தினம் – பிப்ரவரி 04

- இத்தினமானது உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் சர்வதேச புற்றுநோய்க் கட்டுப்பாட்டு ஒன்றியத்தினால் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு, “Close The Care Gap” என்பதாகும்.
- இத்தினமானது 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 அன்று பிரான்சின் பாரீஸ் நகரில் நடைபெற்ற புதிய புத்தாயிரமாண்டிற்கான உலகப் புற்றுநோய் மாநாட்டின் போது நடைமுறைக்கு வந்தது.




### சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் – பிப்ரவரி 06

- இத்தினமானது, பெண் பிறப்புறுப்பு சிதைப்பு முறையை ஒழிப்பதற்காக வேண்டி ஐ.நா. அமைப்பினால் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது முதலில் 2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “பெண்பிறப்புறுப்பு சிதைப்பு முறையை ஒழிப்பதற்கான முதலீட்டினை அதிகரித்தல்” என்பதாகும்.



## பாதுகாப்பான இணையத்திற்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 08

- இது அனைத்துப் பயனர்களுக்கும், முக்கியமாக குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குப் பாதுகாப்பான இணையத்தை வழங்குவதற்காக கொண்டாடப் படும் ஒரு ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னெடுப்பாகும்.
- 2022 ஆம் ஆண்டானது ஐரோப்பிய இளைஞர் ஆண்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு 19வது பாதுகாப்பான இணைய தினத்தினைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டின் பாதுகாப்பான இணைய தினத்திற்கான கருத்துரு, "சிறந்த இணையத்திற்காக ஒன்றிணைதல்" என்பதாகும்.




## நிதி சார்ந்த கல்வியறிவு வாரம் 2022 - பிப்ரவரி 14 முதல் 18 வரை




- இந்திய ரிசர்வ் வங்கியானது, நிதி சார்ந்த கல்வியறிவினைப் பரப்புவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நாடு முழுவதும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளில் நிதி சார்ந்த கல்வியறிவு வாரத்தை அனுசரித்து வருகிறது.
- 2022 ஆம் ஆண்டு நிதி சார்ந்த கல்வியறிவு வாரத்தின் கருத்துரு, “Go Digital, Go Secure” என்பது ஆகும்.

## உலக பருப்பு வகைகள் தினம் - பிப்ரவரி 10




- பருப்பு வகைகளின் (உலர்ந்த பீன்ஸ், பருப்பு, உலர் பட்டாணி, கொண்டைக்கடலை, லூபின்கள்) முக்கியத்துவத்தை உணர்த்த அவற்றை உலக உணவாக அங்கீகரிக்கச் செய்வதற்காக இந்த தினமானது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பால் நிறுவப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு உலக பருப்பு வகைகள் தினத்தின் கருத்துரு "Pulses to empower youth in achieving sustainable agri-food systems" என்பதாகும்.

## தேசிய குடற்புழு நீக்க தினம் - பிப்ரவரி 10




- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாக இந்த தினமானது தொடங்கப்பட்டது.
- நாடு முழுவதும் உள்ள ஒரு வயது முதல் 19 வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தையையும் குடல் புழு அற்றவர்களாக மாற்றுவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் குடல் புழுக்கள் மண்ணிலிருந்துப் பரவிய ஹெல்மின்த்ஸ் (STH - Soil-Transmitted Helminths) என்றும் குறிப்பிடப்படுகின்றன.
- உலக சுகாதார அமைப்பின் ஒரு கூற்றுப்படி, இந்தியாவில் சுமார் 241 மில்லியன் குழந்தைகள் குடல் புழுக்களால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

## அறிவியலில் சிறுமிகள் மற்றும் பெண்களின் பங்கிற்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 11




- இந்த ஆண்டின் இந்தத் தினமானது, அறிவியலில் சிறுமிகள் மற்றும் பெண்களின் பங்கிற்கான 7வது சர்வதேச தினம் ஆகும்.
- அறிவியல் துறையில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பங்கேற்பினை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் குடிமைச் சமூகப் பங்கேற்பு அமைப்புகளுடன் இணைந்து யுனெஸ்கோ மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்பினால் இந்தத் தினம் செயல்படுத்தப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Equity, Diversity, and Inclusion: Water Unites Us" என்பதாகும்.

## உலக யுனானி தினம் - பிப்ரவரி 11

- "ஹக்கீம் அஜ்மல் கான்" என்பவரின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இவர் ஒரு சிறந்த இந்திய யுனானி மருத்துவர் ஆவார்.
- முதல் யுனானி தினமானது, 2017 ஆம் ஆண்டில் ஹைதராபாத்தில் உள்ள யுனானி மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் (CRIUM - Central Research Institute of Unani Medicine) கொண்டாடப் பட்டது.
- உலகெங்கிலும் யுனானி மருத்துவ முறையின் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் தத்துவத்தின் மூலம் சுகாதார நல வசதிகளை வழங்குவது பற்றிய விழிப்புணர்வை மக்களிடையேப் பரப்புவதே இந்தத் தினத்தின் முக்கிய ஒரு நோக்கமாகும்.

## தேசிய உற்பத்தித் திறன் தினம் - பிப்ரவரி 12

- தேசிய உற்பத்தித் திறன் சபையின் நோக்கம், நாட்டில் உள்ள அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித் திறன் மற்றும் தரம் பற்றிய உணர்வைத் தூண்டி ஊக்குவிப்பதாகும்.
- இந்தியாவில் உற்பத்தித் திறன் சார்ந்த கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய உற்பத்தித் திறன் சபையினால் (NPC- National Productivity Council) இந்த தினமானது கொண்டாடப் படுகிறது.

- இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய உற்பத்தித் திறன் சபையானது இந்தியாவில் உற்பத்தித் திறன் இயக்கத்தைப் பரப்புவதற்கான ஒரு முதன்மையான நிறுவனமாகும்.

## டார்வின் தினம் - பிப்ரவரி 12




- 19 ஆம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் இயற்கை ஆர்வலர் சார்லஸ் டார்வின் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் உலகம் முழுவதும் இத்தினம் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- அவர் "இயற்கைத் தேர்வு கோட்பாடு" என்ற அவரது படைப்பிற்காக வேண்டி வெகு பிரபலமாக அறியப் பட்டவர் ஆவார்.
- இந்த தினமானது சார்லஸ் டார்வினின் பங்களிப்பைச் சிறப்பித்து அறிவியலைக் கொண்டாடுகிறது.
- இது அவர்களின் அறிவார்ந்த ஆர்வங்களைப் பின்பற்ற மக்களைத் தூண்டுவதும், அறிவியல் வழிமுறைகள் மூலம் உண்மையை ஆராய்ந்திட வேண்டி அவர்களைத் தூண்டச் செய்வதற்குமான ஒரு தினமாகும்.

## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13

- உலகின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள நாடுகளின் மக்களை ஒன்றிணைத்து, பன்முகத் தன்மையை மேம்படுத்துவதற்கும் மேலும் அமைதியான மற்றும் உள்ளார்ந்த வசதிகளை கொண்ட ஒரு உலகத்தை உருவாக்குவதற்கும் உதவும் வானொலியை ஒரு சக்தி வாய்ந்த ஊடகமாக அங்கீகரிப்பதற்காக இந்த தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த தினமானது 2011 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் உறுப்பினர் நாடுகளால் அறிவிக்கப் பட்டு 2012 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் சர்வதேச தினமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## இந்திய தேசிய மகளிர் தினம் - பிப்ரவரி 13




- சரோஜினி நாயுடு அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு நமது தேசம் அவரின் 143வது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது.
- இவர் 1879 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் ஆண்டில் பிறந்தார்.
- இவர் தனது கவிதைகளால் 'இந்தியாவின் நைட்டிங்கேல்' அல்லது 'பாரத் கோகிலா' என்ற புனைப் பெயர்களால் வெகு பிரபலமாக அறியப்பட்டார்.
- இவர் இலக்கியத்திற்கான அவரது பங்களிப்புகளுக்காக வேண்டி உலகம் முழுவதும் நன்கு பிரபலமாக அறியப்பட்டவர் ஆவார்.

## சர்வதேச வலிப்பு நோய் தினம் 2022 - பிப்ரவரி 14

- சர்வதேச வலிப்பு நோய் தினமானது ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமை அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், சர்வதேச வலிப்பு நோய் தினம் பிப்ரவரி 14 அன்று அனுசரிக்கப் பட்டது.
- வலிப்பு நோய் பற்றிய உண்மைத் தகவல்களைப் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தி இந்த நோய் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவது மற்றும் மேம்பட்ட சிகிச்சை, சிறந்த கவனிப்பு மற்றும் இந்த நோய் பற்றிய ஆராய்ச்சியில் அதிக முதலீடு ஆகியவற்றின் அவசியம் குறித்துப் பொதுமக்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை சர்வதேச வலிப்பு நோய் தினத்தின் நோக்கமாகும்.

## சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் தினம் – பிப்ரவரி 15

- இத்தினமானது குழந்தைப் பருவ புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்யவும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர், புற்றுநோயிலிருந்து மீண்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவை தெரிவிப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும் ஒரு உலகளாவியப் பிரச்சாரமாகும்.
- இந்த வருடாந்திர நிகழ்வானது 2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- சர்வதேச குழந்தைப்பருவத் தொற்றுநோய் அமைப்பு, புற்றுநோயிலிருந்து மீண்ட குழந்தைகளுக்கான சங்கங்கள், குழந்தைப் பருவ புற்றுநோய்க்கு ஆதரவு வழங்கும் குழுமங்கள் மற்றும் புற்றுநோய்ச் சமூகங்களால் இத்தினமானது உருவாக்கப்பட்டது.

## மண் வள ஆரோக்கிய அட்டை தினம் - பிப்ரவரி 19




- ❖ இந்தியாவில் மண் வள ஆரோக்கிய அட்டை என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதை நினைவு கூரவும், இந்தத் திட்டத்தின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்யவும் வேண்டி ஒவ்வோர் ஆண்டும் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டானது மண் வள ஆரோக்கிய அட்டைத் திட்டம் தொடங்கப் பட்ட ஏழாவது ஆண்டைக் குறிக்கிறது.
- ❖ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து விவசாயிகளுக்கும் மண் வள ஆரோக்கிய அட்டைகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- ❖ பிரதமர் நரேந்திர மோடி, 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று ராஜஸ்தானில் உள்ள சூரத்கரில் மண் வள ஆரோக்கிய அட்டை திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

## உலக எறும்புத் திண்ணி தினம் 2022 - பிப்ரவரி 19

- ❖ இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் "பிப்ரவரி மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமை" அன்று கொண்டாடப்படுகிறது.
- ❖ 2022 ஆம் ஆண்டில், வருடாந்திர உலகப் பாங்கோலின் (Pangolin - எறும்புத் திண்ணி) தினம் பிப்ரவரி 19 அன்று கொண்டாடப்படுகிறது.
- ❖ இது 11வது உலக எறும்புத் திண்ணி தினமாகும்.
- ❖ இந்த தனித்துவமானப் பாலூட்டிகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவற்றிற்கான பாதுகாப்பு முயற்சிகளை விரைவுபடுத்துவதையும் இந்த தினம் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் பாங்கோலின் (எறும்புத் திண்ணி) எண்ணிக்கை வேகமாக குறைந்து வருகிறது.
- ❖ செதில்களால் மூடப்பட்டிருக்கும் தோலைக் கொண்ட ஒரே பாலூட்டி பாங்கோலின்கள் ஆகும்.



## உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20




- சர்வதேச தொழிலாளர் அமைப்பானது, 2008 ஆம் ஆண்டு ஜூன் 10 அன்று ஒரு நியாயமான உலகமயமாக்கலுக்காக, சமூக நீதிக்கான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரகடனத்தை ஒரு மனதாக ஏற்றுக் கொண்டது.
- சமூக நீதி என்பது நாட்டினுள் மற்றும் நாடுகளுக்கு இடையே நிலவ வேண்டிய அமைதியான மற்றும் வளமான சகவாழ்வுக்கான ஒரு அடிப்படைக் கொள்கையாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "முறையான வேலைவாய்ப்பு மூலம் சமூக நீதியை அடைதல்" என்பதாகும்.

## அருணாச்சலப் பிரதேச மாநில நிறுவன தினம் – பிப்ரவரி 20

- அருணாச்சலப் பிரதேசமானது 1987 ஆம் அண்டு பிப்ரவரி 20 அன்று முழு அளவிலான மாநிலமாக மாறியது.
- 1972 ஆம் ஆண்டு வரை, இது வடகிழக்கு எல்லைப்புற அமைப்பாகவே அறியப்பட்டது.
- 1972 ஆம் ஆண்டு ஜனவரி 20 அன்று அதற்கு ஒன்றியப் பிரதேச தகுதி நிலை வழங்கப் பட்டு அருணாச்சலப் பிரதேசம் என மறுபெயரிடப்பட்டது.




## மிசோரம் நிறுவன தினம் – பிப்ரவரி 20

- மிசோரமானது 1971 ஆம் ஆண்டு வடகிழக்குப் பகுதிகள் (மறுசீரமைப்பு) சட்டத்தின் கீழ் 1972 ஆம் ஆண்டில் தனி ஒன்றியப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது.
- இது இந்திய அரசியலமைப்பின் 53வது திருத்தச் சட்டத்திற்குப் பிறகு இந்தியாவின் 23வது மாநிலமாக ஆனது.
- மிசோரம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியவை 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று மாநிலங்களாக அறிவிக்கப்பட்டன.




## சர்வதேச தாய்மொழி தினம் – பிப்ரவரி 21

- இத்தினமானது மொழி மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை பற்றிய விழிப்புணர்வை பரப்புதல் மற்றும் பன்மொழித்துவத்தினை மேம்படுத்துதல் போன்றவற்றை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பன்மொழியைக் கற்பதற்கு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல்; சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" (Using technology for multilingual learning: Challenges and opportunities) என்பதாகும்.
- இந்தத் தினமானது 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் பொது மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தில் இத்தினத்தின் அறிவிப்பினை வரவேற்று ஏற்றுக் கொண்டது.




## உலக சாரணர் தினம் – பிப்ரவரி 22

- இது சாரண இயக்கத்தை நிறுவிய ராபர்ட் பேடன் – பவுல் என்பவரின் பிறந்த நாளாகும்.
- மேலும் இந்தத் தினம் இவரது மனைவி ஒலேவே பேடன் – பவுல் என்பவருடைய பிறந்த நாளும் ஆகும்.
- இத்தினமானது உலக சிந்தனை தினமாகவும் அனுசரிக்கப்படுகிறது.




## உலக சிந்தனை தினம் - பிப்ரவரி 22

- இந்தத் தினமானது உலகம் முழுவதும் உள்ள அனைத்துச் சாரணியர்கள், மகளிர் வழிகாட்டிகள் மற்றும் பிற மகளிர் குழுக்களால் கொண்டாடப்படுகிறது.

- இத்தினமானது உலகம் முழுவதும் உள்ள தனது சக சகோதர சகோதரியர் பற்றி சிந்திக்கவும் அவர்களது இன்னல்களைத் தீர்ப்பதற்கு வேண்டி வழிகாட்டுதலின் ஒரு உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளச் செய்வதற்காகவும் வேண்டி அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "நமது உலகம், நமது சமமான எதிர்காலம்" (Our World, Our Equal Future) என்பதாகும்.




## மத்திய கலால்வரி தினம் – பிப்ரவரி 24

- இந்திய நாட்டிற்கு மத்திய கலால்வரி மற்றும் சுங்கவரி வாரியம் ஆற்றும் சேவைகளை கௌரவிப்பதற்காக இத்தினமானது அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- 1944 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 அன்று மத்திய கலால் மற்றும் உப்புச் சட்டம் இயற்றப் பட்டதை நினைவு கூறும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## உலக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தினம் – பிப்ரவரி 27

- அரசு சாரா நிறுவனங்கள் அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக செயல்படுகின்றன.
- இது அரசு மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்களை அங்கீகரித்து, கொண்டாடி, கௌரவிப்பதற்காகவும், சமூகத்தை வாழ்வதற்கு சிறந்த இடமாக மாற்றுவதில் தங்கள் நேரத்தையும் முயற்சியையும் அதற்குப் பங்களிப்பவர்களையும் அங்கீகரித்திடச் செய்வதற்காகவும் வேண்டி அனுசரிக்கப் படும் ஒரு சர்வதேச தினமாகும்.

## தேசிய புரத தினம் – பிப்ரவரி 27

- மக்களிடையே புரதச் சத்து குறைபாட்டைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெரு நுண்ணூட்டச் சத்துக்களை மக்கள் தங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளவதை ஊக்குவிப்பதற்காகவும் வேண்டி இந்த தினமானது கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டின் இந்திய புரத தினத்தின் கருத்துரு, 'Food Futurism' என்பதாகும்.
- இந்த தினமானது 2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 அன்று தொடங்கப்பட்டது.

## உலக நிலையான ஆற்றல் தினம் – பிப்ரவரி 27

- கட்டிடங்கள், தொழில்துறை மற்றும் போக்குவரத்துக்கான ஆற்றல் திறன் மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரங்களை உள்ளடக்கிய நிலையான ஆற்றல் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஒரு மையமாகக் கொண்ட நிகழ்வுகள் இத்தினத்தில் நடத்தப் படுகின்றன.
- உலக நிலையான ஆற்றல் தினத்தின் கருத்துரு, 'ஆற்றல் மாற்றம் - முழு வேகத்தில் முன்னோக்கிய நகர்வு' (Energy transition – full speed ahead!) என்பதாகும்.




## தேசிய அறிவியல் தினம் – பிப்ரவரி 28

- இந்த நாளில் தான், சர் சிவி ராமன் அவர்கள் ராமன் விளைவைக் கண்டுபிடித்ததாக அறிவித்தார்.
- இந்தக் கண்டுபிடிப்பிற்காக வேண்டி இவருக்கு 1930 ஆம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப் பட்டது.
- இந்திய அரசானது 1986 ஆம் ஆண்டில், பிப்ரவரி 28 ஆம் தேதியைத் தேசிய அறிவியல் தினமாக அறிவித்தது.
- 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய அறிவியல் தினத்தின் கருத்துரு 'நிலையான எதிர் காலத்திற்காக வேண்டி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்த ஒரு அணுகுமுறை' என்பதாகும்.



## அரிய நோய்கள் தினம் 2022 – பிப்ரவரி 28

- அரிய நோய்கள் தினம் என்பது பிப்ரவரி மாதத்தின் கடைசி நாளில் அனுசரிக்கப் படுகிறது.
- இது அரிதான நோய்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் மற்றும் அரிதான நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ உதவியையும் மருத்துவச் சிகிச்சையினை அணுகுவதற்கான வசதியையும் மேம்படுத்துவதற்காகவும் அனுசரிக்கப்படுகிறது.
- அரிய நோய்களுக்கான ஐரோப்பிய அமைப்பானது 2008 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★